# கோபுரம்

தகவல் இதழ், பங்குனி - 1999




கொள்ளுப்பிட்டி அஸ்ரல் கட்டிடம், 9ம் மாடி ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலய அமைவிடத் தோற்றமும் தேர்த்திருவிழாக் காட்சியும்


இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி, பொங்கல் விழாக்காட்சிகள்



கண்டி அசோகா வித்தியாலய அதிபர் திரு. என். நடராஜா குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கிறார் – கண்டி இந்து மாமன்றத் தலைவர் திரு. துரைசாமிப்பிள்ளை, உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் ஆகியோரும் உடன் உள்ளனர்



திரு. துரைசாமிப்பிள்ளை உரை நிகழ்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோபுரம்

மலர் - 10

இதழ் - 1

1999

வெகுதானிய வருடம்

பங்குனி மாதம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

கோபுரம் இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.

## உள்ளே....

- திணைக்களச் செய்திகள்
- இளையோரின் ஆளுமை வளர்ச்சி - சில சிந்தனைகள்
- திருத்தலப்பெருமை
- உண்ணும் உணவு உனக்காம்!
- யார் சைவ சமயி?
- துக்கச் சுமை குறைய வழி!
- பஜனை வழி
- ஆலய வழிபாடு
- மூன்று 'ந' க்கள்!
- ஆண்டவனை நிமிர்த்திய அடியார்
- நல்லோர் இணக்கம்
- நமது உண்மையான இயல்பை உணர்ந்து கொள்வோமா?
- சைவசமயம்
- முகமலர்ச்சியில்லாத விருந்து
- பெரிய புராணம்
- மனம் போல வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## தைப்பொங்கல் கலைவிழா

திணைக்களம், கண்டி மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டி இந்து இளைஞர் மன்றம் என்பன இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய தைப்பொங்கல் கலைவிழா, ஜனவரிமாதம் 16ம் திகதி கண்டி இந்துமாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

மத்தியமாகாண இந்துமாமன்றச் செயலாளர் திரு. க. செல்லமுத்து அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

இந்துமாமன்றத் தலைவர் திரு. அ. துரைசாமிப்பிள்ளை அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து பணிப்பாளர் திரு. எஸ். தில்லைநடராஜா அவர்களின் சிறப்புரை இடம் பெற்றது.

இசையரங்கு நிகழ்ச்சியில், அளவெட்டி திரு. என். கே. பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெற்றது. தொடர்ந்து திருமதி கங்கேஸ்வரி வடிவேல் அவர்களின் நெறியாள்கையில் வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலய மாணவிகளின் நாட்டார் பாடல்கள் இடம் பெற்றன.

நடனவிருந்து நிகழ்ச்சியில் பரதஷேத்ரா நாட்டியாலய ஆசிரியை திருமதி வசந்தகுமாரி சூரியகுமாரன் அவர்களின் நெறியாள்கையில் பரத, கதகளி மாணவியரின் நடனங்கள் இடம் பெற்றன. ஸ்ரீமதி வைஜயந்திமாலா செல்வரட்ணம், குமாரி ரோணி டொமினிக் ஆகியோர் நடனங்களை நெறிப்படுத்தினர்.

கண்டி அசோகா வித்தியாலய அதிபர் திரு. செ. நடராஜா அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.



பரதஷேத்ரா நாட்டியாலய மாணவிகள் வழங்கிய நடன நிகழ்ச்சிகள்

## இலக்கியச் சொற்பொழிவு

திணைக்களம் நடத்தும் இலக்கியச் சொற்பொழிவுத் தொடரின் 18வது உரை பெப்ரவரி மாதம் 6ம் திகதி மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் "சங்ககால இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்" எனும் பொருளில், அருள்மொழியரசி, திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் உரை நிகழ்த்தினார். உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



பரதஷேத்ரா நாட்டியாலய மாணவிகள் வழங்கிய நடன நிகழ்ச்சிகள்



பார்வையாளர்களில் ஒரு பகுதியினர்.

★ நற்பண்புகளே செல்வங்களில் சிறந்தசெல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா சிவராத்திரி வைபவம்

திணைக்களம், முன்னேஸ்வரம் வடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதர் ஆலயம் என்பன இணைந்து நடத்திய மகாசிவராத்திரி உற்சவ வைபவம், பெப்ரவரி 14ம் திகதி இரவு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. நான்கு சாமமும் விசேட பூஜைகள் இடம் பெற்றன.

நாதஸ்வரக் கச்சேரியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அறிமுகவுரை நிகழ்த்தினார். பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா தொடக்கவுரை நிகழ்த்தினார். "செம்பொன் மேனியர்" எனும் பொருளில் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். முன்னேஸ்வரம் வடிவாம்பிகா வித்தியாலய ஆசிரியர் ராஜிவி சுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் நெறியாள்கையில், மாணவ மாணவியர் திருமுறைப் பாடல்களை இசைத்தனர்.

உடப்பூர், கலாபூஷணம் பெ. சோமஸ்கந்தர் குழுவினரின் வில்லிசையும் இடம் பெற்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில், மேற்படி நிகழ்ச்சிகள் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விபரத்திரட்டினை அனுப்பி விட்டீர்களா ?

திணைக்களத்திற் பதிவு செய்து கொண்டுள்ள, இந்துசமய அமைப்புக்கள் மூலம் இயங்கும், அறநெறிப் பாடசாலைகளின் பூரண விபரங்கள், திணைக்களத்தால் திரட்டப்படுகின்றன.

அறநெறிப்பாடசாலைகளின் இயக்கத்தை நெறிப்படுத்துவதற்கும், சிறப்பாக இயங்கச் செய்வதற்கும், இப்பாடசாலைகளின் விபரங்கள் திரட்டப்பட்டு, திணைக்களத்தில் உரிய கோவைகளில் இடப்படுகின்றன.

விபரத்திரட்டுப் படிவங்கள், எல்லா அறநெறிப் பாடசாலைகளுக்கும் திணைக்களம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை இத்திரட்டினை அனுப்பி வைக்காத, இந்துசமய அமைப்புகள், உடனடியாக இவற்றினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றன.

முறையாக இயங்காத பாடசாலைகளின் பதிவுகள் திணைக்களத்தின் பதிவிலிருந்தும் நீக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

★ பிள்ளைகள் நல்லவர்களாய் வளரவேண்டுமென்றால், பெற்றோர்கள் நல்லவர்களாய் வாழ வேண்டும்.

## அமரர் பண்டாரநாயக்க நினைவு தினம்

இலங்கையின் முன்னாள் பிரதமர், அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களின் 100வது நினைவு தினத்தையொட்டி திணைக்களம் ஏற்பாடு செய்த விசேட பூஜைகள் ஜனவரி 8ம் திகதி காலை 9.30 மணிக்கு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றன.

அத்துடன் மேற்படி நினைவு தினத்தை ஒட்டிய நினைவுச் சொற்பொழிவு ஜனவரிமாதம் 11ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. ஆர். சிவகுருநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற் துறைப் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள், நினைவுச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

திணைக்களப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், உட்பட ஏனைய அலுவலர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## கலாசார சமய அலுவல்கள் அமைச்சின்-இந்து விவகாரங்களுக்கான புதிய மேலதிக செயலாளர்

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின், இந்து விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளராகத் திரு. என். பரம்சோதி அவர்கள் நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த உயர் அதிகாரியான இவர், கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இப்பதவியினைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விசேட பூஜை

இலங்கையின் தேசிய தினத்தையொட்டி விசேட பூஜை நிகழ்ச்சிகள், பெப்ரவரி மாதம் 4ம் திகதி காலை 6.30 மணிக்கு கொழும்பு 2, கொம்பனி வீதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடைபெற்றன.

திணைக்களம் பூஜைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

★ மனிதர்களுடைய நல்ல சுபாவந்தான் உலக நன்மைக்கு ஆதார வித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரியும், பதிவிலக்கமும்

திணைக்களத்தில், இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் அறநெறிப் பாடசாலைகள் என்பன பதிவு செய்யப்பட்டு, பதிவிலக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

திணைக்களத்துடன் மேற்படி அமைப்புகள், தொடர்பு கொள்ளும்போது பதிவிலக்கங்களைத் தவறாது இடுமாறும், முகவரிகளைத் தெளிவாக – மாவட்டத்தின் பெயருடன் குறிப்பிடுமாறும் வேண்டப்படுகின்றன.

அத்துடன், அழைப்பிதழ்கள், கோபுரம் போன்றவற்றைப் பெறுவோர் தமது முகவரி மாற்றங்களை திணைக் களத்திற்கு உடனுக்குடன் அறிவிப்பதன் மூலம், சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் திணைக்களம் அறிவிக்கின்றது.

## கதிர்காம இந்து யாத்திரீகர் விடுதி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால், கதிர்காமத் தலத்தில் இந்து யாத்திரீகர் விடுதி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விடுதியில் யாத்திரீகர்கள் தங்குவதற்கென அறைகளும் மண்டபங்களும் உள்ளன. திணைக்களத்தில், கடமை நாட்களில், இவற்றை விண்ணப்பப்படிவம் மூலம், விண்ணப்பித்து பணம் செலுத்தி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

தனியறைகள், 20 பேர், 30 பேர் தங்கக் கூடிய மண்டபங்கள் என்பன, ஒதுக்கீடு செய்யப்படலாம்.

இவ்விடுதியின் அறை ஒதுக்கீடுகளுக்கு உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் பொறுப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், திறைசேரியின் மூலம் ஒரு கோடி ரூபா, இந்து சமய அறநெறிப்பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றவென கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வொதுக்கீட்டின் மூலம், அறநெறிப்பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு, அலுமாரி, மேசை, கதிரை, பாய்கள் போன்ற தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதற்கான நிதி, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மூலம், மாவட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஊடாக, அறநெறிப்பாடசாலைகளை நடத்தும் இந்து நிறுவன அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இத்தளபாடங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

## நந்திக்கொடிகள்

ஆலயங்களில் நடைபெறும் முக்கிய வைபவங்கள், விழாக்கள் என்பவற்றை நந்திக் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கும் வழமையை, கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் ஊக்குவித்து வருகின்றது.

சங்கத்தின் 45வது நிறைவுவிழாவை ஒட்டி இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நந்திக்கொடிகளை ஆலயங்கள், சமயநிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கு வழங்கிவருவதாக, சங்கத்தின் தலைவர் திரு. சி. தனபாலா அறிவித்துள்ளார்.

நந்திக்கொடிகள் பெற விரும்பும் அமைப்புகள், தலைவர், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் 101/70, கியூ ரோட் கொழும்பு – 2 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

★ கேடுகள் பூமியிலிருந்தும், வானத்தில் இருந்தும் உருவாவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்தரீதியாக திணைக்களச் செயற்பாடுகள் 1999

### மாவட்டங்களில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் கருத்தரங்குகள்

| | | |
|---|---|---|
| 1. | கேகாலை | ஏப்ரல் மாதம் |
| 2. | அம்பாறை | மே மாதம் |
| 3. | கண்டி | ஜுன் மாதம் |
| 4. | மாத்தளை | ஆகஸ்ட் மாதம் |
| 5. | பதுளை | செப்டெம்பர் மாதம் |
| 6. | நுவரெலியா | செப்டெம்பர் மாதம் |

### பண்ணிசை வகுப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | களுத்துறை | ஜுன் மாதம் |
| 2. | புத்தளம் | ஜுன் மாதம் |
| 3. | கேகாலை | ஜுலை மாதம் |

### சைவ சித்தாந்த வகுப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | திருகோணமலை | ஏப்ரல் மாதம் |
| 2. | இரத்தினபுரி | மே மாதம் |

### மாவட்ட கலாசார விழாக்கள்

| | | |
|---|---|---|
| 1. | மட்டக்களப்பு | ஏப்ரல் மாதம் |
| 2. | திருகோணமலை | மே மாதம் |
| 3. | கேகாலை | ஜுலை மாதம் |
| 4. | வவுனியா | ஜுலை மாதம் |
| 5. | மன்னார் | ஆகஸ்ட் மாதம் |

### அருள் நெறி விழா

| | | |
|---|---|---|
| 1. | களுத்துறை | ஆகஸ்ட் மாதம் |
| 2. | திருகோணமலை | ஆகஸ்ட் மாதம் |
| 3. | கொழும்பு | செப்டெம்பர் |

### முத்தமிழ் விழா

| | | |
|---|---|---|
| 1. | கொழும்பு | அக்டோபர் |

### இந்து சமயப் போட்டி

ஆகஸ்ட் மாதம்

மாவட்ட ரீதியான திணைக்களச் செயற்பாடுகளுக்கு திணைக்கள கலாசார உத்தியோகத்தர்கள் பொறுப்பாக உள்ளனர். நிகழ்ச்சிகளில் சிறப்புச் சொற்பொழிவாளர்களும், அவ்வப் பிரதேசங்களைச் சேர்ந்த சொற்பொழிவாளர்கள், கல்விமான்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்து ஆலய பரிபாலன சபைகள், இந்து சமய அமைப்புகள் என்பவற்றால் நிர்வகிக்கப்படும் அறநெறிப்பாடசாலை ஆசியர்களுக்கு திணைக்களத்தின் மூலம் நிகழ்ச்சிகள் தொடர்பாக அறிவிக்கப்படுகின்றன. பத்திரிகைகள், வானொலி மூலமாகவும் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

## ஓய்வு பெற்றனர்

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிகச் செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் (இலங்கை நிர்வாக சேவை) அவர்கள் அண்மையில் தமது பதவியினின்றும் ஓய்வு பெற்றார்.

இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. க. செல்லத்துரை அறுபது அகவை அடைந்ததை அடுத்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

## அட்டைப்படம்

இம்முறை அட்டைப்படத்தில் கொழும்பு 03, கொள்ளுப்பிட்டி ஆர். ஏ. டி மெல் மாவத்தையில் அமைந்துள்ள அஸ்ரல் கட்டிடத்தொகுதியில் 9ம் தளத்திலே கோயில் கொண்டுள்ள ஸ்ரீதேவி கருமாரியம்மன், ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயத்தின் தோற்றம், அமைவிடம், தேர்த்திருவிழாக் காட்சி என்பன இடம்பெறுகின்றன.

விநாயகர், முருகன், வெங்கடாசலபதி, ஆஞ்சநேயர், நவக்கிரகம், பைரவர், நாகர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்தங்களோடு, சபரிமலை ஐயப்ப சுவாமி கோவில் அமைப்புடைய 18 படிகளுடன் கூடிய ஐயப்ப சுவாமி ஆலயத்தோடும் இவ்வாலயம் விளங்குகின்றது.

1993ம் ஆண்டு இவ்வாலயத்தின் நூதன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்துடன் வருடந்தோறும் கும்பாபிஷேக தினத்தில் விஷேட உற்சவ விழாக்கள் இடம்பெறுகின்றன.

அண்மையில் இவ்வாலயத்தின் வருஷாபிஷேக தினமும் தேர்த்திருவிழாவும் மிகச்சிறப்பாக இடம்பெற்றன. இவ்வாலயத்தின் நிருவாகியாகத் திரு. எஸ். செல்வகுமார் அவர்கள் விளங்குகின்றார். பிரதம குருக்களான சிவஸ்ரீ ராம்தேவலோகேஸ்வர குருக்கள், ஆலயக் கிரியைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

படமும் தகவலும் : சிவஸ்ரீ ராம்தேவலோகேஸ்வர குருக்கள்,
ஸ்ரீதேவி கருமாரியம்மன், ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயம், கொள்ளுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலைகளுக்கு நூற்பொதிகள் அன்பளிப்பு

மாவட்டரீதியாக சிறப்பாக இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கு திணைக்களம், நூற்பொதிகளை அன்பளிப்பாக வழங்கி வருகின்றது. இதுவரை கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தொகுதி ஒவ்வொன்றிலும், அறநெறிப்பாடசாலை ஆசிரியர், மாணவர்களுக்கு உசாத்துணை நூல்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பொதியிலும் ஏறத்தாழ ஐயாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் உள்ளன.

ஏனைய மாவட்டங்களுக்கும், காலக்கிரமத்தில் இந்நூற் பொதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில், நூற்தொகுதிகள் பெற்றுள்ள பாடசாலைகளின் பட்டியல் வருமாறு :–

## கொழும்பு

ஸ்ரீ சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை
59, மாளிகாவத்தை,
கொழும்பு – 10.

இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப் பாடசாலை
40, இராமகிருஷ்ண ரோட்,
வெள்ளவத்தை, கொழும்பு – 6.

வடகொழும்பு இந்து பரிபாலன சபை அறநெறிப் பாடசாலை
257, முகத்துவாரம்,
கொழும்பு – 15.

சரசவி இளைஞர் கழக ஐயப்பன் இந்து கழக அ.நெ. பாடசாலை
B - 103, டாக்டர் பாபாபிள்ளை பிளேஸ், கொழும்பு – 14.

ஜெயந்திநகர் அறநெறிப் பாடசாலை
42/8, கன்னாரத்தெரு,
கொழும்பு – 13.

வரதராஜ விநாயகர் அறநெறிப் பாடசாலை
105, கொட்டாஞ்சேனை ரோட்,
கொழும்பு – 13.

தெகிவளை தமிழ்வித்தியாலய அறநெறிப் பாடசாலை
தெகிவளை.

சங்கத்தமிழ் இந்துமன்ற அறநெறிப் பாடசாலை
H-39, நவகம்புர, கொழும்பு – 14.

ஸ்ரீ செல்வவிநாயகர் அறநெறிப் பாடசாலை
வெல்லம்பிட்டிய.

மகா கணபதி அறநெறிப் பாடசாலை
வெல்லம்பிட்டிய.

அம்பாள் அறிவகம்,
2. E. 14 நவகம்புர – 2, வெல்லம்பிட்டிய.

வடகொழும்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை
31ஹ ஹம்சா லேன்
கொழும்பு 15.

தெய்வநெறி அறநெறிப்பாடசாலை
ஹேகித்த, வத்தளை.

விவேகானந்தா சபை அறநெறிப்பாடசாலை
34, விவேகானந்தமேடு
கொழும்பு – 13.

வள்ளுவர் அறநெறிப்பாடசாலை
கதிரானவத்த, மட்டக்குளிய
கொழும்பு – 15.

விபுலானந்த தமிழ் மகா வித்தியாலய அறநெறிப்பாடசாலை
77, வேலுவனறோட், கொழும்பு – 9.

ஸ்ரீ மகா காளியம்மன் திருக்கோவில் அறநெறிப்பாடசாலை
59, பரடைஸ் பிளேஸ், கொழும்பு – 12.

பாரதி அறநெறிப்பாடசாலை
எல்ஸ்டன் கீழ்ப்பிரிவு
புவக்பிட்டிய.

ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை
லபுகம எஸ்டேட், தும்மோதர.

சைவ முன்னேற்றச் சங்க நால்வர் சமய பாடசாலை
107/70 கியூறோட், கொழும்பு – 2.

ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை
7, மயூராபிளேஸ்,
கொழும்பு – 6.

கற்பக விநாயகர் அறநெறிப்பாடசாலை
புதிய களனி பாலம் வீதி, 2ம் நவகம்புர,
வெல்லம்பிட்டிய.

ஆனந்த விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை
தெமட்ட கொட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பஹா

ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை
137, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு

தலாதீவு கருமாரியம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை
தலாதீவு

ஸ்ரீ பூபால விநாயகர் அறநெறிப்பாடசாலை
பேலியகொட

## களுத்துறை

வாணி அறநெறிப்பாடசாலை
றைகம், மே. பி, இங்கிரிய

பாரதி அறநெறிப்பாடசாலை
எல்ல கந்த, ஹொரண

விக்னேஸ்வரா அறநெறிப்பாடசாலை
றைகம் கீ. பி. இங்கிரிய

அஸ்க்வெலிய அறநெறிப்பாடசாலை
பதுரெலிய

கலைவாணி அறநெறிப்பாடசாலை
வோகன் எஸ்டேட் மே.பி,
மத்துகம.

கலைமகள் அறநெறிப்பாடசாலை
குளோடன் எஸ்டேட்,
கொடஹேன.

ஞானசம்பந்தர் அறநெறிப்பாடசாலை
எலதுவ தோட்டம், மத்துகம

கலைவாணி அறநெறிப்பாடசாலை
களு/ மலபட தமிழ் வித்தியாலயம், மத்துகம

சிவசக்தி அறநெறிப்பாடசாலை
அம்பதென்ன எஸ்டேட்,
மத்துகம

ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை
மே/மது/ பள்ளகொட தமிழ் வித்தியாலயம்
நவுத்துடுவ

அபிராமி அறநெறிப்பாடசாலை
அன்னாசிகல பிரிவு,
எலதுவ எஸ்டேட், மத்துகம

அபிராமி அறநெறிப்பாடசாலை
கலஹேன தோட்டம்
புலத்சிங்கள.

ஸ்ரீமுத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை
பெலந்தை தோட்டம்
பதுரெலிய

சுவாமி விபுலானந்தர் அறநெறிப்பாடசாலை
அறப்பலாகந்த தமிழ் வித்தியாலயம்.
தெபுவன

நாவலர் அறநெறிப்பாடசாலை
குடாகங்க, மாகம.

மாணிக்கவாசகர் அறநெறிப்பாடசாலை
சென். மேரிஸ் தமிழ் வித்தியாலயம்
மத்துகம.

சம்பந்தர் அறநெறிப்பாடசாலை
சாந்த ஜோர்ஜ் தமிழ் வித்தியாலயம்
மத்துகம.

இந்து மாமன்ற அறநெறிப்பாடசாலை
கோவில் வீதி
புளத்சிங்கள.

கலைவாணி அறநெறிப்பாடசாலை
மில்லகந்த, புளத்சிங்கள.

கணபதி அறநெறிப்பாடசாலை
யாட்டன்வீட் தோட்டம்
அகலவத்த.

இந்து இளைஞர் மன்றம்
அ/பா, 105, சிறில் டீ
சொய்சா றோட், களுத்துறை.

சிவசக்தி அறநெறிப்பாடசாலை
கருப்பான டிவிசன்
ஹொரண.

## கிளிநொச்சி

சேக்கிழார் அறநெறிப்பாடசாலை
240, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

மகாதேவ ஆச்சிரம அறநெறிப்பாடசாலை
244, மகாதேவ ஆச்சிரமம்
ஸ்கந்தபுரம்.

கரைச்சி இந்து இளைஞர்
பேரவை அறநெறிப்பாடசாலை
முருகன் கோவிலடி
ஸ்கந்தபுரம்.

சைவவித்தியா விருத்திச் சங்கம்
குருகுலம், கரைச்சி
கிளிநொச்சி.

* உபயோகமுறை தெரிந்தால் நஞ்சும் அமுதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திணைக்கள வெளியீடான "இறை இசை ஒலிப்பேழை"

ஆலயங்கள் தோறும் இயங்கும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர், மாணவர் பயன் கருதி, திணைக்களம், திருமுறைகள், அறநெறி கீதம், நாமாவளிகள் அடங்கிய "இறை இசை ஒலிப்பேழை" எனும் ஒலிநாடாவைப் பதிவுசெய்து வெளியிட்டுள்ளது.

இந்த ஒலிநாடாவின் 'அ' பக்கத்தில் மூவர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு திருப்புராணம், திருப்புகழ், "வான்முகில்" எனும் கந்தபுராண வாழ்த்து ஆகியன இடம்பெற்றுள்ளன.

1996ம் ஆண்டு திணைக்களம் கொழும்பில் நடத்திய அருள்நெறிவிழாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட 'அறநெறிக்கீதம்', 'அ' பக்கத்தின் இறுதியில் அமைந்துள்ளது. அறநெறிக்கீதம் பண்டாரவளை, கலாஜோதி, குமார. இராமநாதன் அவர்களால் இயற்றப்பட்டு, கலாபூஷணம், திருமதி ஷாமினி இராமநாதன் அவர்களால் இசையமைக்கப்பட்டதாகும்.

இவ்வொலிநாடாவின் 'ஆ' பக்கத்தில், நாமாவளிகள் இடம்பெற்றுள்ளன. இவ்வொலிநாடாவில், மேல்மாகாண கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர், "பண்ணிசைப்பாவலர் திரு. வி. கணேசலிங்கம், ஊவாமாகாண கல்வித்திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர், 'கலாஜோதி' திரு. குமார இராமநாதன், பண்டாரவளை இந்திய நுண்கலைப்பீட இசையாசிரியை, கலாபூஷணம் திருமதி ஷாமினி இராமநாதன், வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் இசை ஆசிரியைகள் திருமதி சுலோஜனா பாலசுப்பிரமணியம், செல்வி விரோஷினி விஜயரட்ணம், திணைக்கள கலாசார அலுவலர், திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா ஆகியோர் பாடல்களைப் பாடி உள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பக்க வாத்தியக் கலைஞர்களான வயலின் திரு. டி. வி. விநாயகமூர்த்தி, மிருதங்கம், திரு. ஏ. கணேஷசர்மா, புல்லாங்குழல் திரு. குமார லியனவத்த, தபேலா திரு. ஆர். இரட்ணதுரை, தம்புரா திரு. ஏ. கோவிந்தராஜா ஆகியோர் பின்னணி இசை வழங்கியுள்ளனர்.

இவ்வொலிநாடாவின் இசைப்பதிவிற்கான பணிகளை திணைக்கள பிரதிப்பணிப்பாளர், திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் நெறிப்படுத்தலில், கலாசார அலுவலர் திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா, எழுதுநர் திருமதி கீர்நகவல்லி ஈஸ்வரராஜா ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பண்ணொன்ற இசைபயிலவும், பண்ணிசை வளத்தை மேம்படுத்திக் கொள்ளவும் இந்த நாடா உதவும் என்பது திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.

## "சைவ போதினி" நூல் வெளியீடு

கொழும்பு, விவேகானந்த சபை, சைவ மாணாக்கர்களின் நன்மைக்கருதி தொடர்ந்து பல ஆண்டுகளாக 'சைவபோதினி' எனும் நூலை வெளியிட்டு வந்தது. கடந்த சில ஆண்டுகளாக இந்நூல்கள் கிடைப்பதற்கு அரிதாகி விட்டன.

சபையினரின் அங்கீகாரத்துடன், திணைக்களம் இந்நூல்களைப் பதிப்பித்து வெளியிட முன்வந்துள்ளது. இவ்வகையில் 'சைவபோதினி' 4ம், 5ம் நூல்கள் 1998ம் ஆண்டு ஒரு நூலாக அச்சிடப்பட்டுள்ளன. இவை அறநெறிப் பாடசாலைகளுக்கு திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளன.

இந்நூலினைப் பெற விரும்பும் அறநெறிப் பாடசாலைகள், 4, 5ம் வகுப்புக்களிற் பயிலும் மாணவரின் தொகையினை, பாடசாலையினை நடத்தும் நிறுவனத் தலைவர், கற்பிக்கும் ஆசிரியர் ஆகியோரின் உறுதிப்படுத்தற் கடிதத்துடன் திணைக்களத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த ஆண்டு 6ம், 7ம் வகுப்புக்களுக்கான 'சைவபோதினி' நூல்களை ஒரு நூலாக அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளில் சொற்பொழிவுகள்

திணைக்களத்தின் ஏற்பாட்டில், தமிழக ஆய்வறிஞர் பெ. சு. மணி அவர்களின் 'பாரதியாரின் இலக்கிய ஆளுமை' எனும் இலக்கியச் சொற்பொழிவு, மார்ச் மாதம் 9ம் திகதி காலை 10 மணிக்கு, நுகேகொடை தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு. ந. சண்முகராசா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

★★★★★

திணைக்களத்தின் ஏற்பாட்டில் திரு. பெ. சு. மணி அவர்கள், மார்ச் மாதம் 10ம் திகதி கொழும்பு, விவேகானந்த தமிழ் தேசியகல்லூரியில் "விவேகானந்தரின் ஆன்மீகச் சிந்தனைகள்" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார். பாடசாலை அதிபர் திரு. என். சந்தோசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

★ மனிதர் களங்கமற்ற நற்குணசீலராய் வாழ்ந்தால் கலகமும் கலக்கமும் இருக்க மாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சொற்பொழிவு




இலக்கியச் சொற்பொழிவுத் தொடரில், தமிழக ஆய்வியல் அறிஞர், திரு. பெ. சு. மணி அவர்கள் உரை நிகழ்த்துகின்றார். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர். திரு. பி. பி. தேவராஜ், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் இந்து விவகார மேலதிகச் செயலாளர் திரு. என். பரம்சோதி ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர்.






இந்துசமயச் சொற்பொழிவுத் தொடரில், சப்ரகமுவ பல்கலைக்கழகக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் உரை நிகழ்த்துகின்றார். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கொழும்புப் பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர், திரு. சோ. சந்திரசேகரன், உதவிப்பணிப்பாளர், திரு. குமார் வடிவேல் ஆகியோரும் கூட்டத்தினரில் ஒருபகுதியினரும் படத்திற் காணப்படுகின்றனர்.

* துன்பங்களை சகிப்பதற்குரிய மனப்பக்குவம் மிகவும் அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு, மார்ச் மாதம் 13ம் திகதி மத்துகம சென் ஜோர்ஜ் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. டி. சிவகுமார் அவர்களின் பஞ்சபுராணத்தைத் தொடர்ந்து, திரு. எஸ். ரி. சதாசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார்.


உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா தலைமையுரை நிகழ்த்தி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

"ஆலய வழிபாடும் திருவுருவமும்" எனும் பொருளில் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களும் "இதிகாசம் கூறும் அறக்கருத்துக்கள்" எனும் பொருளில் கலாபூஷணம் உடப்பு பி. சோமாஸ்கந்தர் அவர்களும், "நாளாந்த வாழ்வில் சமயம்" எனும் பொருளில், பலாங்கொடை றை/ தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. என். ஜெயராஜ் அவர்களும், "யோகமும், ஆன்மீகமும்" எனும் பொருளில், தமிழ்நாடு யோகாசன ஆசிரியர் திரு. கே. வி. கே. சிவசாமி அவர்களும் விரிவுரைகள் நிகழ்த்தினர். தொடர்ந்து திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஆசிரியர்களின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

சென். ஜோர்ஜ் வித்தியாலய அதிபர். திரு. லிங்கநாதன், பிரதேச பிரமுகர்கள் திரு. பொன் இராமலிங்கம், திரு. எம். சிவகணேசமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கருத்தரங்கிற் பங்குகொண்ட ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கலாசார அலுவலர் திருமதி நிர்மலா கருணானந்தராஜா, அவர்களின் நன்றியுரையுடனும், திரு. என். ஜெயராஜ் அவர்களின் பஞ்சபுராண ஓதலுடனும் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

தொகுப்பு - க. நிர்மலா
*(கலாசார உத்தியோகத்தர்)*



களுத்துறை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கின்போது உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா தலைமை வகித்து உரையாற்றுவதையும், சிறப்புரைகள் நிகழ்த்திய தமிழக யோகாசன ஆசிரியர் திரு. கே. சிவசாமி, பலாங்கொடை றை வித்தியாலய அதிபர் திரு. ஜெயராஜ், அருள்மொழியரசி, திருமதி. வசந்தா வைத்தியநாதன், களுத்துறை மாவட்ட அமைப்பாளர் திரு. எஸ். டி. சதாசிவம், ஆகியோரையும் கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.



★ நல்லதாயினும் அது நல்லோர்களிடத்திலிருந்து வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

திணைக்களத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு பெப்ரவரி மாதம் 27ம் திகதி பலாங்கொடை றை/ தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கினை திணைக்களப் பிரதிப்பணிப்பாளர், திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையேற்று நடத்தினார். கலாசார அலுவலர் திருமதி நிர்மலா வரவேற்புரை நிகழ்த்தினார்.

"ஆலயவழிபாடும் திருவுருவங்களின் தத்துவமும்" எனும் பொருளில் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களும் "சமூக ஒருமைப்பாட்டில் ஆசிரியர்களின் பங்கு" எனும் பொருளில் சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர், திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களும், "புருடார்த்தங்கள்" எனும் தலைப்பில் றை/ தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு. என். ஜெயராஜ் அவர்களும், "இறைவழிபாடும் பிரார்த்தனையும்" எனும் தலைப்பில், உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதாம்பிகை சண்முகநாதன் அவர்களும், விரிவுரைகள் நிகழ்த்தினர். தொடர்ந்து, உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்களின் தலைமையில், பங்கு கொண்ட ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. ஆசிரியர்களின் சந்தேகங்களுக்கு திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள், விளக்கமளித்தார்.

நிறைவாக, திணைக்களத்தின் வெளியீடான "இறை இசை ஒலிப்பேழை" எனும் ஒலிநாடா, சான்றிதழ் என்பன பங்குகொண்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.



திணைக்களத்தின் மூலம், அறநெறிப் பாடசாலைகளுக்கு நூற்தொகுதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கடந்த ஜனவரி 2ம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கொழும்பு மாவட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு நூற் தொகுதிகள் வழங்கப்பட்டபோது, பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், சம்பிரதாய பூர்வமாக நவகளனிபுர ஸ்ரீசெல்வவிநாயகர் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளர் திரு. இரா. சந்திரன் அவர்களுக்கு நூலைக் கையளிக்கின்றார். படத்தில், முன்னாள் மேலதிகச் செயலாளர், திருமதி ஆர். கைலாசநாதன், பணிப்பாளர், திரு எஸ். தில்லை நடராஜா, உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா, கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா, எழுதுநர் திருமதி ஈஸ்வரராஜா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

★ தர்மத்திற்கு இருக்கும் அதே ஆயுள் அதர்மத்திற்கும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு மார்ச் மாதம் 7ம் திகதி திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

தொடக்கத்தில் இறைபணிச் செம்மல் காந்தி ஐயா அவர்கள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். கலாசார உத்தியோகத்தர் திரு. சி. மகேந்திரராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தமிழக ஆய்வாளரும், சிறந்த பேச்சாளருமான அறிஞர் பெ. சு. மணி அவர்கள் "இளையவர் மத்தியில் சமய அறிவைப் போதித்தல்" என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடகிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் கலாசார உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் சிறப்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, ஓய்வுபெற்ற கல்விச்சேவை ஆலோசகர் திருமதி. சி. பத்மநாதன் "அறநெறிக் கல்வியைப் போதிப்பதில் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய பயிற்சியும், செயல் திறனும்" எனும் தலைப்பிலும், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. பரசுராமன் "அடியார்கள் கண்ட அன்பு நெறி" எனும் தலைப்பிலும் ஞானசிரோன்மணி, பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் "இந்துசமய வாழ்க்கை நெறியில் விரதங்களினதும், விழாக்களினதும் முக்கியத்துவம்" எனும் தலைப்பிலும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

விரிவுரைகளைத் தொடர்ந்து கலந்துகொண்ட ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி இடம்பெற்றது. கலாசார அலுவலர் திரு. சி. மகேந்திரராஜா கருத்தரங்கு நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

அன்றைய தினம் திணைக்களம் 1996 ஆம் ஆண்டு நடத்திய இந்துசமயப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் நிறைவாக திருமலை ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் செயலாளர் திரு. ந. செல்வஜோதி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

தொகுப்பு: சி. மகேந்திரராஜா
(கலாசார உத்தியோகத்தர்)

# துறவறம்

துறவி ஒரு தராசைப்போல இருக்கவேண்டும். தராசுக்கு தங்கமும் ஈயமும் ஒன்று தான். அது தன் கடமையைச் செய்கிறது. அதற்கு பேதம் தெரியாது. சமத்துவத்தைப் போதிக்கிறது. அதன் நிலைபோல் துறவி இருக்கவேண்டும். ஒருமுறை சங்கரபகவத் பாதர் பாதயாத்திரை மேற்கொண்டு போகும் போது அவரின் சீடர்களும் அவரைப் பின்பற்றிச் சென்றனர். வழியில் பகவத்பாதரவர்கட்குத் தாகம் வந்தது. வழியில் ஒரு கள்ளுக்கடையைக் கண்டார். அதைக் கண்டதும் தனது பிட்சா பாத்திரத்தை நீட்டினார். கடைக்காரன் உடனேஅவரது பிட்சா பாத்திரத்தில் கள்ளை ஊற்றவும் அதைக் குடித்தார். அதை அவதானித்த சீடர்களும் பாத்திரத்தை நீட்டி அவர்களும் குடித்தனர். குருவே பருகும் போது நாமும் குடித்தாலென்ன என நினைத்தனர்.

ஆச்சாரியவர்கட்கு இவர்கள் எண்ணம் புரிந்தது. நீண்டதூரம் நடந்து சென்றபோது அவருக்குப் பின்னரும் தாகம் உண்டானது. சுற்று முற்றும் பார்த்தார். அங்கே ஒரு இரும்புப்பட்டறையில் ஈயம் காய்ச்சி ஊற்றியபடி இருந்தார்கள். அதைக்கண்ட ஆச்சார்யசுவாமிகள் அங்கும் தன் பிட்சாபாத்திரத்தை நீட்டினார். உடனே அங்கு நின்ற தொழிலாளி காய்ச்சி ஊற்றிக் கொண்டிருந்த ஈயத்தை அவரின் பிட்சாபாத்திரத்தில் ஊற்றினான். அதை வாங்கிய பகவத்பாதர் அதையும் உடனே பருகினார். இதைக்கண்ட சீடர்கள் திடுக்கிட்டு நின்றனர். உடனே தங்கள் தவறுக்கு அவரிடம் மன்னிப்புக் கேட்டனர். குருவின் பற்றற்ற சீரிய துறவறத்தை அப்போதுதான் உணர்ந்தனர்.

தொகுப்பு: ச. இரா. பாலகிருஷ்ண ஐயர்
நாரங்கல, ஹாலி எல.

★ நீந்திப்பழகுவதால் உடல் வலுவடைவது போன்று வாழ்க்கையில் வரும் கஷ்டங்களை எதிர்த்துப் போராடுவதால் மனம் வலுவடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம், குருநாகல் மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

புத்தளம், குருநாகல் மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு 1999 மார்ச் மாதம் 27ம் திகதி முன்னேஸ்வரம், ஸ்ரீ வடிவாம்பிகை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கலாசார அதிகாரி பெ. வடிவேலனின் வரவேற்புரையோடு ஆரம்பமாகிய இக்கருத்தரங்கிற்கு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா தலைமை தாங்கினார். கருத்தரங்கின் முதல் அம்சமாக முன்னேஸ்வரம் வடிவாம்பிகை தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்றது. இதனைப் பாடசாலை அதிபர் திரு. இ. அழகேசன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

தலைமையுரையாற்றிய உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா வடமேல் மாகாணம் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களை உள்ளடக்கிய தனிப் புவியியல் பிரதேசமாக நம் இலங்கை திருநாட்டில் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பகுதியில் விளங்கும் அறநெறிப் பாடசாலைகள் தம் சூழலுக்கேற்ப சமய பாடங்களை கற்பித்தலுடன் செயல்திட்டங்களையும் அமைத்து கற்பிக்க வேண்டும் என்றார்.

திருமதி ஹேமா சண்முக சர்மா 'இறை வழிபாடும் பிரார்த்தனையும்' என்ற பொருளிலும், மாத்தளை கல்வித் திணைக்கள உதவிக்கல்விப்பணிப்பாளரான திரு. என். அருளானந்தம் 'சமூக ஒருமைப்பாட்டில் ஆசிரியர்களின் பங்கு' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்.

தமிழக பேராசிரியர் திரு. கே. வி. கே. சிவசாமி 'ஆசனமும் பிரார்த்தனையும்' என்ற தலைப்பிலும், 'நடைமுறை வாழ்வில் சமய தத்துவங்கள்' என்ற மகுடத்தில் அருள்மொழியரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதனும் விரிவுரை ஆற்றினர்.

அறநெறிப் பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கு சமய நூல்களும், இறை இசை ஒலிப்பேழைகளும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான பாடநூல்களும் வரவு இடாப்புக்களும் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் மாவத்தகம தோட்டப் பகுதிகளில் நடைபெறுகின்ற அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## நம்பிக்கை

நமது வாழ்க்கை முழுவதுமே ஒரு நம்பிக்கையில் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. குழந்தையை மடியில் வைத்துக் கொண்டிருக்கும் தாய் அதற்கு, "இதோ உன் தந்தையைப் பார்!" என்று அடையாளம் காட்டுகிறாள். குழந்தை அதை நம்ப மறுத்தால் அதற்குத் தன் தந்தை யார் என்று தெரிந்து கொள்ள வாய்ப்பே இலலாமற் போய்விடும். இதேபோல, இயற்கை தன்னுள் எத்தனையோ இரகசியங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது. அவற்றை மனிதன் புரிந்து கொள்ள மறுக்கிறான். ஏனென்றால், அதன் சக்தியில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. புண்ணிய நதிகளிலும், புண்ணிய தீர்த்தங்களிலும் நன்மையைப் பெறுவதற்காகத்தான். கத்தி வைத்திருக்கிறான் என்பதற்காக நாவிதனிடமிருந்து நாம் பயந்து ஓடுவதில்லை. அவனை நம்பித்தான் தலையைக் கொடுக்கிறோம். விலையுயர்ந்த துணிமணிகளை ஏழையான வண்ணானிடம் போட நாம் தயங்குவதில்லை. அதற்கும் அவனிடம் நாம் வைத்திருக்கும் நம்பிக்கைதான் காரணம்.

சாதாரண வாழ்க்கை முறையிலேயே இவ்வாறு நம்பிக்கை முக்கியமான இடத்தைப் பெறும்போது இறைவனிடம் பக்தி செலுத்தும் முக்கியமான காரியத்துக்கு நம்பிக்கை மிகவும் அவசியம் அல்லவா? அப்படி நம்பாவிட்டால் பலன் கிடைக்காது. நமது முன்னோர்கள் இப்படிப்பட்ட கடவுள் நம்பிக்கையால், மனிதன் சாதிக்க முடியாத பலவற்றையும் சாதித்திருக்கிறார்கள். இன்றும் மிகப்பெரிய மருத்துவ நிபுணர்களும், நோயின் சிக்கல் தங்களுடைய வல்லமையை மீறியதாக இருந்தால், கடவுள் மீது நம்பிக்கை வைக்கும்படி தான் யோசனை சொல்லுகிறார்கள். இது எல்லா மனோதத்துவ நிபுணர்களாலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது; எல்லா மதத்தினராலும் பினபற்றப்படுகிறது.

ஸ்ரீ சத்யசாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் சைவ சித்தாந்த வகுப்புகள்

திணைக்களத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் சைவ சித்தாந்த வகுப்புகள் மார்ச் மாதம் 27ம் 28ம் திகதிகளில் நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நடைபெற்றன.

திணைக்கள உதவிப் பணிப்பளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. ஜெ. விஸ்வநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா ஆசியுரை வழங்கினார்.

இரு தினங்களும் நான்கு அமர்வுகளாக உரைகள் இடம் பெற்றன. 'சைவ சித்தாந்தமும் வேதாந்தமும்' எனும் பொருளில் சுவாமி அஜராத்மானந்தா அவர்களும், 'சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள்' எனும் பொருளில் திருமதி பாக்கியரத்தினம் ஆறுமுகம் அவர்களும், 'மெய்கண்ட சாஸ்திரமும் சந்தான ஆசிரியர்களும்' எனும் பொருளில் சைவப்புலவர் எஸ். தில்லைநாதன் அவர்களும் குரு லிங்க சங்கம வழிபாடு' எனும் பொருளில் சைவப்புலவர் எஸ். சாந்தலிங்கம் அவர்களும், 'புராண இதிகாசங்கள் காட்டும் சைவ சித்தாந்தப் பொருள்' எனும் பொருளில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. உமாமகேஸ்வரன் அவர்களும் 'சித்தாந்த வேதாந்த விளக்கம்' எனும் பொருளில் விஸ்வப் பிரம்மஸ்ரீ வை. இ. எஸ். காந்தன் குருக்கள் அவர்களும், 'தேவார திருவாசகங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்' எனும் பொருளில் சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் அவர்களும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

ஒவ்வொரு விரிவுரையின் முடிவிலும் கலந்துகொணட ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. தொடர்ந்து இப்பிரதேசத்தில் சைவ சித்தாந்த வகுப்புகளை கிரமமாக நடத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இரு நாள் நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி . க. தங்கேஸ்வரி அவர்கள் மேற்கொண்டிருந்தார்.





மட்டக்களப்பில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சைவசித்தாந்த வகுப்பு நிகழ்ச்சியில் மாவட்ட நீதிபதி திரு. ஜெ. விஸ்வநாதன், சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் பங்குகொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் இந்து சமயப் பேருரைகள்

திணைக்களத்தின் அனுசரணையோடு சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் அவர்களின் இந்து சமயப் பேருரைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றன.

1999 மார்ச் 26ம் திகதி ஆனைப்பந்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. ம. சச்சிதானந்தம் அவர்கள் தலைமையில் 'விநாயக தத்துவமும் வாழ்க்கை விழுமியங்களும்' எனும் பொருளில் திரு. செ. குணபாலசிங்கம் அவர்கள் உரை நிகழ்த்தினார். 27ம் திகதி கல்லடி உப்போடை விநாயகர் ஆலயத்தில் 'பெரிய புராணத்தில் இலக்கிய நயம்' எனும் பொருளில் அவரது உரை இடம்பெற்றது. ஆலய அறங்காவலர் சபையினரும், முகாமைத் தலைவர் கே. ஒ. பி. கதிர்காமத்தம்பி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

28ம் திகதி தாமரைக்கேணி மாரியம்மன் ஆலயத்தில் விஸ்வப்பிரம்மஸ்ரீ காந்தன் குருக்கள் அவர்கள் தலைமையில் 'சக்தி வழிபாடு' எனும் பொருளில் உரை இடம்பெற்றது.

29ம் திகதி வின்சன் மகளிர் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி சுபா சக்கரவர்த்தி அவர்கள் தலைமையில் 'பாரதியின் தெய்வீகக் கருத்துக்களும் மனித குல மேம்பாடும்' எனும் பொருளில் திரு. குணபாலசிங்கம் உரை நிகழ்த்தினார். நகரின் பல பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரிய, ஆசிரியைகளும் உயர் வகுப்பு மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி க. தங்கேஸ்வரி அவர்களின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சிகளுக்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், மாவட்ட நீதிபதி திரு. ஜெ. விஸ்வநாதன், எழுத்தாளர் இரா. நாகலிங்கம் (அன்புமணி) உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

தொகுப்பு : க. தங்கேஸ்வரி

*கலாசார உத்தியோகத்தர்.*



ஆனைப்பந்தி விநாயகர் ஆலயத்தில் சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், கலாசார உத்தியோகத்தர் செல்வி க. தங்கேஸ்வரி, ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. ம. சச்சிதானந்தம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தலப் பெருமை

எஸ். தெய்வநாயகம்
உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)

திருத்தலங்கள் புனிதத்தன்மை பெற்று விளங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. இறைவனின் அருளற்புத நிகழ்ச்சிகள், பெரியோர்கள் தோன்றி திருவருள் பெற்றமை, ஞானியர் முத்திநிலை எய்தியமை காரணமாக இவை புனிதத்தன்மை மிகுந்தனவாகத் திகழ்கின்றன.

## பாடல் பெற்ற தலங்கள்

சைவசமயத்திற்கு அழியாத நிலைக்களனாக உள்ளவை திருக்கோயில்களே. அவற்றுள் பாடல் பெற்றவை 274 திருக்கோயில்களாகும். இவை பாடல் பெற்ற பெருமை கொண்டு புனிதம் மிக்கவையாக விளங்குகின்றன. தேவாரம் பாடியோர் சம்பந்தர், அப்பர், சுந்தரர் எனும் மூவருமாவர். இம்மூவரில் ஒருவரோ, இருவரோ, மூவருமோ பதிகம் பாடிப் பரவிய திருக்கோயில்களே பாடல் பெற்ற தலங்கள் என்று போற்றப்பெற்று வருகின்றன. இவை தேவாரப் பதிகம் பாடிய மூவரால் தனிப் பெருமையும், இறைவனின் அருளற்புத நிகழ்ச்சிகளால் பெருமையும் பெற்று விளங்குவன.

## சப்தஸ்நான தலங்கள்

நீராடுவதற்குரிய புண்ணிய தீர்த்தங்கள் ஏழு. திருவையாறு, திருப்பழமை, திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய தலங்களாகும்.

## காசிக்குச் சமமான தலங்கள்

திருவெண்காடு, திருவையாறு, மாயூரம், திருவிடை மருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம்.

## பஞ்சபூதத் தலங்கள்

திருவாரூர் அல்லது காஞ்சிபுரம் பிருதிவி அதாவது மண் தலம், திருவண்ணாமலை தேயு(த்)தலம், திருவானைக்கா அப்பு(நீர்)தலம், திருக்காளத்தி(வாயு) காற்று தலம் சிதம்பரம் – ஆகாயம் (வெளி) தலம்.

## பஞ்ச சபைத்தலங்கள்

திருவாலங்காடு – இரத்தின சபை, சிதம்பரம் – கனகசபை (பொன்னம்பலம்), மதுரை – இரஜத சபை (வெள்ளியம்பலம்), திருநெல்வேலி – தாமிர சபை, திருக்குற்றாலம் – சித்திரை சபை.

## அட்ட வீரட்ட தலங்கள்

சிவபிரான் எட்டு வீரச்செயல்கள் புரிந்தருளிய தலங்கள், திருக்கண்டியூர், பிரமன் சிரம் கொய்தது, திருக்கோவிலூர் – அந்தகாசுரனைச் சங்கரித்தது, திருவதிகை திரிபுரத்தை எரித்தது. திருப்பறியலூர் – தக்கன் சிரம் கொய்தது, திருவிற்குடி – சலந்தாசுரனைச் சங்கரித்தது, வழுவூர் (வைப்புத்தலம்) – யானையை உரித்தது, திருக்குறுக்கை – காமனை எரித்தது, திருக்கடவூர் – இயமனை உதைத்தது.

## வைப்புத் தலங்கள்

தேவாரப்பதிகம் பெற்ற தலங்கள் பாடல் பெற்றவையாக விளங்க தேவாரம் அருளிச்செய்த மூவரில் எவராலும் பதிகம் பாடிப் போற்றப்பெறாமல், தேவார பாசுரங்களில் – பாட்டுக்களில் பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற தலங்களை 'வைப்புத் தலங்கள்' என்று கூறுவார்கள். இவ்வாறு வைப்புத் தலங்களாக அமைந்து விளங்கும் திருக்கோயில்கள் 280 ஆகும்.

## திவ்ய தேசங்கள்

பாடல்பெற்ற தலங்கள் எனப் போற்றப்படுகின்ற திருக்கோயில்களும், வைப்புத் தலங்கள் எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கப்படுகின்ற திருக்கோயில்களும் சிவாலயங்களாகும். திவ்விய தேசங்கள் எனக் குறித்துப் போற்றப்பெறுபவை திருமால் திருக்கோயில்களாகும். ஆழ்வார்களின் பாசுரங்களில் போற்றிப் பாடப் பெற்ற திருமால் திருக்கோயில்களை "ஆழ்வார்களால் மங்களாசனம்" பெற்ற திவ்ய தேசங்கள் என்று கூறுவார்கள். இவ்வாறு அமைந்து விளங்குகின்ற திவ்விய தேசங்கள், திருமால் கோயில்கள் 108 ஆகும்.

## திருப்புகழ்த் தலங்கள்

அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ்ப் பாடல்கள் பாடிப் போற்றப்பெற்ற முருகக் கடவுளின் திருக்கோயில்கள் திருப்புகழ் தலங்கள் என்று கூறிப் போற்றப்பெறுகின்றன. திருப்புகழ் பாடப்பெற்ற முருகன் திருக்கோயில்கள் 106 ஆகும். இவை திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றுள்ளதால் தனிப்பெருமை கொண்டு விளங்குகின்றன.

## சக்திதேவி விசேடத் தலங்கள்

| | |
|---|---|
| திருவண்ணாமலை | – உண்ணாமுலையம்மை |
| அவினாசி | – கருணாம்பிகை |
| திருவாரூத்தூர் | – மூத்தாம்பிகை |
| திருவாரூர் | – கமலாம்பிகை |
| மதுரை | – (மதுரை) மீனாட்சியம்மை |
| திருவானைக்காவல் | – அகிலாண்டேச்வரி |
| திருவையாறு | – அறம்வளர்த்த நாயகி |
| திருவொற்றியூர் | – வடிவுடையம்மை |
| காஞ்சிபுரம் | – காமாட்சியம்மை |
| திருக்காளத்தி | – ஞானப்பூங்கோதையம்மை |
| திருக்கழுக்குன்றம் | – திரிபுரசுந்தரியம்மை |
| குடந்தை | – மங்களநாயகி |
| குற்றாலம் | – குழல்வாய்மொழியம்மை |
| திருச்சிராப்பள்ளி | – மட்டுவார் குழலியம்மை |
| திருநள்ளாறு | – போகமார்த்த பூவை |
| நாகபட்டினம் | – நீலாயதாட்சியம்மை |
| திருநெல்வேலி | – காந்திமதியம்மை |
| திருப்பாதிரிப்புலியூர் | – பெரியநாயகி |
| வைத்தீஸ்வரன் கோயில் | – தையல்நாயகி |
| வேதாரணியம் | – யாழ்பதித்த மொழியம்மை |
| வடதிருமுல்லைவாயில் | – கொடியிடைநாயகி |
| இலங்கையில் திருகோணமலை | – மாதுமையாள் |
| இலங்கையில் திருக்கேதீஸ்வரம் | – கௌரியம்பாள் |
| இலங்கையில் முன்னேஸ்வரம் | – வடிவாம்பிகை |

## 'பிரமாதி' வருடப் பஞ்சாங்கம்

திணைக்களம் வெளியிட்டுள்ள 'பிரமாதி' வருடப் பஞ்சாங்கம் நூல் வடிவில் தற்போது ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவினால் தொகுக்கப்பட்டுள்ள இப்பஞ்சாங்கத்தில் பிரமாதி வருடப் பிறப்பு, பலன், சுபமுகூர்த்தங்கள், மாதபலன்கள், கோசரபலன், விசேட தினங்கள், விரத நாட்கள் ஆகிய விபரங்கள் அடங்கியுள்ளன.

இப்பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் ரூபா 3.50க்குரிய முத்திரையிடப்பட்ட 10" x 5" பெரிய கடித உறையில் தமது சுய முகவரியினை எழுதி "பணிப்பாளர், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், 98, வோட்பிளேஸ், கொழும்பு 7" எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அண்மையில், யாழ்ப்பாணம், கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயத்தின் வைரவிழா இடம்பெற்றது. இவ்விழாவிற்கு, சென்னை, செங்கற்பட்டு இராமகிருஷ்ண மிஷன் செயலாளர், ஸ்ரீமத் சுவாமி, விரூபாக்ஷானந்த மஹராஜ், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா, ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சுவாமி ஆத்மகனாந்தா, வித்தியாலய அதிபர், திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், சுவாமி, விரூபாக்ஷானந்தா, யாழ் மேலதிக அர்ச அதிபரின் பாரியார் திருமதி. ஜெகதீஸ்வரி வைத்திலிங்கம் ஆகியோரையும் இப்படங்களிற் காணலாம்.

படமும், தகவலும்: புலவர் முத்து இராசரத்தினம், கொக்குவில்









அண்மையில், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், திருவாசகப் பேரூற்று சபாரத்தினம் சுவாமிகளின் 11வது குருபூசை நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திருப்பணித் தவமணி திரு. சி. தியாகராஜா தலைமை வகித்தார். திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி நாவுக்கரசன்,சிறப்புரை நிகழ்த்திய திருமதி வசந்தா வைத்தியநாதன், திரு. க. நாகேஸ்வரன், ஆகியோர் வரவேற்கப்படுவதையும், திரு. தியாகராஜா உரை நிகழ்த்துவதையும், திருமதி மணி பத்மநாதன் திருவாசகம் இசைப்பதையும் படத்திற் காணலாம்.

படமும், தகவலும்: எஸ். துரைராஜா, தெகிவளை

★ ஒருவனின் மேன்மையும் தாழ்வும், அவனது குணத்தைப் பொறுத்தே அமைபவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் எட்டாவது குருபூஜை வைபவம் பெப்ரவரி மாதம் 20ம் திதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வேளை, கொழும்பு, சிவயோக சமாஜ அன்பர் திரு. என். கனகசிங்கம், சுவாமிகளின் திருவுருவத்திற்கு தீபாராதனை செய்வதையும், நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த, மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அலி ஸாகிர் மௌலானா, அருளுரை வழங்கிய ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா, சிறப்புரைகள் வழங்கிய, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், கம்பவாரிதி இ. ஜெயராஜ், கூட்டத்தினரின் ஒரு பகுதியினரையும் படங்களிற் காணலாம்.





படமும், தகவலும்: என். கனகசிங்கம், பம்பலப்பிட்டி

## எங்கேயும் ஓடவேண்டியதில்லை!

அடர்ந்த காடுகளிலோ, கண்ணுக்குத் தெரியாத ஏகாந்தக் குகைகளிலோ இருக்கும் தனித் தகுதி பெற்ற சில அபூர்வ மனிதர்களுக்கு மட்டும்தான் ஆன்மீக வாழ்வு என்பது கிடையாது. உலகத்திலிருந்து திடீரென்று ஓட்டமெடுத்து, எங்கேயோ ஓர் இமய மலைப் பள்ளத்தாக்கிலே பிச்சைக்காரனைப் போல் சோம்பேறி வாழ்வு வாழ்வதனால் அதை அடைய முடியாது. தெய்வீக வாழ்க்கையை ஆரம்பிப்பவன் தன் ஆடையை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயமில்லை. மணிக் கணக்கில் வெய்யிலில் தலைகீழாக நிற்க வேண்டும் என்பது தேவையில்லை.

தலையை மழித்தல் அல்லது சடை முடியை நீட்டல், திருவோட்டை ஏந்துதல், சிங்கத்தோலிலே சயனித்தல் இந்தப் புறச் சின்னங்கள் எல்லாம் உண்மையான ஆன்மீக சாதகனுக்கு முக்கியமில்லை. இவையே முக்தி பெற்ற ஜீவனுக்கு முத்திரைகள் என்றும் கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் இருக்கும் இடத்தையும் நீங்கள் அணியும் ஆடையையும், நீங்கள் நிற்கும் விதத்தையும் நீங்கள் வைத்திருக்கும் கேசத்தின் நிலையையும் பொறுத்ததல்ல ஆன்மீக வாழ்வு. அதைப் போலவே, உங்களுடைய பாத்திரங்களின் தன்மை, படுக்கும் படுக்கை இவற்றுக்கும் உங்கள் ஆன்மீக நிலைக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

சுவாமி: சிவானந்தா

★ பேராசையும் அகங்காரமுமே மனம் கெடுவதற்குக் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பார்வையில் கோபுரம்

* கோபுரம் இதழின் மூலம், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நிகழும் பண்பாட்டு நிகழ்வுகளையும், பல ஆன்மீகக் கருத்துக்களையும் அறிய முடிந்தது. 'கோபுரம்' இதழுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். கோபுரம் சைவப்பண்பாட்டை நிலைநிறுத்துமாக !

க. சிவானந்தராஜா
செட்டியகுறிச்சி, பண்டத்தரிப்பு.

* கோபுரம் இதழ் கண்டு மகிழ்ந்தேன். சிறுசிறு ஆன்மீகக் கட்டுரைகள் பயனுள்ள விடயங்களைக் கொண்டுள்ளன. திணைக்களத்தின் பணிகளைப் போற்றுகின்றேன்.

தா. தவசிங்கம்
துணுக்காய் மத்தி, கரவெட்டி.

* கோபுரம் இதழ் காணக்கிடைத்தது. எங்களுக்கு மிகவும் பயனுள்ள விடயங்கள் இருந்தன. இந்நூலினை எமக்கு அனுப்பிவைத்தமைக்காக நன்றி கூறுகின்றோம். திணைக்களத்தின் சேவைகள் தொடரட்டும்.

ஒரு அன்பர், சிறைச்சாலை, களுத்துறை.

# அருளொளி வீசுமே!

மார்கழிக் கோபுரம்
கிடைத்ததென் கைகளில் !
பார்த்தேன் படித்தேன் !
பரவசம் கொண்டேன் !!

இந்துமத கலாசாரத்
திணைக்களத் தினரால்
இவ்விதம் இதழொன்று
வெளியிடல் பெரும்பணி !

ஒவ்வொரு பக்கமும்
பயன்தரும் செய்திகள் !
ஒவ்வொரு பக்கமும்
நிகழ்வுடன் படங்களும் !!

இந்து சமயத்தின்
உயர்நல் நெறிகளை
அனைவரும் அறிந்திடச்
செய்வதோர் உயர்பணி !

இன்னும் புதுப்புது
அம்சங்கள் சேர்த்திதை
இன்னும் பயனுள்ள
சஞ்சிகை ஆக்குவீர் !

கோபுரம் இதழெலாம்
கோபுரம் போலவே
உயர்ந்து அழகுடன்
அருளொளி வீசுமே !

இவ்விதழ் வளர்ந்திட
மனம்நிறை வாழ்த்துகள் !
இப்பணி தொடர்ந்திட
மகிழ்வுடன் வாழ்த்துகள் !!

ச. முருகையா (முருகு)
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரின் ஆளுமை வளர்ச்சி
## - சில சிந்தனைகள்

திருமதி மைதிலி விசாகரூபன்
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் – நல்லூர்

ஒருவருடைய ஆளுமை வளர்ச்சியின் முதல் ஐந்து அல்லது ஏழு வயது வரையான காலப்பகுதி மிக முக்கியமான காலப்பகுதி ஆகும். இக்காலப் பகுதியில்தான் ஒருவரின் ஆளுமைக்கான வித்திடப்படுகிறது. இப்பருவத்திலே ஆளுமை நன்கு கவனிக்கப்படல் வேண்டும். எனவே இளையோரின் இப்பருவத்தினை நன்கு பயன்படுத்த பெற்றோரும் பெரியோரும் உதவுதல் வேண்டும். நல்லசூழலை இவர்களே ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். ஒருவருடைய ஆளுமை பிறரால் வளர்த்தெடுக்கப்படுவதை விட அவரவராலேயே வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். இவ்வாறு வளர்த்தெடுப்பதற்குச் சில அடிப்படையான மன ஆரோக்கியம் ஒவ்வொருவருக்கும் தேவை என்பது உளவியலாளர்களது கருத்தாகவுமுள்ளது.

முதலில் ஒருவர் தன் ஆளுமையை வளர்ப்பதற்குக் தன்னைத்தானே அன்பு செய்பவராக இருப்பது அவசியம். இங்கு அன்பு பிரதானமானது. ஒருவன் தன்னைத்தான் அன்பு செய்வதோடு பிறரை அன்பு செய்பவராதலும் வேண்டும். அத்துடன் ஒருவருக்குத் தன்னைப் பற்றிய சுயபடிவம் அல்லது தன்னைப்பற்றிய நல்லபிப்பிராயம் இருத்தலும் இன்றியமையாததாகும்.

ஒருவருடைய ஆளுமை உயரம், நிறம், எடை முதலானவற்றிலே மாத்திரம் தங்கியிருப்பதில்லை. இவ் வெளித்தோற்ற ஆளுமைகளைவிட ஒருவரது உள்மன ஆளுமையே பிரதானமாகிறது. பிறரை ஏற்றுக் கொள்வதுடன், தம்மைத் தாமே ஏற்றக்கொள்பவராதலும் வேண்டும். அத்துடன் ஒருவர் தன்னைப்பற்றிய ஆரோக்கியமான அபிப்பிராயத்தை கொண்டிருத்தல் வேண்டும். இது சுய புகழ்ச்சியாக கருதப்படக்கூடாது.

உளவியல் ரீதியில் தம்மைத்தாமே ஆரோக்கியமாக நம்புதலை இது குறிக்கும். இவ்வாறான தன்னம்பிக்கைகள் இல்லாதவிடத்து ஒருவர் உள்ளத்தினால் முடமாகிவிடக்கூடும் என்கின்றனர் உளவியலாளர்கள். எனவே ஒருவரது சிந்தனை, கருத்து, எண்ணம் என்பவை நல்லனவாக அமைதலும் ஆளுமை வளர்ச்சிக்கு அவசியம் ஆகும்.

தன்னைத்தானே பாராட்டல் என்பதும் ஒருவரது ஆளுமையை வளர்க்க உதவுவதாகும். அத்துடன் ஒருவர் தன்னைத்தான் நன்கு உணர்ந்தவராதலும் வேண்டும். இவர் தனது தடைகளையும் போலிகளையும் கடந்து வெளியேவரும்போது தான் ஆளுமையை வளர்த்துக்கொள்ளலாம் என்பது உளவியலாளரின் கருத்து.

இவ்வாறு மேற்குறித்த நிலைகளை ஒருவர் வளர்த்துக்கொள்வதன் மூலம் ஆளுமையை வளர்க்கலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் அடையலாம். சிக்கல்களுக்கு மத்தியிலும் தனக்குள் வருந்தாமல் வாழ்தல் நல் வாழ்க்கை ஆகும். வாழ்நாளில் ஒவ்வொரு பொழுதையும் துடிப்புள்ளதாக ரசித்துச் சுவைத்து வாழ்க்கையை வாழ்பவரை உண்மையான ஆளுமை பொருந்திய மனிதர் எனக் கருதுவதுண்டு. ஆளுமை என்கின்ற ஆளுந்தன்மை மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகும்.

★ மனிதருடைய மனம் கெட்டுவிட்டால் இவ்வையகம் முழுவதும் கெடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணும் உணவு உனக்காம் !

சிவ : சண்முகவடிவேல்
ஏழாலை, சுன்னாகம்.

இறைவன் உடலாகவும் உள்ளான். உடலுள் உயிராகவும் உள்ளான். அவ்வுயிரில் உணர்வாகவும் உள்ளான். உள்ளத்தில் தேனாகவும் அமுதமாகவும் கரும்பின் இனிய கட்டியுமாகத் தித்திக்கின்றான். அப்பேருண்மையை,

"ஊனாய் உயிராய் உணர்வாய் என் உள் கலந்து தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்.........."

என்று மணிவாசகப்பெருமான் தித்திக்கும் தீந் தமிழில் திருவாசகத் தேன் மழையாகப் பொழிவார்.

வாழ்முதலை வாழ்த்தாமைக்கு மனம் வருந்துவார். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு, ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே......." என்று நெஞ்சம் நைந்து நெக்குருகுவார்.

என்னுடைய உடம்பில் உயிரை வைத்து ஊசலாட்டுவதற்காக உண்டும் உடுத்தும் இருக்கின்றேன். "..........ஊனில் ஆவியை ஓம்புதற், பொருட்டினும் உண்டுடுத்து இருந்தேனே." என்று தமது ஏழ்மையை எண்ணி ஏங்குவார்.

உண்ண வேண்டியவன் நான் அல்லன். ஓம்பப்பட வேண்டியவன் இறைவன். கண்ணப்ப நாயனாருக்கு அப்படியான ஓர் உணர்வு இயல்பாகவே உருவானது.

காளத்தி அப்பனாரைக் கண்டு கொண்டதும் தமது தாகவிடாய் தவிர்ந்தது. தமது பசி பறந்தது. கண்ணப்பநாயனாருடைய பசி காளத்தியாருக்குப் பசிக்கும் உணர்வாக மாறியது.

"நீர்பசித் திருக்க இங்கு நிற்கவுங் கில்லேன்" என்று இரங்குவார். 'எம்பிரான் சாலப் பசிப்பர்' என் றிரங்கி ஏங்கி உணவு சமைத்து வந்தார். காளத்திக் கொழுந்தோடு கதைத்துக் கொடுக்கின்றார்.

"சுவாமி ! நான் பழகிய நாவினால் சுவை கண்டேன். தேனும் கலந்தது. மிகத் தித்திக்கும். உண்ணுங்கள்.

"..............அடியேனும் சுவை கண்டேன். தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும் என மொழிந்தார்.

கண்ணப்பநாயனார் தம் அகத்தே உள்ள இறைவனைக் காளத்தியப்பராகக் கண்டதன் விளைவு அது.

அரிவாட்டாநாயனார் திருகணமங்கலப் பெருமானுக்கு அந்தணர் மூலம் அமுது செய்விப்பர். நல்ல செந்நெல்லரிசி, செங்கீரை, மாம்பிஞ்சு ஆகியவற்றால் இன்னமுது சமைப்பார். கொல்லையில் இலையும் குளிர் நீரும் தாம் கொள்வர். ஒருநாள் கால்கள் தப்பிக் கமரில் அரிசி, செங்கீரை, மாம்பிஞ்சு சிந்தக் கண்டு கலங்கினார். அல்லல் தீர்த்து அருள வல்ல பெருமான் அமுது செய்யவில்லையே என்று அரிவாளைக் கழுத்தில் பூட்டி அரிந்தார் என்றால் அரனை அமுது செய்விப்பதில் அடியவரின் ஆர்வம் என்னே ! அக்கணமே அவ்விடத்தில் அடியவர் அல்லலை திருவருள் வெளிப்பட்டுத் தீர்த்ததென்றால் சிவபிரானுடைய அன்பு தான் என்னே !!

மதுரை நாயகன் எழுந்தருளி வந்தார். செம்மனச் செல்வி அம்மையாரிடத்துப் பிட்டு வாங்கி அமுது செய்தருளினார். அந்நிகழ்வை மணிவாசகப் பெருமான் அருளும் வண்ணம் இது.

"போர்க்களத்தில் கலங்காது செல்ல வல்ல காளையையுடையவர். அன்பரைப் பகைத்த ஐம்புலங்களாகிய யானைகளை முழக்கி ஓட்டிய போரில்வல்ல ஆண்சிங்கமும் ஆகிய எம்பெருமான் மண்ணுலகில் மதுரையம்பதியில் பிட்டினை உண்டருளினார்.

"தின்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளி."

கருவூர்த்தேவர் கங்கை கொண்ட சோழேச்சரப் பெருமான் மீது இசைப்பா பாடி இரங்குகின்றார்.

"எனது மனத்தில் கலந்து விளங்குகின்ற பரஞ்சோதியே! அடியேன் உனக்கு உரித்தாம் படியாகவே உணவு உண்டேன்".

"............அடியே னுண்ட வூனுனக்காம் வகை யெனதுள்ள முள்கலந் தெழுபரஞ்சோதி....."

இவை எல்லாம் நமக்கு உணர்த்துவன தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கமாகின்றது.

உண்ண வேண்டியவர் நாம் அல்ல. 'அது' என்ற உணர்வு மேலோங்குகின்றது. அதனால் உணவை சிவபெருமானுக்கு அர்ப்பணமாக்குகின்றார்கள். ஓராதார் உள்ளத்து ஒழித்து நிற்பவன் சிவபெருமான். மறைய நின்ற மாமணிச்சோதியான் முன்நிற்கின்றான்.

இறைவனுடைய தாளை அடைவர்கள் அடியார்கள். அடியார் அமுது செய்தல் இறைவன் அமுது செய்ததாகும். அதனால் தான் திருமந்திரம் திருத்தமாகச் சொல்லும்.

"அந்தணருக்கு ஆயிரம் பொன் வழங்கலாம். ஆயிரம் ஆலயங்களை அமைக்கலாம். அவை எல்லாம் சிவனடியாருக்கு ஒரு வேளை அமுது கொடுத்தலுக்கு ஒப்பாகாது. இது நிச்சயம்". இந்த இலக்கணத்தால் சிறுத்தொண்ட நாயனாருடைய செயற்கருஞ் செயலைச் சிந்தித்தால் ஐயப்பாடு அகலுவதற்கு ஐயம் ஏது?

நாமும், நாளிலும் பொழுதிலும் உண்ணும் போதும், பருகும் போதும் உள்ளிருக்கும் இறைவனுக்காக என்று எண்ணின் அதுவும் சிவவழிபாட்டுப் பலனைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வு

ச. இரா. பாலகிருஷ்ண ஐயர்
நாராங்கல, ஹாலிஎல

இன்றெல்லாம் ஆஸ்த்மா இருதயநோய் சிறுநீரகக் கோளாறு என்றெல்லாம் நோய்கள் வருகின்றன. இவற்றிற்கு என்ன காரணம்? நாம் உண்ணும் உணவுகள் எமது சரீரத்துள் சென்று சீராக அதன் வேலைகளைச் செய்வதில்லை. இதனால் அது சீரணிப்பதில்லை. அளவுக்கு மீறி உண்பதும் ஒன்றாகும். இதையே முன்னோர் ஒருபொழுது உண்பான் யோகி, இருபொழுது உண்பான் யோகி, முப்பொழுது உண்பான் யோகி என்றனர். இவற்றிற்கு யோகாசனம், பிராணாயாமம் ஆகியன சிறந்தவை. சைவமதத்தில் இராதது எதுவுமில்லை. வெளிநாட்டவர்கள் சைவமதத்தில் உள்ள அற்புதங்களை உல்லாசப் பயணிகளாக வருகை தந்து பார்த்து அறிந்து படம் பிடித்துப் போவதை நாம் காணலாம். எமது அனுட்டானத்தில் ஒன்றான பிராணாயாமத்தையும் யோகாசன சாஸ்திரங்களையும் உற்று நோக்கின் இதன் பொருள் விளங்கும். பிராணாயாமமென்பது மூச்சைப் பெலமாக உள்ளிழுத்து அடக்கி மீண்டும் வெளியேற்றுவது. யோகாசனங்களும் இது போன்றதே. இதனால் இயங்காமல் உள்ள நரம்புகளின் நாளங்கள் சுவாசக்குழாய்கள், இருதயப்பைகள் தம் இயக்கங்களை ஒழுங்காகச் செய்கின்றன. காட்டில் வாழும் தவசிரேட்டர்கள் ஏன் நோயின்றி நீண்டகாலம் வாழ்கின்றனர். உண்ணும் உணவுகள் பழங்கள், கிழங்குகள் தான். அதுவும் ஒரு வேளை. இதன் பின் மான் தோலில் மூச்சையடக்கி யோகம், தவம், மனதை ஒருமுகப்படுத்துதல், (ஏகாக்ரசிந்தை) பலவித ஆசனங்களில் தவம்செய்தல், இந்திரிய அடக்கம். இதனால் நோய்கள் அவர்களைக் கண்டால் ஓடும். அடுத்தது ஜெபம். ஜெபமும் தவமும் பயன் தருபவையே. யோகமும் ஜெபமும் செய்யும் இடங்கள் எவையெனப் பார்ப்போம். அதன் பலன்களும் காண்போம்.

| | |
|---|---|
| வீட்டில் சுத்தமான இடம் | – ஒருமடங்கு பலன். |
| நதிக்கரை, நீரோடை மலை | – இருமடங்கு பலன். |
| பசுக்கள் திரியும் இடம் | – மும்மடங்கு பலன். |
| கோயில்கள், க்ஷேத்திரங்கள், பாடல் பெற்ற தலங்கள் | – பன்மடங்கு ஆயிரம் லட்சமென்று பலன்கள் |

## ஜெபம் செய்யும் ஆசனங்களும், பலனும்

| | |
|---|---|
| மான்தோல் | – மனச்சாந்தி, ஞானவிருத்தி |
| தர்ப்பையாசனம் | – மனச்சுத்தி, பாவங்கள் அழிதல் |
| பட்டுத்துணி | – பாக்யம் |
| கம்பளம் | – இருந்த வினைத் துன்பமகலும் |
| மரவுரி | – மனவலிமை, உடல்பலம். |

# நாதம்

"சங்கீத கலா வித்தகர்" எஸ். சிவானந்தராஜா,
அளவெட்டி.

*இறைவன் நாத வடிவானவன். உலகதோற்றத்திற்கு மூலாதாரமானது நாதம் ஆகும். இந்த நாதத்தை உபாசித்திருப்பவர்களாலேயே இறைவனை உணர முடியும். பத்து வகையான நாத ஒலிகள் அகத்தே கேட்கும். பத்து வகையான நாதமுழக்கத்தில் குழலொலி, யாழொலி கூடிவரும் நாதமே நிலையானது ஆகும். நமது முன்னோர், முழவோசை, குழலோசை எனபனவற்றில் நாதஒலியில் "ஓம்" ஒலிக்கும் உண்மையை உணர்ந்திருந்தார்கள். "ஓம்" என்ற ஒலியில் நாதம் அடங்கியுள்ளது. நாதத்தினின்று ஸ்ருதியும், ஸ்ருதியிலிருந்து ஸ்வரங்களும், ஸ்வரங்களினின்று இராகங்களும் உண்டாகின்றன. ஸ்வரம் - மூர்ச்சனை - இராகம் - லயம் இவற்றின் அனுபவத்தால் உணர்ந்து தோன்றும் நாதமே ஓங்காரமாகும்.*

*இராகமென்ற அமிர்தரஸத்தை பருகி நாதோபாசனை செய்ய, அந்த நாதமே ஓங்காரமாகப் பரிணமித்து, சப்தஸ்வரங்களால் கானமாக அலங்கரிக்கப்படுகின்றது. வேத - புராண - ஆகமம் முதலிய சாஸ்திரங்களுக்கு ஆதாரமான நாதத்தை, இனிமையான சங்கதிகள் வார்த்தைகள் மூலம் பக்தியுடன் கானம் செய்வதே பாக்கியமாகும். மூலாதாரத்தினின்றும் எழுந்து ஏழுஸ்வரங்களின் நாதங்களை கானம்செய்து பக்தியுடன் அனுபவிப்பதே மோட்சமாகும். காற்று - அக்னி என்னும் இரண்டினது சேர்க்கையில் நாதம் தோன்றி, பிரணவசொரூபமாகவும், பிரணவம் ஓங்காரவடிவினதாகவும் இருக்கும். அகர - உகர - மகர சேர்ந்து திரிமூர்த்தி வடிவான இறைவனின் ஓங்கார வடிவைத்தரும் நாதமே பிரம்மம். அந்த நாதத்தில் உண்டாவது பேரின்பமாகும். மோட்ச சாதனைகளில் நாதோபாசனையே முக்கியமானது. அதற்கு இராகம் - தானம் - இனிமையின் நிறைவு - பக்தி என்பன இன்றியமையாதன. வீணையை ஸ்ருதி சுத்தமாகவும், லயம் தவறாமலும் நாதோபாசனை செய்யின் தியானமோ, யோகமோ, தவமோ, பூசையோ ஏனைய சாதனங்களோ அவசியமின்றி மோட்சத்திற்கு வழிபிறக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் சைவ சமயி?

"சட்டம்பியார்"

'சைவ சமயி' என்று யாரைச் சொல்லலாம். சைவ சமயிகளில் பலவிதமானவர்களைக் காண்கிறோம். சிலர் காலை மாலை தவறாமல் கோவிலுக்குப் போய் வருகிறார்கள். சிலர் வெள்ளிக்கிழமைகளில் கோவிலுக்குப் போய்வருகிறார்கள். சிலர் விரத நாட்களில் போய் வருகிறார்கள். சிலர் கோவில் திருவிழா நாட்களில் மட்டும் போய் வருகிறார்கள்.

சிலர் தாவர போசனம் மட்டும் உண்கிறார்கள். சிலர் வெள்ளிக்கிழமைகளில் தாவரஉணவு உண்கின்றனர். சிலர் விரத நாட்களில் மட்டும் தாவர உணவு உண்கின்றனர்.

இப்படிப் பலவிதமான ஆசாரங்களை உடையவர்களாக சைவ சமயிகள் விளங்குகிறார்கள். இவர்களில் யாரைச் சைவ சமயி, என்று கூறலாம். இக் கேள்விக்கு விடையை ஆராய்வோம்.

எங்களுடைய புராணங்களிலே தமிழர்களுக்கே உரித்தானது பெரிய புராணம் மட்டுமே. மற்றைய புராணங்கள் எல்லாம் வடமொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டவை. பெரிய புராணம் ஒன்றுதான் தமிழில் தோன்றியது.

இரவு கடையைப் பூட்டிக்கணக்கு பார்த்த பொழுது தான், அந்தச் சிறுமிக்கு மிகுதிப்பணம் கொடுக்க மறந்தது, அவருக்கு நினைவு வந்தது.

கண்ணப்ப நாயானார், சுவாமிக்குக் காட்டுப் பன்றியை வேட்டையாடிக் கொண்டுவந்து, அதன் இறைச்சியைச் சுட்டு, முதலில் தான் தின்று பார்த்து ருசியை அறிந்து கொண்டு, பின் இறைவனுக்குப் படைத்தார். அமர் நீதி நாயனார், தான் பிடித்து வந்த மீன்களில் பெரிதும், அழகானதுமான ஒரு மீனைச் சிவபெருமானுக்கென்று கடலுள் விட்டு விடுவார். இது தினமும் அவர் செய்தது.

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் கதைகளைப்படித்தால், எல்லோரும் சிவபெருமான் மீது பேரன்புடையவர்களாக விளங்கினார்களென்பதை அறியலாம். அவர்கள் எல்லோரையும் ஆசார சீலர்களென்று நாங்கள் சொல்ல முடியாது.

இப்புராணத்திலிருந்து, சைவ சமயி யார்? என்பதற்கு விடை கூறுவதாயிருந்தால் 'யார் ஒருவன் தன் மனச் சாட்சிப்படி நடக்கிறானோ, அவன்தான் சைவ சமயி' என்று கூறலாம். பேராசிரியர் ராதா கிருஷ்ணன், 'குருசேவ்' கூட ஒரு சைவ சமயியாக இருக்கலாம், என்றார். குருசேவ் தன் மனச் சாட்சிப் படி நடப்பவராக இருந்தால், அவரைச் 'சைவன்' என்று கூறலாம்; என்பது பேராசிரியர் கருத்தாகும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் 'ஆபிரகாம் லிங்கன்' ஒரு சைவனாய் இருக்கலாம்; என்று கூறி இருக்கிறார். ஆபிரகாம லிங்கன் ஜனாதிபதியாக வரமுன்னர், ஒரு சில்லறைக் கடை வைத்திருந்தார். அவருடைய கடையில், அந்திப் பொழுதில் சீனி வாங்கிய ஒரு சிறுமிக்கு மிகுதிப் பணம் கொடுக்குமுன்னர் அவள் போய் விட்டாள்.

இரவு கடையைப் பூட்டிக்கணக்கு பார்த்த பொழுது தான், அந்தச் சிறுமிக்கு மிகுதிப்பணம் கொடுக்க மறந்தது, அவருக்கு நினைவு வந்தது.

உடனே அவர் கையிலே ஓர் தீப்பந்தம் எடுத்துக்கொண்டு அவ்வூர் உள் ஒழுங்கைகளில் 'யார் என்னிடம் சீனி வாங்கிய சிறுமி' ? என்று ஒவ்வொரு படலையாகக் கூப்பிட்டு விசாரித்தார். அந்த மிகுதிப் பணத்தைக் கொடுக்காமல் அவரால் நிம்மதியாக உறங்கமுடியாது, இவரது மனச்சாட்சி அவரை உறுத்தியது. இதனால் ஆபிரகாம் லிங்கன் ஒரு சைவ சமயி, என்று பண்டிதமணி கருதினார். இதே கருத்தைப் பெரிய புராணம் முழுவதும் பரக்கக் காணலாம்.

மனச்சாட்சிப்படி நடப்பவன் எவனோ, அவன் சைவ சமயி, என்று நாங்கள் தீர்க்கமாகக் கூறலாம். மனச்சாட்சிப்படி நடப்பவன், எந்த மொழியைப் பேசுபவனாக இருந்தாலும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவன் என்றாலும் 'அவன் ஒரு சைவ சமயி' என்று நாங்கள் திடமாகக் கூறலாம்.

ஆனால் ஒருவன் மனச்சாட்சிப்படி நடப்பவன்; என்பதை நாங்கள் கண்டு கொள்வது கடினம். ஆடு வெட்டுபவன், தன் தாய்க்குச் செய்த பணிவிடையையும் 'கொக்கென்று நினைத்தாயா? கொங்கணவா'? என்று இல்லத்தரசி ஒருத்தி, சுவாமியார் ஒருவரைக் கேட்டதும், நாம் அறிந்த வரலாறு. இவ் வரலாறுகள் மனசாட்சிப்படி நடப்பவனைக் கண்டு பிடிப்பது கடினம் என்பதை எமக்குக் காட்டுகின்றது. சாதாரணமாக ஒரு மனிதன் மனச்சாட்சிப்படி நடக்கின்றானா என்பதை அவன் செய்யும் தொழிலிலிருந்தோ, நடை உடை பாவனையிலிருந்தோ? எங்களால் கண்டு பிடிக்க முடியாது. சைவசமயியைத் தேடுதலை விட்டு, சைவ சமயியாக வாழப் பழகிக் கொள்வோம்.

★ மனிதத்தன்மை பெருகுமளவு, பிரச்சனைகள் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்கச் சுமை குறைய வழி !

நாம் எல்லோரும் பரம்பொருளைப் பற்றிய உண்மையான ஞானத்தைப் பெற முயல வேண்டும். இந்த ஞானம் என்பது என்ன? பரம்பொருளைத் தவிர, வேறெதுவுமே இல்லை என்பதுதான். அந்த ஒன்றுதான் இத்தனையாகவும் தோன்றுகிறது. இத்தனையான தோற்றங்களிலேயே மனதைச் செலுத்திக் கொண்டிருந்தால் சஞ்சலம், ஏற்றத் தாழ்வு இவற்றால் உண்டாகும் கஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கும். இத்தனை தோற்றத்திலிருந்தும் மனதைத் திருப்பி, இவற்றுக்குக் காரணமான ஒன்றையே அறியத் தொடங்கினால் எண்ணமும் பலவாக ஒடி அவதிப் படாமல், சஞ்சலங்கள் ஓயும். ஒரே வஸ்து என்றபின் சஞ்சலிக்கவோ ஏற்றத் தாழ்வுக்கோ இடம் ஏது? அந்த நிலையிலேயே நித்திய சுகத்தைப் பெறலாம். இந்த நிலையைத்தான் ஞானம் என்கிறோம்.

உலக வாழ்வில்கூட சுகம் வருவது போலிருக்கிறது. ஆனால் அது நித்தியமாக நிலைத்து நிற்பதில்லை. வெளியிலிருந்து வருகிற சுகத்தை நாம் எப்படி சாசுவதமாக்கிக் கொள்ள முடியும்? வெளியிலிருந்து வருவது நமக்கு ஸ்வாதீனப்படாமல் நம் கைவிட்டு ஒடியும் விடும். அப்போது அதனால் கிடைக்கிற சுகமும் போகத்தான் செய்யும். இப்படித்தான் இந்த நிமிஷம் சுகமாக இருப்பது அடுத்த நிமிஷமே மறைகிறது. அடர்ந்த மரத்தின் கிளைகள் ஆடுகிறபோது இடுக்கு வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்து பாய்ந்துவிட்டு, அடுத்த நிமிஷமே நிழல் வந்து மூடிக்கொள்வது போலத் தான், உலகத்தின் துன்பத்துக்கு நடுவில் கொஞ்சம் கொஞ்சம் சுகம் தலையை எட்டிப் பார்த்துவிட்டு ஒடிவிடுகிறது. நிரந்தர சுகம் என்பது உலகத்துக்குக் காரணமான ஒன்றை அறிவதுதான்.

உலக வாழ்வில் சகல மனிதர்களுக்கும் அளவில்லாத கஷ்டங்கள் உண்டாகத்தான் செய்யும். பணக்காரன், பெரிய பதவியில் இருப்பவன் கஷ்டமில்லாமல் இருப்பதாக மற்றவர்கள் நினைக்கலாம். அப்படி நினைத்துத் தாங்களும் அவர்களைப் போலப் பணமும் பதவியும் பெறப் பாடுபடலாம். ஆனால் பணக்காரனை, பதவியில் உள்ளவனைக் கேட்டால் தெரியும், அவனுக்கு எத்தனை கஷ்டங்களென்று.

உலக வாழ்வில் சகல மனிதர்களுக்கும் அளவில்லாத கஷ்டங்கள் உண்டாகத்தான் செய்யும். பணக்காரன், பெரிய பதவியில் இருப்பவன் கஷ்டமில்லாமல் இருப்பதாக மற்றவர்கள் நினைக்கலாம். அப்படி நினைத்துத் தாங்களும் அவர்களைப்போலப் பணமும் பதவியும் பெறப் பாடுபடலாம். ஆனால் பணக்காரனை, பதவியில் உள்ளவனைக் கேட்டால் தெரியும், அவனுக்கு எத்தனை கஷ்டங்களென்று. நாம் திண்ணையில் இருக்கிறோம்; விழுந்தால் சிராய்த்துக் கொள்வதோடோ, சுளுக்காவதோடோ போய்விடும். பணக்காரனும், பதவிக்காரனும் மாடிமேல் இருக்கிறான். எனவே, அவன் விழுந்தால் எலும்பெல்லாம் முறிந்து போகும். பிராணாபத்து ஆகும். ஒருவனுக்குப் பணமும் பதவியும் உள்ள போதே அதனால் உண்டாகிற சிறிது சுகத்தோடு, தன் பணம், பதவி போகக் கூடாது என்ற கவலை, சுகத்தைவிட அதிகமாக இருக்கிறது. இதனால்தான் உலகத்தில் எவனுமே, தான் சந்தோஷமாக இருப்பதாகச் சொல்லக் காணோம் ! ஒவ்வொருவனும் தானே மகா புத்திசாலி, தானே மிகவும் யோக்கியன், தானே ரொம்ப அழகு என்று நினைத்துக் கொண்டிருப்பது போல், அதிக துக்கமுள்ளவனும் தானே என்று நினைத்துக் கொண்டிருக்கிறான்.

* மனிதனுடைய அறிவாற்றலும், திறமையும், சுகமும் மனதின் சமநிலையில் தான் தங்கி இருக்கின்றன.

* அசுத்தங்களை மனதில் வைத்து இறைவனை வழிபட்டால் கருணை கிடைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கம் நம் உடன்பிறப்பு. நம் பூர்வ கர்மாவின் பயனாக இந்தத் துக்கங்களுக்கு நாம் முன்னமேயே விதை போட்டிருக்கிறோம். இதிலிருந்து தப்ப வழியில்லை.

ஆனால் கர்மத்தினால் ஏற்படும் கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு சாந்தமாக இருக்க வழி உண்டு. புதிதாகக் கர்ம மூட்டையைப் பெருக்கிக் கொண்டு எதிர்காலத்தில் கஷ்டத்தை அதிகமாக்கிக் கொள்ளாமலிருக்க வழி உண்டு. முதலில் சொன்ன ஞானம்தான் அந்த வழி.

சித்தப் பிரமை பிடித்து, ஜடமாகி விட்டால் கஷ்டம் தெரிவதில்லை; பைத்தியத்தின் கஷ்டம் வேரூன்றி நிற்பதில்லை; ஆனால், சித்தப் பிரமையில் நித்திய ஆனந்தமும் இல்லை. தூக்கத்தில் துக்கமில்லை. ஆனால் தூக்கத்தில் சுகமாக இருக்கிறோம் என்கிற அறிவு இல்லை. ஞானிதான் எப்போதும் விழிப்பிலேயே இருந்து கொண்டும் சாசுவத ஸுகியாக இருக்கிறான். அவனது தேகத்தில் சிரமங்கள் இரா என்பதில்லை. ஆனால் அவனுடைய மனத்தில் கிலேசமே இராது. வெளியிலிருக்கிற சிரமம் அவன் உள்ளே பாதிப்பதே இல்லை.

கிணற்று ஜலத்துக்குள் நீர் நிரம்பிய குடத்தை இழுக்கும் போது கனம் தெரிவதில்லை. ஆனால் தண்ணீர் மட்டத்துக்கு மேலே குடம் வந்தவுடன் கனக்க ஆரம்பித்து விடுகிறது. எளிதில் புரட்ட முடியாத பெரிய மரங்களை வெள்ளத்துக்கு அடியாகத்தான் புரட்டி இழுப்பது வழக்கம். அதே மாதிரி நம் துக்கங்களையெல்லாம் ஞானமாகிற தண்ணீரில் அமுக்கி விடவேண்டும். அப்போதும் துக்க ஹேதுவான விஷயங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் ஜலத்துக்குள் இழுக்கிற குடம் மாதிரி அப்போது துக்கம் பரம லேசாகிவிடும்.

காஞ்சி முனிவர்

('தெய்வத்தின் குரல்' எனும் நூலிலிருந்து)

## சலிப்பும் மகிழ்ச்சியும்

வாழ்க்கையின் நன்மைகள் எப்போதும் முடிவில்தான் கிடைக்கும். ஆரம்பத்தில் அதற்காக முயலும்போது சிரமமாகவும், சலிப்பாகவும் தான் இருக்கும். உதாரணமாக நாவிற்கு ருசியாகச் சாப்பிடும்போது இன்பமாக இருக்கிறது. ஆனால் பிறகு அஜீரணத்தால் வலி ஏற்படும்போது அப்படிச் சாப்பிட்டது தவறு என்று உணருகிறோம். மருந்து சாப்பிடும்போது கசப்பாக இருக்கிறது. ஆனால் பிறகு அதன் பலனாக உடல்நலம் பெறுகிறோம். சிறு வயதில் சிரமமான படிப்பில் கவனம் செலுத்தாமல் விளையாட்டுக்களில் ஈடுபடும்போது சுவாரசியமாக இருக்கிறது. வாழ்க்கையில் நல்ல உத்தியோகம் கிடைக்காமல் தவிக்கும்போது அது தவறு என்று உணருகிறோம். காலையில் சீக்கிரம் எழுந்திருப்பதும், தேகப்பயிற்சி செய்வதும் தொல்லையாகத் தோன்றுகிறது. ஆனால் கொஞ்சம் வயதான பிறகு உடல் நல்ல நிலையில் இருக்க இது அடிப்படையாக இருந்தது நமக்குப் புரிகிறது. இவற்றைப் போன்றதுதான் நமது ஐம்புலன்கள் அனுபவிக்கும் சிற்றின்பமும். அவை அப்போதைக்குச் சுவைபடத் தோன்றினாலும், விரைவில் மறைந்து போகின்றனவாகவும், பின்னால் தொல்லை தருவனவாகவும் இருக்கின்றன. பேரின்பமோ என்றும் நிலையானது; ஆரம்பத்தில் சிரமமாக இருந்தாலும், பிறகு நீடித்த – நிச்சயமான நன்மையைத் தரக்கூடியது.

சுவாமி பார்த்தசாரதி

## காரண காரியம்

- ★ வடக்குத் திசையை நோக்கும் வீட்டிற்கு காற்றோட்டம் குறைவாக இருக்கும் என்பதால், வடக்குத்திசையில் வாசற்படி இருக்கக்கூடாது.
- ★ நகத்தின் இடுக்குகளிலுள்ள அசுத்தத்தின் மூலம் கிருமிகள் நோய்களை உண்டாக்கும். எனவேதான் நகம் கடிக்கக் கூடாது.
- ★ பெருமூச்சு விடும்போது மாரடைப்பு ஏற்படக்கூடும் என்பதால், அடிக்கடி பெருமூச்சுவிடக்கூடாது.
- ★ இரைப்பை ஒருபக்கமாக சரிந்து உணவு உட்கொள்ள சிரமமாக இருக்கும் என்பதால் கை ஊன்றிச் சாப்பிடக் கூடாது.

தொகுப்பு: பாலா சங்குப்பிள்ளை
அட்டன்.

கர்மம் செய்யாமல் மனிதன் ஒரு கணமேனும் இருக்க முடியாது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தொழில், கடமை செய்ய வேண்டும் என்பது விதி. எனவே அதனை கடலில் அகப்பட்ட துரும்பு போல செய்யாமல் சூரியனைப் போலச் செய்வது பெருமையல்லவா?

*-பாரதியார்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் சாட்சி !

நமது உடம்பில் இயங்கும் மனம் என்ற பகுதி பெரும்பாலும் நமக்குப் பிரியமான, எளிய ஆசைகளையே தீர்த்துக்கொள்ளும்படித் தூண்டுகிறது. இப்படித் தூண்டுவதே சாதாரண மனிதனின் மனம் பெரும்பாலும் செய்கின்ற காரியமாகும். அப்படிச் செய்யும்போது அது சமாளித்துக் கொள்ள உதவுகிறது. உதாரணமாக நாம் செய்யக்கூடாத ஒன்றை நாம் செய்யவேண்டி இருக்கும்போது, 'இந்த ஒரு தடவை மட்டும்தானே?' என்றும் 'இதனால் யாரும் பாதிக்கப்படவில்லை என்றால் அது தவறானது இல்லை' என்றும் வற்புறுத்தி அக்காரியத்தை நாம் செய்யுமாறு தூண்டுகிறது. இவ்வாறு வெளியில் உள்ள சந்தர்ப்பங்களையும் சூழ்நிலையையும் நம்மைப் பணிய வைப்பது நம்முடைய இந்திரிய ஆசைகளை ஒட்டிய மனமாகும்.

ஒருவன் தனது வாழ்க்கையில் மிகவும் கட்டுப்பாடான நியதிகளைக் கடைப்பிடிக்கவில்லையானால் அநேகமாக இந்தச் சமாதானத்தை ஏற்றுக்கொண்டு ஆசைகளை ஏற்று பணிந்து போய் விடுகிறான். இந்த சமாதானம் சரியல்ல என்று நமக்கு நாமே விளக்கிக் கொண்டு எது உண்மையாகவே சரியானது என்று ஒருகணம் ஆராய வேண்டும். ஆசைகளின் உடனடியான வேகத்துக்கு இடம் கொடுக்காமல், விவேகத்தின் நிதானமான ஆராய்ச்சிக்கு இடம் தரவேண்டும். இப்படி நம்மை ஆராயத்தூண்டுவதுதான் அறிவு. அவ்வாறு அறிவு எடுத்துச் சொல்லும் போது அதை அடக்கி விடாமல் அதற்கு வாய்ப்புக் கொடுக்கவும் மனத்தைப் பழக்கப்படுத்த வேண்டும்.

தவறு செய்த பிறகும் இந்த மனப்போராட்டம் தொடருகிறது. 'அது தவறு அல்ல' என்பதற்கு ஆயிரம் மனத்தின் பெரும்பகுதி சொல்லுகிறது. அது தவறுதான் அதை உணர்ந்துகொள்; இனிமேல் செய்யாதே' என்று இடித்துக் கூறுகிறது ஒரு சிறுபகுதி. அந்த நிலையிலாவது தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து, தொடர்ந்து அதைச் செய்யாமல் இருந்தோமேயானால் அந்தத் தவறும் நம்மைப் புனிதப்படுத்திக் கொள்ள உதவும்.

ஆனால் பெரும்பாலும் ஒரு சாதாரண மனிதன் இந்த இரண்டு நிலைகளிலும் அறிவுக் குரல்களுக்கு இடம் கொடுப்பதே இல்லை. ஆசைகளிலேயே தன்னை இழந்து விடுகிறான். உண்மையான மனச்சாட்சி அதனால் பலம் இழந்து விடுவதில்லை. அவன் சாகும் வரையில் அவனுக்கு அறிவுபூர்வமான ஆலோசனையை எடுத்துச் சொல்லி அவனைத் திருத்த முயன்று கொண்டே இருக்கிறது. அதனால்தான் வாழ்க்கையின் முற்பகுதியில் தவறு செய்தவர்கள், அதன் பிற்பகுதியிலாவது நன்மை செய்ய முற்படுகிறார்கள். அந்த மனப்பக்குவத்தை நாம் எவ்வளவு சீக்கிரம் அடைகிறோமோ அந்த அளவுக்கு நாம் விரைவில் உயர்ந்து விடுவோம்.

ஸ்ரீ அன்னை (அரவிந்தாசிரமம்)

# திறந்த தோட்டம் !

*தன்னல விருப்பு வெறுப்புகள் என்ற தளைகளை உடைத்தெறிந்து, காமம், பேராசை இவற்றின் இரும்புப்பிடியிலிருந்து தப்பிவிட்டாலே போதும். நமது இயல்பான சுதந்திரத்தையும் திருப்தியையும் அடைவதுடன் படைப்பின் அடிப்படை ஒருமையை உரிய காலத்தில் உணர்ந்து விடலாம்.*

*குறை உள்ளவனுக்கு நிறைவே லட்சியம். யாருக்குத் தான் குறைவில்லை?*

*ஆன்மீகப்பாதை கரடு முரடாகவும் புழுதி படிந்ததாகவும் இருக்கும். ஐயமில்லை. ஆனால் ஆரம்பக் கட்டத்தில்தான் அப்படியிருக்கும். யாத்திரை முடியும்போதோ, பசுமை கொழிக்கும் வயல்களைப் பார்ப்போம். வற்றாத அன்பு ஊற்றின் ருசியைச் சுவைப்போம். உயர்வூட்டும் பெருந்தன்மையையும், பொன்னான திருப்தியையும், பழுதற்ற நடுநிலைமையையும் அசையாத அமைதியையும் அனுபவிப்போம்.*

*தெய்வீக வாழ்க்கையின் பொன் வாயிலிலே, ஆன்மீக சாதகன் குழப்பத்தாலும் ஐயத்தாலும் நுழைவதற்குத் தயங்கிக் கொண்டிருக்கலாம். தெய்வீக வாழ்க்கை ஒரு திறந்த தோட்டம் என்பதை அவன் அறியமாட்டான். எந்தச் சமயத்திலும் யார் வேண்டுமானாலும் உள்ளே நுழையலாம். கம்பளம் விரித்தாற்போன்ற அதன் புல்வெளிகளிலே காலை நீட்டிப்படுத்து அழகையும், அமைதியையும், வாரித் தெளிக்கும் பன்னீர் ஊற்றுக்களையும் ரசித்து மகிழலாம்.*

சுவாமி சிவானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனை வழி

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா

நாதல்ய யோகம் அல்லது நாம பஜனை என்பது பக்த ஜனங்களுடைய சித்த விருத்திகளை இருதய மருதமான ஆத்ம நாதத்தில் லயப்படுத்தி ஒடுக்குவதற்குரிய ஒரு லலிதமான ஆத்ம சாதனை.

எய்யும் அம்பு கூரியதானால் குறியில் ஆழமாய்த் தைப்பது போன்று கூர்மையான மனம் உடையவர்களால் தான் இறைவன் என்ற குறியைத் தவறாமல் அடைய முடியும்.

மனோலயம் – அதில்தான் மனம் ஒடுங்கிக் கூர்மை பெறுகின்றது. தீட்சா முறைகளும், கடினமான சாதனைகளும் இன்றி பாலர்களில் இருந்து வயோதிபர்கள் வரையும் பாடிப் பாடியவாறு மனம் இறைவன்பால் லயித்து ஒடுங்குவதற்கேற்ற எளிதான மார்க்கந்தான் பஜனை.

சர்வ சராசரங்களிலும் ஒலிக்கின்ற ஓம் என்ற பிரணவ சத்தத்தை நாதம் என்றழைக்கின்றோம். பிராணிகளை உயிர்ப்பிக்கின்ற இந்த நாதம் மனிதருடைய மூலாதாரத்திலிருந்து உச்சிக் கமலம் வரையில் இருக்கும் சுழுமுனை துவாரம் வழியில் அமைந்து ஆறு ஆதார சக்கரங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதமான ஒலிபேதங்களுடன் ஒலிக்கின்றது.

சக்கரங்கள் என்றால் சில்லுகள் என்று அர்த்தம். வாகனம் ஓடுவதற்கு சில்லுகள் எவ்வாறு பயன்படுகின்றனவோ அவ்வாறே சரீரமாகிய வாகனத்தின் போக்கு வரவுக்கு இந்த ஆறு சில்லுகளும் ஆதாரமாயிருக்கின்றன.

### பிரதான சக்கரம்:

ஆதார சக்கரங்களில் பிரதானமானது ஹிருதய ஸ்தானத்தில் அமைந்திருப்பதாகிய அனாகதச் சக்கரம். சப்த சுத்திச் சாளனமாகிய அனாகதச் சக்கரத்தில் நின்று எழும் ஹ்ரீம் (HREEM) என்ற அனாகத நாதத்தில் மனதை லயப்படுத்தினால் தேனுண்ணும் வண்டு மலரின் மணத்தில் அக்கறையற்றிருப்பது போன்று சாதகனுடைய மனம் பிரபஞ்ச வாசனையற்று வர்ணாதீதமான அனாகத நாத சுகத்தில் சதா லயித்திருக்கும்.

★ நமது குற்றம் பிறர் குற்றமாவதில்லை.

உணர்ச்சி வசத்தால் அலைமோதிக் கொண்டிருக்கும் மனமுடையவர்கள் எடுத்த எடுப்பில் தியானத்தில் மனதை நிலைநிறுத்தவோ அல்லது கடுமையான நியமங்களோடு கூடிய பிராணாயாம பிரத்தியாகார தாரணைகளின் வழியே குண்டலினி சக்தியை எழுப்பி அனாகத நாதத்தைக் கேட்பதற்கோ அருகதை யற்றவர்களா யிருக்கின்றனர்.

பரம சுகமுடைய இந்தத் திவ்விய நாத சுவையில் ஒரு குறிக்கப்பட்ட நேரம் மனம் லயிக்குமேயானால் நாதத்தின் உள்ளேயிருக்கும் இறையொளியாகிய உள்ளொளி சாதகனுடைய மனக் கண்ணில் ஒளிரும்.

பிராப்த கர்ம வினைகளைத் தீர்த்து ஜீவனை ஜீவன் முக்தனாக்கும் இறையொளி தரிசனந்தான் நாதலய யோகமாகிய நாம பஜனையின் குறிக்கோள்.

செவிப் புலனாகாததும் ஒடுங்கிய மனதால் மாத்திரம் கிரகிக்கக் கூடியதுமாகிய அதி சூக்குமமான அனாகத நாமத்தைக் கேட்டு அதில் மனதை லயப்படுத்துவதற்கு இரண்டு விதமான சாதனா மார்க்கங்களிருக்கின்றன.

ஒன்று குண்டலினி யோகம் மற்றது நாத லய யோகமாகிய நாம பஜனை.

### கலியுகத்தில்:

மனிதர் இப்பொழுது சதுர்வித யுகத்தின் கடைசி யுகமாகிய கலியுகத்தின் மத்திய பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கலியுகத்தில் மனிதருடைய மனம் மாத்திரையில் உணர்ச்சி வசப்பட்டுச் சலனம் அடைவதால் கலியுகமென்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது.

உணர்ச்சி வசத்தால் அலைமோதிக் கொண்டிருக்கும் மனமுடையவர்கள் எடுத்த எடுப்பில் தியானத்தில் மனதை நிலைநிறுத்தவோ அல்லது கடுமையான நியமங்களோடு கூடிய பிராணாயாம பிரத்தியாகார தாரணைகளின் வழியே குண்டலினி சக்தியை எழுப்பி அனாகத நாதத்தைக் கேட்பதற்கோ அருகதை யற்றவர்களா யிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமல்ல. இப்பேர்ப்பட்ட தீர்க்கமான உள்ளப் பயிற்சிக்கு நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கும் ஜீவிதக் கிரமங்களும், சமூதாய சூழ்நிலைகளும் சாதகமாக அமையவும் இல்லை.

ஆகையால் கால தேச வர்த்தமானங்களுக்கு இசையக் கூடிய பஜனை மார்க்கந்தான் கலியுகத்திற்கேற்ற ஆத்ம சாதனை.

ஒளிபு மறைபின்றி அனைவரும் ஒன்றுசேர்ந்து இசைச் சுகத்துடன் அப்பியாசித்துக் கடைத்தேறுவதற்குரிய ஒரு உத்தம சாதனம் பஜனை.

பஜனை முடிவில் இதுவரையில் தேங்கி நின்ற மனக் கிலேசங்களுக்கு சமனம் வந்திருப்பது போன்ற மனத் திருப்தியும் சொல்ல முடியாதவொரு உட்சுகமும், சாந்தியும் கிடைத்திருப்பது போன்ற அனுபவமும் இருக்குமேயாகில் பஜனையில் நற்பயன் அடைந்து வருவதாக அனுமானிக்கலாம்.

### பஜனைக்கு உகந்த நேரம்:

பஜனைக்குத் தேர்ந்தெடுக்கும் இடம் மிகத் தூய்மையானதும், தெய்வீக உணர்வுகளைத் தூண்டிவிடக் கூடிய புனித சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும், காற்றோட்டமும், வெளிச்சமும் உடையதாயிருக்கவும் வேண்டும்.

மனதில் இயற்கையாகவே அமைதியும், சாந்தமும் நிலவக் கூடிய உதயம் அல்லது அஸ்தமன காலம் பஜனைக்கு உகந்த நேரம்.

பஜனையில் கலந்து கொள்ளுகின்றவர்கள் எல்லாம் தூய்மையான மனத்துடன் ஸ்தலத்திற்கு வந்து நிசப்தமாய் அமர்ந்திருத்தல் வேண்டும்.

பஜனை ஆரம்பிக்கும் நேரம் வந்ததும் அனைவரும் எழுந்து நின்று மங்கள இசையுடன் தெய்வீகச் சின்னங்களுக்குத் தீபாராதனை செய்து குரு வணக்கமும், இறை வணக்கமும் முடித்து உடலை நேராக நிமிர்த்தி வைத்து அசைவற்றிருக்க வேண்டும்.

கண்களை முற்றாக மூடியோ அல்லது அரைக்கண் பார்வையுடன் இருப்பதோ மன ஒருமைப்பாட்டிற்கு அனுகூலமாயிருக்கும்.

பஜனைக்கு நாம சங்கீர்த்தனங்கள், நாமாவளிகள், அல்லது ஞான வைராக்கிய உணர்வுகளை ஊட்டக்கூடிய கீதங்களை உபயோகிக்கலாம்.

பாட்டுக்களை ஆத்மீகப் பண்ணிசை முறையில் சுருதி தாளலயத்துடன் பாட வேண்டும்.

இசைச் சுகம் தரக் கூடிய இன்னிசைக் குரல் உடைய ஒருவரோ அல்லது இருவரோ பாடிக் கொடுக்க மற்றவர்கள் அதனை ஒருமைப்பாட்டுடன் ஏற்றுப் பாட வேண்டும்.

பாடும்போது பாட்டின் இனிய ராக ஒலியிலும், பாட்டில் அமைந்திருக்கும் கருத்திலும் மனம் முற்றாக லயித்துப் போகுமளவிற்கு ஒருமுக உணர்வுடன் பாட வேண்டும்.

பஜனைக்கு ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரம் போதுமானது. பஜனை முடிந்தபின் எழுந்து நின்று தீபாராதனை செய்து பிரசாதமும் பெற்று அதே சிந்தனையுடன் அவரவர்கள் இடத்திற்குத் திரும்ப வேண்டும்.

### வாய்ப்பு அளிக்கவும்:

பஜனை நாட்களில் சாத்வீகமான உணவைக் குறைந்த அளவில் உட்கொள்ளுவதால் கூடுதலான பலனுண்டு.

பஜனையின்போது இறுக்கமில்லாத தூய உடைகளையே அணிய வேண்டும்.

பஜனையில் கலந்து கொள்பவர்கள் எல்லாம் கூட்டுறவுக் குடும்ப போகத்துடன் ஐக்கியமாகவும், அன்பாயும் அன்னியோன்னிய உபகாரம் உடையவர்களாயுமிருக்க வேண்டும். பஜனையில் ஆர்வமும், பக்தியும் இருப்பவர்களுக்கு யாதொரு அங்கத்துவ நிபந்தனையும் இல்லாமல் சுதந்திரமாய் அதில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கள் அளிக்க வேண்டும்.

பஜனை முடிவில் இதுவரையில் தேங்கி நின்ற மனக் கிலேசங்களுக்கு சமனம் வந்திருப்பது போன்ற மனத் திருப்தியும் சொல்ல முடியாதொரு உட்சுகமும், சாந்தியும் கிடைத்திருப்பது போன்ற அனுபவமும் இருக்குமேயாகில் பஜனையில் நற்பயன் அடைந்து வருவதாக அனுமானிக்கலாம்.

நாளடைவில் பஜனையில் நின்று உருவாகும் மனாதீத சக்திகள் பக்தர்களுடைய வாழ்க்கையில் எல்லாப் பாங்கிலும் நின்று அருள் பாலித்துக் கொண்டிருப்பதைப் பிரத்தியட்சமாக அறியலாம்.

இறுதியில் பஜனையும், பஜனையில் அடங்கிய கருத்தும், பூஜிக்கின்றவனும் ஒன்றுகலந்து ஏகபாவத்தில் வரும்பொழுது அனாகதத் தொனியின் சித்தி விசேஷங்கள் அனுபூதி மயமாய்த் தீரும்.

கலிகால உபாதையால் நொந்துருகி நிற்கும் மனம் பஜனையின் திவ்விய சக்தியால் அனாகத நாத வெளியிலிருந்து வருசிக்கும்.

நாதமிர்தத் துளிகைகளால் குளிர்மைப்படும்பொழுது தங்க விக்கிரகத்தில் சார்த்திய பட்டுப் பீதாம்பரம் போன்று தளர்ந்த ஜீவிதம் தேஜோ மயமாய் மிளிரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

இறைவன் எங்குமிருக்கிறார். அப்படியானால் அவருக்கு ஆலயங்கள் கட்டுவானேன் – என்ற கேள்வி எழலாம். நமக்குத் தெரியும் – ஆண்டவன் எங்கும் எதிலும் இருக்கிறான் என்று. ஆனாலும் அந்தக் கருத்து நம் மனதில் வலுவாக இடம் பெறவில்லை. அன்றாட செயல்களிலும் இந்தக் கருத்துப் பிரதிபலிப்பதில்லை. ஒருவன் எப்போதும் கடவுள் சிந்தனையோடு இருப்பானாகில் அவன் எப்படிப் பொய் பேசுவான், கெட்ட காரியங்களைச் செய்வான்?

கடவுள் எங்கும் இருப்பாரானால் அவர் எப்படி நமக்கு உதவுவார்? ஏதாவது ஒரு வகையில் கடவுளின் கருணைக்காக நாம் ஏங்குகிறோம். ஆகவே நாம்அவனை வழிபட வேண்டும். அவன் கருணையைப் பெற வேண்டும். ஆனால் எப்படி? ஆகம சாஸ்திரங்கள் இது எப்படி சாத்தியம் என்பதை நமக்குக் கூறுகின்றன. சூரிய ஒளியில் ஏராளமான வெப்பம் உள்ளது. சூரிய ஒளியில் ஒரு துண்டுத் துணியை வைத்தோமானால் அது தீப்பிடித்து எரிவதில்லை. ஆனால் ஒரு லென்ஸை சூரியனுக்கு நேரே பிடித்து, ஒளியை லென்ஸ் மூலம் கூட்டிக் குவித்து துணியின் மீது விழும்படி செய்தால், சிறிது நேரத்தில் துணி 'குப்' பென்று தீபற்றி எரிவதைப் பார்க்கிறோம். இதேபோல மின்சக்தி எங்கும் உள்ளது. ஆனால் அதை நமது தினசரிக் காரியங்களுக்குப் பயன்படுத்த, அந்தச் சக்தியை வரையறுக்கப்பட்ட வழியில் செலுத்த ஜெனரேட்டர் வேண்டும். தேவையான இடங்களுக்கு அதை விநியோகிக்கும் அமைப்பு வேண்டும். இதேபோல, எங்கும் நிறைந்துள்ள இறைவனின் அருளைப் பெற, நாம் கோயில்களைக் கட்டியுள்ளோம். இறைவனின் சக்தியை – சுலபமாக நாம் பெற – விக்கிரகங்களை மந்திரங்களில் கட்டுப்படுத்தி வைத்துள்ளோம்.

நமது ஆலயங்களில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்துள்ளோம். அவற்றில் தெய்வ சாந்நித்யம் உள்ளது. சிலையிலும் ஒரு புனிதத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. சிற்பி குறிப்பிட்ட ஒரு துண்டுக் கல்லைச் செதுக்கிக் கொண்டிருக்கிறார். கல் கடவுளின் வடிவச் சிலையாகி முழுமை பெற்றதும் அதில் ஒருவகை தெய்வீகத்தன்மை வந்துவிடுகிறது. சிலநாள் முன்பு வரை வெறும் கல்லாக இருந்தது. சிலை வடிவம் பெற்றதும் – அபிஷேகம், அர்ச்சனை, தீபாராதனை முதலியன சிலாரூபமான மூர்த்தத்துக்கு செய்யப்பட்டதும் – அதற்குத் தெய்வீகசக்தி வரப்பெற்று சைதன்யத்தை அடைகிறது. நமது விக்கிரகங்களில், சிலைகளில் நாம் தெய்வீகத்தைக் காண்கிறோம். ஆகவேதான் அவற்றுக்கு நாம் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம் இன்னும் பலவகை உபசாரங்களைச் செய்கிறோம்.

நமது ஆலயங்களில் பூஜா காலத்தில் பெரிய மணியை அடித்து ஓசை எழுப்புவார்கள். இது ஏன்? ஆலய வளாகத்தில் உள்ள கெட்ட ஆவிகளை விரட்டுவதற்காக; கெட்ட ஓசைகளும் வம்புப் பேச்சுக்களும் காதில் விழாதிருக்க; வீடுகளில் மிகப்பெரிய கண்டாமணி இருப்பதில்லை; சிறுமணியையே பூஜையின்போது பயன்படுத்துகிறோம். இசைக்கருவிகள் போன்ற உபசாரங்களையும் வீட்டுத் தெய்வங்களுக்கு நாம் அளிப்பதில்லை. வெறும் அட்சதையை மட்டும் தூவி வழிபடுகிறோம். வீட்டில் நாம் செய்யும் பூஜை நம்முடைய நல்வாழ்வுக்காக. நமது வசதி, மனப்போக்கு இவற்றுக்கு ஏற்றவாறு வீட்டில் பூஜைகளைச் செய்கிறோம். ஆனால் கோயில்களில் செய்யப்படும் பூஜை நமது சமூகம் முழுவதற்கும் நன்மைக்காக. ஆகவே அதில் தடபுடல்கள், இசைக் கருவிகளின் ஓசை, இனிய குரலில் பாடுதல், உற்சவ காலங்களில் விக்கிரகங்களை அலங்கரித்து வீதிகளில் வலம்வருதல், வாணவேடிக்கை எல்லாம் உண்டு.

சிலநாள் முன்பு வரை வெறும் கல்லாக இருந்தது. சிலை வடிவம் பெற்றதும் - அபிஷேகம், அர்ச்சனை, தீபாராதனை முதலியன சிலாரூபமான மூர்த்தத்துக்கு செய்யப்பட்டதும் - அதற்குத் தெய்வீகசக்தி வரப்பெற்று சைதன்யத்தை அடைகிறது. நமது விக்கிரகங்களில், சிலைகளில் நாம் தெய்வீகத்தைக் காண்கிறோம். ஆகவேதான் அவற்றுக்கு நாம் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம் இன்னும் பலவகை உபசாரங்களைச் செய்கிறோம்.

★ பாகற்காய் போன்ற கசப்பான உணவுகளையும் நாம் விரும்பி உண்பதுபோல வாழ்க்கையின் கசப்புகளையும் விரும்பி ஏற்கப்பழகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்துக்குப் பலவகை உபசரணைகள் செய்யப்படுகின்றன. வாழ்த்துப் பாடல்களைப் பாடுவது, வேத பாராயணம் செய்வது, மௌனமாக தியானித்தல் இப்படிப் பலவற்றுக்கும் வாய்ப்பு உண்டு. அரசர்க்கு அரசர் – ராஜாதி ராஜா என்று கடவுளைக் கருதுகிறோம் நாம். ஆகவேதான் பலவகை உபசாரங்கள் – குடை, சாமரம் இசைக்கருவிகள், வாகனங்கள் இப்படியாக. இவை யெல்லாம் அரசருக்கு உரிய உபசாரங்கள். விக்கிரங்களில் உள்ள தெய்வ சாந்நித்யம் அவற்றை நாம் வழிபடும்போது நம் வறுமையை, பாவத்தை விரட்டுகிறது. நம் ஆலயங்களிலுள்ள தெய்வீகச் சக்திபெற்ற மூர்த்தங்கள் அழகின் அவதாரங்களும் கூட. ஆகவே தியானிக்க உகந்ததாக இருக்கிறது. நமது எண்ணங்கள் உயர்ந்ததாக இருக்குமானால் நம் விக்கிரக வழிபாடும் அதே உயர்ந்த நிலையில் இருக்கும். ஆகவே உன்னதமான மகிழ்ச்சியை நாம் அடைவோம். இந்தக் கருத்திலேயே நாம் விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்கிறோம் – ஆபரணங்களைக் கொண்டு அலங்கரிக்கிறோம். இவ்வகை வழிபாடு இந்து மதத்தில் மட்டுமே சாத்தியமானது.

'ஏன் என் குறைகளை காது கொடுத்து கேட்க மாட்டேன் என்கிறாய்; என் கஷ்டங்களைக் காண உனக்குக் கண்ணில்லையா?' என்று இப்படி யெல்லாம் ஆண்டவனிடம் கேட்கலாம்.

சாதாரண மனிதனுக்கு விக்கிரக வழிபாடு நம் மதத்தில் மிக முக்கியமானது. ஒரு விக்கிரகத்தின் முன் நாம் சிரம் தாழ்த்தி வணங்கும்போதோ, சிலைவடிவிலுள்ள கடவுளைப்பிரார்த்திக்கும் போதோ அது வெறும் கல் என்ற நினைப்பே நம் மனதில் எழுவதில்லை. சிலையிலுள்ள மூர்த்தம் இவ்வுலகை உருவாக்கியவர் – காப்பாற்றுகிறவர் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. கடவுளிடம் பக்தி அதிகரிக்க – அன்பு – பக்தி – பாபங்களை வெற்றி கொள்ளவோ அல்லது குறைக்கவோ அவனுக்கு உதவுகிறது.

சாதாரண மனிதனுக்குத் துன்பங்களைத் தாங்கும் மனோபலமோ, ஆற்றலோ இருப்பதில்லை. ஆனால் ஈசுவர பக்தியினால், துன்பங்களை எதிர் கொள்ளவும் அவற்றைத் தாங்கும் மனோபலமும் பெறுகிறார்கள். இதற்காகவே சாதாரண மனிதன் ஆலயங்களுக்குப் போகிறான். அங்கு சென்று பிரார்த்தனை செய்ததும் அவனுக்கு ஒரு மனஅமைதி ஏற்படுகிறது. ஒருவன் தன் துன்பங்களைப் பற்றி மற்றவனிடம் கூறும்போது, அவன் அவற்றைச் சிறிது நேரம் கேட்டபின், தன் கஷ்டங்களை இவனிடம் விவரிக்கிறான். யாரும் அனுபவிக்காத துன்பங்களைத் தான் அனுபவித்ததாகக் கூறுகிறான். ஒருவரின் கஷ்டங்களை மற்றவரிடம் கூறிக் கொள்வதினால் – கேட்பவனும் துன்பப்படுபவனாதலால் துன்பங்களைப் போக்கும் வழி கிடைப்பதில்லை. ஆகவே நாம் ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனிடம் முறை யிடுகிறோம். நமது துன்பங்களையும் துயரங்களையும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அவரிடம் கூறிக் கதறலாம்.

மனிதர்களிடம் இப்படிக் கூறுவோமானால் அவர்கள் நம்மை சிறிது நேரத்தில் திட்டத் தொடங்குவார்கள். அல்லது, நாம் தொடர்ந்து நம் துயரங்களைக் கூறினால் அடித்து விரட்டவும் செய்வார்கள். ஆனால் ஆலயத்தில் ஆண்ட வனிடத்தில் நம் விருப்பப்படி எதையும் கூறலாம். 'ஏன் என் குறைகளை காது கொடுத்து கேட்க மாட்டேன் என்கிறாய்; என் கஷ்டங்களைக் காண உனக்குக் கண்ணில்லையா?' என்று இப்படியெல்லாம் ஆண்டவனிடம் கேட்கலாம். 'உன் அருளை, கருணையை எனக்கு ஏன் உடனே வழங்கவில்லை?' என்றும் உரிமையோடு கேட்கலாம். இப்படிப் பிராத்தனை செய்து விட்டு வெளியே வரும்போது நமக்கு ஒருவகை மன அமைதி ஏற்படும். இறைவனிடம் அதிகமாக முறையிட, முறையிட நமது மனத்தில் அமைதியும் அதிகமாகும்.

மன அமைதி தரும் ஆற்றல் சகுண (உருவ) வழிபாட்டுக்கு உண்டு. காரணம் – ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள விக்கிரகங்களில் சைதன்யம் உள்ளது. ஆலயத்திலுள்ள ஆண்டவனின் முன்னால் நமது துன்பங்களைக் கொட்டித் தீர்ப்பதால் – சொல்லி அழுவதால் – நமக்குக் கொஞ்சம் மன நிம்மதி ஏற்படுகிறது. அதனால்தான் கோயில்களுக்குச் செல்லும் பழக்கத்தையும் பெற்றிருக்கிறோம்.

சிலர் ஆலயங்களுக்குப் போவதில்லை. ஆனால் அவர்கள் ஆற்றங்கரைக்கோ அல்லது வேறு தனிமையான ஓர் இடத்துக்கோ சென்று சிறிது நேரம் மனம் விட்டு அழுதுவிட்டு மன அமைதி அடைந்து திரும்புவார்கள். துன்பப்படுபவன், தன் முறையீட்டுக்கு எதிர் விளைவு இல்லாத இடங்களையே நாடிப்போகிறான். ஒருவன்

★ மனதின் செயல்நிலையிலேயே துயரமும் அமைதிக்குறைவும் உள்ளன.
ஆழ்மனத்திற்கு இறங்கிச் செல்லும்போது பேரானந்தமே அநுபவமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரனிடம் முறையிட்டால் – பிரார்த்தித்துக் கொண்டால் – அவனுக்கு மன அமைதி ஏற்படுகிறது.

வீட்டில் நாம் செய்யும் பூஜை நமக்கும் நம் குடும்பத்தின் க்ஷேமத்துக்காக. ஆனால் ஆலயங்களில் செய்யப்படும் பூஜை சமூகம் முழுவதுக்குமான நலனுக்காக. ஆகவே ஆலயங்களில் ஒருவருடைய சொந்த நலனுக்கான பூஜை நடத்துவதற்கு மார்க்கமே இல்லை. ஆகவே தனி மனிதனுடைய வழிபாட்டு முறைகளை ஆலயங்களில் புகுத்த வழி கிடையாது.

விக்கிரகங்கள் ஆகம சாஸ்திரங்களின் படி ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. வழி படுவதற்கான விதி முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. பூஜைகள் – அதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள குழுக்களால் தான் நடைபெறுகின்றன. இந்த விதிமுறைகள் கிராம தேவதைகளிலிருந்து பெரிய தெய்வங்களான விநாயகர், சுப்ரமணியர், விஷ்ணு, சிவன் ஆகிய அனைவருக்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆலயம் தெய்வம் உறையும் இடமாதலால் கடவுளிடம் உள்ள நமது பக்தியை வெளிப்படுத்த பல காரியங்களைச் செய்கிறோம். மகத்தான முறையில் அபிஷேகம் செய்விக்கிறோம். விக்ரகங்களுக்கு ஆடை ஆபரணங்களால் அலங்காரம் செய்விக்கிறோம். ஆலயத்தின் அழகு அதிகரிக்க, ஆலய மண்டபங்களில் சித்திரங்களையும் சிலைகளையும் நிறுவுகிறோம். உத்ஸவ காலங்களில் தெய்வத் திரு உருவங்களை அலங்கரித்து ஊர்வலம் விடுகிறோம். வாண வேடிக்கைகள் காட்டுகிறோம்.

ஆண்டவனுக்கு நைவேத்தியம் – படையல் செய்வது, உண்டியலில் பணம் செலுத்துவது இவையெல்லாம் கடவுள் நமக்குச் செய்துள்ளவற்றுக்கு நன்றியாகத்தான். நம்மால் ஒரு புல்லையும் உருவாக்க முடியாது. ஆண்டவனுக்கு ஏதாவது காணிக்கை செலுத்தினோமானால், அது நமது மனநிம்மதிக்கும் திருப்திக்கும்தான். நமக்கு அனைத்தையும் அளித்திருப்பவர் கடவுளே. ஆகவே அவருக்குப் படைக்காமல் – நைவேத்தியம் செய்யாமல் – நாம் உண்போமானால் அது மகத்தான பாபமும் நன்றி இல்லாச் செயலுமாகும். மிகச் சிறந்ததை ஆண்டவனுக்கு அளித்து, அதன் பிறகே நாம் அதை ஏற்க வேண்டும். எல்லோராலுமே வீட்டில் பூஜை மற்றும் பல காரியங்களைச் செய்ய முடியாது. உபசாரங்களைக் கடவுளுக்கு அளிக்க முடியாது. ஆலயங்களை உருவாக்கி இருப்பதும் இதற்காகவேதான்.

தினமும் கோவிலுக்குப் போவதா வேண்டாமா என்பதில் சிலருக்குச் சந்தேகம். ஒவ்வொருவரும் தினமும் கோவிலுக்குப் போகத்தான் வேண்டும், இதில் ஐயப்படுவதற்கு இடமே இல்லை. முன் காலத்தில் மக்கள் காலை, மாலை, இரவு வேளைகளில் ஆண்டவனுக்குப் பூஜா காலத்தில் அடிக்கப்படும் கோயில் மணியோசையைக் கேட்காமல் வீட்டில் உணவருந்த மாட்டார்கள்.

ஆலயங்களில் தெய்வீகத் தன்மையை வளர்க்க, காலா காலத்தில் பூஜை முதலியவை நிகழவும், ஆலய வழி முறைகள் நன்கு நடைபெறவும் நாம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆலய வளாகம் தூய்மையாக இருக்கவும், தினமும் கோயில் விளக்கு எரியவும் நாம் கவனிக்க வேண்டும்.

நமக்கு அனைத்தையும் அளித்திருப்பவர் கடவுளே. ஆகவே அவருக்குப் படைக்காமல் - நைவேத்தியம் செய்யாமல் - நாம் உண்போமானால் அது மகத்தான பாபமும் நன்றி இல்லாச் செயலுமாகும். மிகச் சிறந்ததை ஆண்டவனுக்கு அளித்து, அதன் பிறகே நாம் அதை ஏற்க வேண்டும். எல்லோராலுமே வீட்டில் பூஜை மற்றும் பல காரியங்களைச் செய்ய முடியாது. உபசாரங்களைக் கடவுளுக்கு அளிக்க முடியாது. ஆலயங்களை உருவாக்கி இருப்பதும் இதற்காகவேதான்.

கர்ப்பூர ஹாரத்தியைக் காண்பதற்காக மட்டுமே என்று வெறும் கையுடன் கோயில்களுக்குப் போகக்கூடாது. தாங்கள் கொண்டுபோனதைக் குருக்களிடம் கொடுத்து கடவுளை தரிசனம் செய்து, ஈசனுக்கு முதுகைக் காட்டாமல் திரும்ப வேண்டும்.

இரு கரங்களையும் கூப்பியபடி, துதிப் பாடல்களைக் கூறியவாறு மூன்றிலிருந்து 21 தடவைகள் – ஒற்றைப்படை எண்களாக இருப்பது நல்லது – பிரதட்சணம் செய்ய வேண்டும். இதேபோல நமஸ்காரம் கீழே விழுந்து வணங்குதல் – செய்யும் போதும் ஈசனுக்கு ஒற்றைப்படை எண் வரிசையில் செய்ய வேண்டும். 3 லிருந்து 21 க்குள் தேவியை நான்குமுறை நமஸ்கரிக்க வேண்டும். நமஸ்காரம் செய்தபின் பிரதட்சிணம் செய்து வீடு திரும்ப வேண்டும்.

இந்த நியமங்களெல்லாம் – விதிகள் – நம்முடைய நல்வாழ்வுக்கும் ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கவுமே வகுக்கப்பட்டுள்ளன. இந்த விதி முறைகளைப் பின்பற்றி பாரம்பரியமிக்க நமது ஆலயங்களின் புனிதத் தன்மையைக் காப்பாற்றி வளர்ப்பது நமது கடமையாகும்.

★ கடமைகளை நெறிப்படுத்தி பொறுப்புணர்ச்சியுடன் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள்!

# மூன்று 'ந' க்கள்!

நீங்கள் வெற்றியடைய விரும்பினால் மக்களிடம் நீங்கள் வெற்றி பெற வேண்டும். நீங்கள் தனியாக ஒரு இடத்தில் பூமியைத் தோண்டி தங்கம் கண்டு பிடித்தாலும் மக்கள் தான் அந்த தங்கத்தின் மதிப்பைத் தீர்மானிக்கப் போகிறார்கள். விலை கொடுத்து அதை வாங்கப் போகிறார்கள்.

வியாபாரத்திலும் மற்ற உங்கள் எல்லா முயற்சிகளிலும் மக்களின் எதிர்கொள்ளலே உங்கள் வெற்றியை நிர்ணயிக்கும் உங்களை வெற்றிப்படிகளில் ஏற்றப் போகிறவர்கள் பிற மனிதர்களே, உங்கள் பளுவை நீங்கள் குறைத்துக் கொண்டு மற்றவர்கள் உங்களைத் தூக்கி விட நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்.

நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க விரும்பினால் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். தனிப்பட்ட மகிழ்ச்சி ஆழமற்றது பூரண திருப்தி அளிக்காது. அப்படி மகிழ்ச்சி அடைந்ததாகச் சொல்லிக் கொள்பவர்களைக் கேட்டுப் பாருங்கள்.

பிற மனிதர்களின் சகவாசமும் அவர்கள் நேசமுமே உங்களுக்கு முழுத் திருப்தி தரும் மகிழ்ச்சியை அளிக்கும்.

'ந' என்ற எழுத்தில் தொடங்கும் மூன்று குணங்களை நீங்கள் போற்றிப் பின்பற்ற வேண்டும்.

அந்த மூன்று – 'ந'க்கள் இங்கு தரப்படுகின்றன. பிறருடன் நேரில் பழகும்போது, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போது, பிறருக்குக் கடிதம் எழுதும்போது நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று வழி முறைகள்.

**1) எப்பொழுதும் நன்றி சொல்லுங்கள்.** இது மிகச் சுலபம். தொடர்ந்து பழக்கத்திற்குக் கொண்டு வந்து விடலாம். பிறர் உங்களுடன் பேச நேரம் ஒதுக்கினால், உங்கள் கடிதத்தை படித்துப்பார்க்க ஒப்பு கொண்டால் உங்கள் சிறு தேவையை பூர்த்தி செய்தால் எதற்கும் நீங்கள் நன்றி சொல்வதைப் பழகிக் கொள்ளுங்கள். பின்னால் பெரிய விஷயங்களுக்கும் இது உதவும். எப்பொழுதும் நன்றி சொல்பவராக உங்களைப் பிறர் அறியட்டும்.

மனிதர்கள் அடிமனத்தில் பிறரால் பாராட்டப் படுவதை விரும்புகிறார்கள். நீங்கள் நன்றி சொல்லும் போது அவர்களின் உள் மனத் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே இது நட்பை வளர்ப்பது மட்டுமன்றி. ஆழமான, நிரந்தரமான பலனைத் தருகிறது.

**2) எப்பொழுதும் நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்துங்கள்.** உங்கள் நல்லெண்ணத்தை உங்கள் நண்பர்களோ, ஏன் குடும்பத்தினரோகூட அவர்களாகவே புரிந்து கொள்வார்கள் என்று விட்டு விடாதீர்கள். அவர்களிடம் உங்கள் நல்லெண்ணத்தைச் சொற்களால் தெரியப்படுத்துங்கள். செயல் வடிவமாக நல்லெண்ணத்தை அடிக்கடி எடுத்துக்காட்டுவதும் அவசியம். ஒவ்வொரு வாய்ப்புக் கிடைக்கும் போதும் சொல்லிக்காட்டுவது அதை விட முக்கியம்.

உங்களைச் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும், தொலை பேசியில் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபரிடமும், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபரிடமும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துங்கள். அது உங்கள் வாழ்க்கையில் மந்திரம் போல உதவும்.

**3) நல்வாழ்த்துகளை எப்பொழுதும் கூறியவண்ணம் இருங்கள்.** நீங்கள் பிறர் நல்லபடியாக வாழ்வதை விரும்புகிறீர்கள் என்பதை அவர்கள் தாங்களாகவே உணருவார்கள் என்று விட்டு விடாதீர்கள்.

உங்கள் நல்வாழ்த்துகளை நீங்கள் கூறத் தவறினால் நீங்கள் அவர்களை அலட்சியம் செய்கிறீர்கள் என்று பிறர் உள்மனத்தில் நினைத்துக் கொள்வார்கள். உங்கள் மீதும் அவர்கள் அலட்சிய பாவம் காட்டத் தலைப்படுவார்கள்.

நீங்கள் நேரடியாகச் சந்திக்கும் நபர்களிடம் உங்கள் நல்லெண்ணத்தை நல்வாழ்த்துகளை தெரியப் படுத்துவதோடு உங்கள் ஆளுமை வட்டத்திற்குள் ஆட்படுத்த வேண்டிய நீங்கள் இதுவரை சந்திக்காத நபர்களுக்கும் மனத்தளவில் நல்வாழ்த்துகளை நல்லெண்ணத்தை ஒலிபரப்பிய வண்ணம் இருங்கள்.

உடனடியாக நீங்கள் மூன்று – 'ந' வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

1) எப்பொழுதும் நன்றி தெரிவியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) எப்பொழுதும் நல்லெண்ணத்தை தெரியப் படுத்துங்கள்

3) எப்பொழுதும் நல்வாழ்த்துகள் கூறியவண்ணம் இருங்கள்.

இது உங்களைப் பிரபலப்படுத்தும், வெற்றிக்கு வழிவகுக்கும். மகிழ்ச்சி ஏற்படுத்தும். மேலும், நல்ல விளைவுகள் இதனால் ஏற்படும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நபரிடமும் நீங்கள் நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் இவற்றைத் தெரியப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து செய்யும்போது இது நல்ல பழக்கமாகும். உங்கள் ஆளுமைக்கு மெருகூட்டும். உங்கள் வாழ்நாள் பூராவும் நீங்கள் பிரபலமாக வெற்றியடைய, மகிழ்ச்சி பெற வழிவகுக்கும்.

***நீங்கள் எல்லா நபர்களிடமும் நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் சொல்லும் போது எல்லாரிடமும் மகிழ்ச்சியைப் பரப்புகிறீர்கள். உங்களுக்கு ஆதாயம் விளைவிக்காத நபர்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.***

சுயலாபம் கருதாமல் நீங்கள் இந்த நல்ல பழக்கத்தை மேற்கொள்ளும்போது பலன்கள் தானே வந்து அமையும்.

நீங்கள் விதைப்பது எதுவோ, அதையே அறுவடை செய்யக்கடவீர்கள்.

யாருடனும் பேசும்போதும், அவர்களுக்குத் தெம்பு தரும்படியாகப் பேசுங்கள். நேர்மையான வாழ்த்து, உற்சாகமூட்டும் உபசார வார்த்தைகள், பிறர் அவர்களைப்பற்றி வெளியிட்ட நல்ல அபிப்பிராயங்கள், உங்கள் நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் பிறருக்கு தெம்பு ஊட்ட நீங்கள் சொல்லக்கூடிய விஷயங்கள் ஏராளம் உண்டு.

பிறர் தெம்பு அடையும்வண்ணம் நீங்கள் குறிப்பிடக்கூடிய வித்தியாசமான விஷயங்களைப் பட்டியலிடுங்கள். யாருடனும் எபபொழுது பேசும்போதும் இந்தப் பட்டியல் உங்கள் கவனத்தில் இருக்கட்டும்.

நேரில் பேசும்போதும், தொலைபேசியில் பேசும்போதும் இதைக் கவனத்தில் கொள்ளுங்கள். யாருடன் எப்படிப் பேசினாலும் உங்களால் அவர் உற்சாகம் அடையட்டும்.

சிறிய குழுக்களில் கூடிப் பேசும்போதும் வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ, நேரிலோ, பொதுப்பிரச்சாரங்கள் புரியும் போதும் இது உங்கள் கவனத்தில் இருக்கட்டும். உங்கள் பேச்சைக் கேட்பவர்கள் உற்சாகமுற்றால் அதுவே உங்கள் பேச்சில் கவனத்தை ஏற்படுத்தும். எப்பொழுதும் தன் பேச்சைக் கேட்கும் ரசிகர்களை உற்சாகமூட்டும் பேச்சாளர் விரும்பி எங்கும் அழைக்கப்படுவார்.

பள்ளிக்கூட வகுப்புகளிலும் இதே விதி பொருந்தும், தம் வகுப்புக்கு வரும் மாணவர்களை உற்சாகமூட்டும் ஆசிரியர் பாடம் மட்டும் போதிப்பதில்லை. மனோதிடம் உணர்ச்சிகளை சமனப்படுத்துதல் ஆகிய விஷயங்களையும் கற்றுத் தருகிறார். பாடம் அறிவை மட்டும் வளர்க்கும். உணர்வு நிலை உயர்ந்து மனோதிடம் ஏற்படும்போது ஆளுமையும் கண்ணோட்டமும் சீர்பெறுகின்றன.

தனிப்படவோ, வியாபார ரீதியாகவோ கடிதங்கள் எழுதும்போதும் பெறுபவர் மனம் உற்சாகம் பெறும்படியாக ஏதேனும் எழுதுங்கள்.

மொத்தத் தகவல் – பல காரணங்களால் – மோசமானவையுமாய் இருக்கலாம். ஆனால் கடித இறுதியில் ஒரு புகழ்ச்சி, உற்சாக வரி, நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள் – நேர்மையாய் வெளிப்படுத்துங்கள்.

உங்களால் பிறர் உற்சாகமடையும்படி செய்ய நீங்கள் சிறிது சிந்திக்க வேண்டும், சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். ஆனால் இது பல மடங்கு பயன்விளைவிக்கும்.

உங்களால் பிறர் மட்டும் கூடுதலாய் உற்சாகம் கொள்ள மாட்டார்கள். நீங்களே நல்லபடியாய் அதை உணர்வீர்கள்.

**இன்று நல்ல நாள்! எனவே,**

**நன்றி சொல்லவும்,**
**நல்வாழ்த்துக் கூறவும்,**
**நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும்,**
**ஒரு போதும் மறந்துவிடாதீர்கள்!**

நல்லவராய் இருங்கள், நன்மை செய்யுங்கள், எல்லோரையும் நேசியுங்கள், பெருந்தன்மையும் அன்பும் அறிவும் உடையவராயிருங்கள். உங்கள் குறைகளைக் களைந்து மன பலத்தை கூட்டிக் கொள்ளுங்கள். நல்லவர் நடுவில் வாழுங்கள். உடல் நலம் பேணுங்கள். மரணமே நேரினும் பொய், மோசடி, காமம், கோபம் என்பவற்றுக்கு இடம் கொடாதீர்கள். தினம்தோறும் தியானம் செய்யுங்கள்.

அப்போது ஆன்மீக சாம்ராஜ்யம் உங்கள் கைகளில்.

சுவாமி சின்மயானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனை நிமிர்த்திய அடியார்

வானவரும் காமுறுமாறு எல்லா வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற சோழ நாட்டில் திருக்கடவூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம் அமர்தகடேச்சுரர். பாலனுக்காகக் காலனை உதைத்த புனிதமான தலம் இது. செந்தண்மை பூண்ட அந்தணர்கள் பலர் அங்கு வாழ்ந்தனர்.

உழவர் பயிலும் பண்ணையில் மருதப் பாடலும், மறைக் கிழவர் பயிலும் இடங்களில் சாமப் பாடலும் முழங்கும். எருமைகள் சொரியும் பாலினால் தடாகங்களில் தாமரை தீம் பால் மணம் கமழும். வேள்விச் சாலையில் ஒதுங்கும் மேகங்களில் ஆகுதிப் புகை மணங்கமழும்.

திருவளர் பதியாகிய அத் திருக்கடவூரில் கலயனார் என்ற பெரியவர் வாழ்ந்தார். கடம் என்றால் கலயம் என்று பொருள். கலயர் என்பது சுவாமியின் பெயர். இதுவே இத்தலத்தில் அவதரித்த நாயனாருக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் ஆயிற்று. அவர் அந்தணர் திரு மரபில் வந்தவர். கங்கை சூடிய மங்கைபாகன் மலரடியை இடையறாது சிந்தித்து அனலிடைப்பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகும் அன்பு மிக்கவர்; ஒழுக்கத்தால் உயர்ந்தவர்.

பாலனை ஆட்கொண்டு கூற்றை உதைத்த குன்ற வில்லியார் ஆகிய, அமிர்த கடேசப் பெருமானுடைய ஆலயத்தில், சாலவும் கமழச் சீலமுடன் நாடோறும் குங்கிலியத் தீபமிடும் திருத்தொண்டினை அன்புடன் செய்து, பாபத்தை விரட்டி வந்தார் கலயனார். ஆதலால் அவர் குங்கிலியக் கலய நாயனார் எனப்பட்டார்.

நாயனாருக்கு வறுமை வந்து எய்தியது. வறுமையையும் அவர் பெருமையாகவே நினைத்தார். தமது தூபப் பணியைத் தவறாது புரிந்து கொண்டிருந்தார்.

நாள் செல்லச் செல்ல வறுமை அதிகரித்து நிலங்கள் எல்லாவற்றையும் விற்றுவிட்டார். வீட்டில் உள்ள அசையும் பொருட்களையும் விற்றார். பசியினால் சுற்றமும் மக்களும் பெரிதும் துன்புற்றார்கள். நாயனாரின் மனைவியார் மிகவும் வருந்தி, தமுது திருமாங்கல்யத்தைக் கணவரிடம் தந்து, "சுவாமி! இதை விற்று நெல் வாங்கி வாருங்கள்" என்று கூறினார்.

மனைவியார் கொடுத்த தாலியைப் பெற்றுக் கொண்ட நாயனார் நெல் வாங்கும் பொருட்டுச் சென்றார். வழியில் ஒரு வணிகன் ஒப்பில்லாத குங்கிலியப் பொதியினைக் கொண்டு வந்தான். நாயனார் அவனை நோக்கி, 'இது என்ன பொதி?' என்று வினவினார். 'இது குங்குலியம்' என்றான் வணிகன். அதனைக் கேட்ட நாயனார் அகமும் முகமும் மலர்ந்தார். 'ஐயனுக்கு இடும் குங்குலியம் இதுவாயின் நான் பேறு பெற்றேன். இதனினும் சிறந்த பேறு உண்டோ? இந்தக் குங்குலியத்தை விடுத்து வேறு என்ன பெறுவதற்கு இருக்கிறது? என்று சிந்தித்தார். வணிகனை நோக்கி, "ஐயா! நான் பொன் தருவேன். இப்பொதியினைத் தாரும்" என்று கூறித் தாலியை எடுத்துக் கொடுத்தார். வணிகன் அதனைப் பெற்றுக்கொண்டு குங்குலியப் பொதியைக் கொடுத்தான். நாயனார் அதிவிரைவாக அதனை எடுத்துக் கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றார். உடையவர் பண்டாரத்தில் பொதியைச் சேர்ப்பித்து, உலகினையும், மக்களையும் மறந்து எம்பிரானை நினைத்து, அயரா அன்புடன் வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

சிவபெருமான் திருவருளின்படி குபேரன் கலயநாயனாரது திருமாளிகை முழுவதும் பொன்னும் மணியும் நெல்லும் அரிசியும் குவித்துவைத்தான். பசியினால் களைத்துத் துயிலும் அம்மையார் கனவில் இறைவன் எழுந்தருளி, தமது திருவருளால் செல்வம் நிறைந்த தன்மையை உணர்த்தியருளினார். திருவருட் செயலை எண்ணி எழுந்த அம்மையார், வீடு முழுவதும் பொன்னும், அரிசியும், நெல்லுமாகக் குவிந்திருப்பதைக் கண்டு திருவருளை வியந்து போற்றினார். விடியற்காலையாதலினால் முழுகி, சமையலறைக்குள் சென்று, கணவனாருக்குத் திருவமுது சமைப்பாராயினார்.

"அன்பனே! மிகவும் பசித்திருக்கிறாய்; திருமனைக்குச் சென்று பாலன்னம் புசித்துப் பருவரல் தீர்க" என்று நாயனார்பால் அருளிச் செய்தார் கண்ணுதற் கடவுள். எம்பெருமான் ஆணையைக் கேட்டுக் கைகூப்பி வணங்கினார் கலயனார். இறைவர் ஆணையை மறுக்க அஞ்சி, திருக்கோயிலினின்றும் புறப்பட்டு மாட வீதியில் உள்ள தமது திருமனையினைச் சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தையடைந்த நாயனார் அங்கு இருநிதிக் குவியல்கள் சேர்ந்த செல்வத்தைக் கண்டார். திருமாங்கல்யத்துடன் திகழும் மனைவியாரை நோக்கி, "இவையெல்லாம் எப்படி வந்தன?" என்று கேட்டார். அம்மையார் அவரைத் தொழுது, "எம்பெருமான் திருவருளால் வந்தன" என்று கூறினார்.

"என்னையும் ஒரு பொருளாக மதித்து ஆட்கொண்ட எந்தையின் திருவருள் திறம் என்னே?" என்று கைகூப்பி மெய்மறந்தார் நாயனார்.

நாயனார் மனைவியார் பரிகலம் திருத்தியமைத்து, சிவபெருமானுடைய அன்பர்களுடன் கணவனாரைத் தீபமும் மலரும் கொண்டு வழிபட்டு, இனிய உணவு படைத்து ஊட்டினார். அடியார்களுடன் கலயனார் உண்டு இன்புற்றார். செல்வம் எய்திய நாயனார் சிறப்பு மிக்க அன்னம், நல்ல கறி, பால், தயிர், நெய் முதலியவைகளை அடியார்க்குப் படைத்துப் பசியாற்றி வருவாராயினார்.

திருப்பனந்தாள் என்னும் தலத்தில் தாடகை என்ற அம்மை இறைவரை வழிபடுவதற்காகத் திருமஞ்சனக் குடம் எடுத்துத் திருமுடிமேல் விடத் தூக்கியபொழுது அவிழ்ந்த சீலையை முழங்கையால் தகைந்து திருமுடி எட்டாமல் வருந்தினார் அம்மையார். அப்போது இறைவர் திருமுடி சாய்த்தார். அத்திருவருள் உலகறிந்துய்யச் சிவலிங்கத் திருமேனி வளைந் தேயிருந்தது. அத்திருமேனியை நேர்படச் செய்து வணங்க வேண்டும் என்று அரசன் அன்புகொண்டான். சிவலிங்கத் திருமேனியில் பூங்கச்சினைச் சுற்றி, அதன் முனையில் வலிய கயிறுகளைப் பூட்டி நேர்ப்படுத்த முயன்றான். ஆயினும் திருமேனி நிமிரவில்லை அன்பின் மிகுதியால் வருந்திய மன்னன் தனது சேனைகளையும், யானைகளையும் கொண்டு இழுக்கச் செய்தான். அப்போதும் திருமேனி நிமிரவில்லை. அதனால் இரவும் பகலும் வருந்துவானாயினான். மன்னனது வருத்தத்தைக் கேட்டறிந்தார் குங்குலியக் கலய நாயனார். சிவ மூர்த்தியை செம்மை செய்து வணங்கும் திருநெறியை மேற்கொண்ட மன்னனை விரும்பி, தாமும் சடையப்பரை வணங்க எண்ணினார். இடையிலேயுள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருப்பனந்தாள் வந்தார். மூன்று உலகங்களும் உய்ய முத்தி வளர்க்கும் அந்தணர் வாழும் அத் திருப்பதி வந்த நாயனார், கரையில்லாக் காதலினால் அரசனும், ஆனையும், சேனையும் சிவலிங்கத் திருமேனியை இழுத்து இழுத்துக் களைத்து வீழ்ந்திருப்பதைக் கண்டார். 'யானும் இளைப்புற்று எய்க்கும் இது பெறவேண்டும்' என்று எண்ணினார். பூங்கச்சுடன் சேர்ந்த கயிற்றினைக் கழுத்தில் பூண்டு வருந்தலுற்றார்.

அன்பாகிய நார் கொண்ட கயிற்றினால் திண்மை கொண்ட உண்மையன்பர் இளைத்த பின்னரும், இறைவர் சாய்ந்து நிற்க முடியுமா? கலயனாரடைய ஒருமைப்பாட்டின் பெருமையைக் கண்ட அண்ணலார் நேரே நின்றார். அமரர் ஆர்த்தனர். பூமாரி தூர்த்தனர். அரசனும் ஆனையும் சேனையும் களித்தனர். திருத்தொண்டர் திருவடிமீது அரசன் வீழ்ந்து வணங்கினான். "திரிபுரம் எரித்த மேருமலையை வளைத்த எம்பிரானை நேர்நிலை காணச் செய்தீர். அடியேனும் உய்ந்தேன்; உலகமும் உய்ந்தது" என்று ஏத்தினான். சிவபெருமானுக்குரிய திருப் பணிகளைச் செய்து மன்னன் நீங்கினான்.

குங்குலியக் கலய நாயனார் பின்னரும் சில பகல் வைகி,சடையப்பராம் விடையவரை வழிபட்டுத் திருக்கடவூர் சென்று திருத்தொண்டு புரிந்துவந்தார்.

சீகாழித் தலைவராம் திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசு நாயனாரும், ஒருங்கே சேர்ந்து அடியார் குழாங்களுடன் திருக்கடவூருக்கு எழுந்தருளி வந்தனர். அதுகண்ட நாயனார், அளவிலா மகிழ்ச்சி கொண்டு வணங்கித் திருமனைக்கு அழைத்துக்கொண்டு சென்றார். அன்பின் மிகுதியினால் அறுசுவையுண்டியும் படைத்து, குருவருளும் ஒருங்கே பெற்றனர்.

காலனையும் காமனையும் காய்ந்த கடவூர்ப் பெருமானுக்குக் கலயனார் விருப்புறும் அன்பு மேன்மேலும் பொங்க ஒருப்படும் உள்ளத்தோடும் திருப்பணி பலவும் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார்.

சட்டையின் கையைச் சுருட்டி விட்டுக் கொண்டு, நரம்புகள் புடைக்கும் வண்ணம், முட்டிகளை மடக்கிக் கொணடு நீங்கள் அன்பையும் பக்தியையும் வெளியிடமுடியாது. அதேபோன்று தரையில் முழந்தாளிட்டு கைகளைக் குவித்து, முகத்தை மேல் நோக்கி நிமிர்ந்து இருக்கும் போது கொடுமை, வெறுப்பு, வஞ்சம் ஆகிய உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாது.

சுவாமி சின்மயானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லோர் இணக்கம்!

ஓர் ஊருக்கு ஒரு சாமியார் வந்தார். அவர் நன்றாகப் பேசக்கூடியவர். சத்சங்கத்தைப்பற்றி அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார். அவர் அன்று சில நண்பர்களை அழைத்து, ''நான் ஓர் அற்புதம் செய்து காட்கிறேன்'' என்றார்.

அவர்கள், "என்ன அற்புதம்?" என்று கேட்டார்கள்.

அவர் அவர்களை ஒரு குளத்தங்கரைக்கு அழைத்துச் சென்றார். ஒரு சிறிய கல்லை எடுத்துக் குளத்தில் போட்டார். அது நீரில் அமிழ்ந்துவிட்டது.

"கல் எங்கே?" என்று சாமியார் கேட்டார்.

"நீரில் அமிழ்ந்துவிட்டது."

"கல் நீரில் மிதக்குமா?"

"மிதக்காது."

''நான் மிதக்கச் செய்கிறேன்'' என்று சாமியார் சொன்னதைக் கேட்டு எல்லோரும், "அது எப்படி முடியும்?" என்று தமக்குள் யோசிக்கத் தொடங்கினார்கள்.

சாமியார் உடனே ஒரு பெரிய குண்டுக் கல்லைக் கொண்டு வரச் சொன்னார். சில பேர் அதை உருட்டிக் கொண்டு வந்தார்கள். ''நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டு ஒருமணி கழித்து வாருங்கள். அந்த அற்புதத்தைக் காண்பீர்கள்'' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார் சாமியார்.

அவருடன் இரண்டு சிஷ்யர்கள் மட்டும் இருந்தார்கள். அவர்களிடம் அங்கே கிடந்த பெரிய கட்டையை உருட்டிக் கொண்டு வரச்சொன்னார். அதைக் குளத்திற்குள் உருட்டச் செய்தார். அது குளத்தில் மிதந்தது. அதன்மேல் அந்தக் குண்டுக் கல்லைத் தூக்கி வைக்கும்படி சொன்னார். அவ்வாறே செய்தார்கள். கட்டை சிறிது தண்ணீரில் ஆழ்ந்தாலும், அதன் மேல் இருந்த கல் அமிழவில்லை.

ஒரு மணி நேரம் கழித்து ஊர் மக்கள் வந்தார்கள், சாமியார் செய்யும் அற்புதத்தைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தோடு குண்டுக்கல் ஆழாமல் மிதந்ததைக் கண்டார்கள். ஆனால் ஆச்சரியப்படவில்லை. "இதுதானா?" என்றார்கள்.

''முன்னே போட்ட சிறிய கல் தண்ணீருக்குள் அமிழ்ந்ததா? மேலே மிதந்ததா?'' என்று கேட்டார் சாமியார்.

''அமிழ்ந்து போயிற்று.''

''இந்தப் பெரிய கல்......? அமிழ்ந்ததா?''

''கட்டை மிதக்கிறது, அதன்மேல் கல் இருப்பதனால் கல்லும் நீரில் அமிழாமல் மிதக்கிறது!''

''அப்படியானால் கல் கட்டையாக மாறிற்றா? அதன் கனம் குறைந்துவிட்டதா?''

"இல்லை."

''கல் கல்லாகவே இருந்தாலும் கட்டையின் சார்பினால் நீரின் மேல் மிதக்கிறது அல்லவா?''

"ஆம்."

''இப்படித்தான் நாம் இயல்பாகப் பிரபஞ்சச் சேற்றுள் அமிழ்கின்ற தன்மை படைத்தவராக இருந்தாலும், அதில் அமிழாமல் மிதக்கும் சாதுக்களைச் சேர்ந்தால் அவர்கள் நமக்கும் பிரபஞ்சச் சேற்றில் ஆழாமல் இருக்கும் வழியைக் காட்டுவார்கள்.

சாமியார் பேச்சைக் கேட்டு யாவரும் வியந்தார்கள்.

"கல் தனியாக இருப்பதால் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், குறைந்த கனமுடையதானாலும், தண்ணீரில் ஆழ்ந்து விடும். ஆனால் எவ்வளவு கனமுள்ள கல்லானாலும் மிதக்கும் கட்டையோடு சேர்ந்தால் அதுவும் மிதக்கும். அது போல, எவ்வளவு பொல்லாதவராக இருந்தாலும் நல்லவர்களைச் சேர்ந்தால் அவர்களும் அறியாமை என்னும் நீரில் ஆழ மாட்டார்கள்; சத்சங்கம் அவ்வளவு சிறப்பானது."

---

வெளிப்பொருள் எதுவோ கிடைக்காததால் நமக்குக் குறை வந்து விட்டதாகத் துக்கப்படுவது சுத்தத் தப்பு. நமக்குக் குறையே இல்லை. நமக்குள் நாமே பூரண வஸ்து. நமக்கு அந்நியமாக வெளி ஆனந்தமும் நமக்குள்ளேயே அடக்கம். 'வெளி மாதிரி இருப்பதிலிருந்து தானாக எது வந்தாலும் வரட்டும். சமுத்திரம் நதிகளை அடக்கிக் கொள்வது போல் அவற்றையும் உள்ளே இருப்பதோடு சேர்த்துக் கொள்வோம். எதுவும் வரவில்லையா? அதனால் பாதகமில்லை. ஏதும் வராததால் நமக்கு என்ன குறை? நமக்கு உள்ளேயே இருக்கிற பரமாத்ம வஸ்துவின் வடிவம்தானே வெளியில் இருப்பதெல்லாம்?' என்கிற தெளிவோடு எப்போதும் இருக்க முயலவேண்டும்.

காஞ்சிப் பெரியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது உண்மையான இயல்பை உணர்ந்து கொள்வோமா ?

*சுவாமி சின்மயானந்தா*

வாழ்க்கையின் குறிக்கோளைத் தெளிந்து கொள்ளவும் அதனுடைய தன்மைகளைப் புரிந்து கொள்ளவும் ஆதிகால ரிஷிகள் அதனுடன் மல்லாடியபொழுது, தனித்தனியான அனுபவங்கள் பல சேர்ந்ததே வாழ்க்கை என்று அவர்கள் கண்டார்கள். தனியொரு அனுபவத்தின் உள்ளீட்டையும், நடைமுறையையும் கூர்ந்து கவனித்ததில், அனுபவிக்கிறவன், அனுபவிக்கப்படுவது, அனுபவிப்பது ஆகியவை இல்லாமல் அனுபவம் சாத்தியமில்லை என்று கண்டார்கள். அனுபவிக்கப்படும் பொருள்களால் ஆன உலகத்தைத் தங்கள் ஆராய்ச்சிக் களமாக விஞ்ஞானிகள் தேர்ந்தெடுத்தாற்போல் ஆன்மீக நிபுணர்கள் அனுபவிப்பவனின் உலகத்தை ஆராய்ச்சிக் களமாக எடுத்துக் கொண்டார்கள்.

சாத்திரங்களில் அடங்கியுள்ளவை தற்செயலாக உற்பத்தியானதாகக் கொள்ளமுடியாது. எண்ணத்திலும் சரி, பரப்பிலும் சரி, மெள்ள மெள்ள ஏற்பட்ட ஒரு முதிர்ச்சியை அவை தெளிவாகக் காட்டுகின்றன. ஒருகால் வாழ்க்கையை முழுமையாக ஆராய்ச்சி புரியப் பண்டைய முனிவர்களுக்கு ஒரு தலைமுறையே பிடித்திருக்கக்கூடும். வாழ்க்கையை அப்படியப்படியே கவனித்து அறிந்துகொள்ளும் பொருட்டு அதனின்று ஒதுங்கி நிற்க அவர்கள் தங்களைப் பழக்கிக் கொண்டார்கள். பற்று, விருப்பு, வெறுப்பு ஆகிய களங்கம் நிறைந்த கண்ணாடிகள் மூலம் அவர்கள் வாழ்க்கையைப் பார்க்கவில்லை. தர்க்கம், விஞ்ஞானம் இவற்றின் மூலமாக நோக்கினார்கள்.

ஒவ்வொரு குருவும் தமது குறிப்புக்களைத் தமது சீடர்களுக்கு அளிக்க, அச்சீடர்கள் தங்களுடைய தலைமுறையை ஊன்றிக் கவனித்து, புதிதாக ஏதேனும் கண்டுபிடிக்க நேர்ந்தால் அதையும் சேர்த்து, குரு தந்த ஞானத்தை விரிவுபடுத்தினார்கள். இவ்வாறாக வாழ்க்கையைச் சரியான முறையில் மதிப்பிட்டு, அதன் லட்சியம் எதுவாக இருக்கக்கூடும் என்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டு கடுமையான ஆன்மீகப் பயிற்சி பெற்று, இதற்கெனத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மனிதர்களால் மனித சமுதாயம் வாழையடி வாழையாகக் கூர்ந்து ஆராயப்பட்டு வந்திருக்கின்றது.

மாசற்ற அறிவு வழிகாட்ட, அத்தகையோர் அனுபவிப்பவனைத் தங்கள் ஆராய்ச்சிக் களமாக ஏற்படுத்திக் கொண்டார்கள். அனுபவிப்பவனை – அதாவது தனி மனிதனை – அதாவது புறப்பொருள்கள் அடங்கிய உலகத்தோடு உறவு கொண்டாடி நாளுக்கு நாள் வாழ்க்கை அனுபவங்களை அடையும் மனிதனை அவர்கள் ஆராய்ச்சிப் பொருளாக எடுத்துக் கொண்டார்கள். மனிதனையும் அவனுடைய நடவடிக்கைகளையும் மேலெழுந்த வாரியாகப் பார்த்த அளவில் நம்மில் ஒவ்வொருவருக்குள்ளும் நான்கு தனித் தன்மைகள் இருப்பதையும் ஒவ்வொரு தன்மையும் தன்னுடைய தனி உலகத்திலே இன்பம் தேடுவதையும் அவர்கள் அறிந்து கொண்டார்கள். நம்மில் இருக்கும் உடல், மனம், புத்தி, ஆன்மா என்ற நான்கு தன்மைகளும் தத்தமக்கு ஏற்பட்ட ஒரு தனி உலகத்திலே திருப்தியைக் கோருகின்றன.

'உடல் மனிதனு' க்குத் திருப்தியளிப்பது எப்போதும் 'மன மனிதனுக்கு ஏற்றதாய் இருக்கும் என்று சொல்ல முடியாது. மனத்தின் ஆசையைத் தீர்ப்பதற்காக நீங்கள் ஏராளமான இனிப்புப் பண்டங்களை உண்ண விரும்பலாம். ஆனால் உங்கள் உடலுக்கு நீரிழிவு நோய் இருக்கின்ற காரணத்தால் நீங்கள் சர்க்கரையே சாப்பிடக்கூடாது என்று மருத்துவர் தடுத்திருக்கக் கூடும்.

புத்தியளவிலே லஞ்சம் வாங்குவது கூடாது என்று ஒருவன் தெளிவாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஆசைகளால் துளைக்கப்பட்ட மனம், சமயத்துக்குத் தகுந்த வாதங்களைத் தந்து அந்த ஆசைகளுக்குப் பலியாவது நியாயமே என்று அவனைத் தூண்டக்கூடும். அதாவது நம்மில் ஒவ்வொரு வருக்குள்ளும் பல தலைகளைக் கொண்ட ஒரு நபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதைப் போல் தோன்றுகிறது. ஒவ்வொரு தலையும் தனது ருசிக்கும் தரத்துக்கும் ஏற்றபடி திருப்தியை நாடுகிறது.

சாதாரண மனிதன் வியர்க்க, விறுவிறுக்க உழைத்து, சம்பாதித்து சேமித்து வைத்து, உடலால் புறப்பொருள்களை அனுபவித்துப் பூரண இன்பத்தை அடைய முயல்கிறான். என்ன நடக்கிறது ? நம்மிடத்திலுள்ள ஒரு தலையைத் திருப்திப்படுத்தினால், அதிருப்தியுற்ற மற்றத் தலைகள் சீறியெழுகின்றன. இவ்வாறாக வறண்ட நான்கு தொண்டைகள் வெவ்வேறு விதமான நான்கு பானங்களைக் கோருகின்றன. ஆனால் இருக்கும் கிண்ணமோ ஒன்றுதான். அழியக்கூடிய மூன்று உலகங்களையும் கைப்பற்றிய பின்னரும் இந்த நான்கு தலை ராவணன் அதிருப்தியையே அடைவதில் ஆச்சரியமென்ன?

## வாழ்க்கை வீணா ?

அப்படியானால் வாழ்க்கை ஒரு வீண் முயற்சிதானா ? கருப் பையிலிருந்து சுடுகாடுவரை செல்லும் இன்பமற்ற யாத்திரை தானா? நம்பிக்கை விதைகளை விதைத்து, துயரப் பயிரை அறுவடை செய்யும் சோகப் பண்ணையில் குத்தகை எடுப்பதுதான் வாழ்க்கையா ? சிருஷ்டியின் சிகரம் என்று புகழப்படும் மனிதனுக்கு இயற்கை தரும் ஒரே பரிசு ஏக்கப் பெருமூச்சுத்தானா ?

விடாத விசாரணை, சளைக்காத சிந்தனை இவற்றை மேற்கொண்ட சாத்திர உலக முனிவர்கள், தர்க்கப் புயல்களைச் சமாளிக்க வேண்டியிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சர்ச்சைகள் என்ற அலைகளால் மோதப்பட்ட போதிலும் குழப்பம், முரண்பாடு என்ற அபாயகரமான பாறைகளை நெருங்கிவிடாதபடி அவர்கள் கவனித்துக் கொண்டு, வாழ்க்கை என்ற மாபெரும் கடலிலே தங்கள் யாத்திரையைத் துணிச்சலோடு தொடர்ந்தார்கள். சாந்தியும், அமைதியும், மகிழ்ச்சியும், பேரின்பமும், சக்தியும், பூரணமும், நிறைந்த எந்த புது பூமியை அவர்கள் கண்டு பிடித்தார்களோ, அதுதான் சாத்திரங்களிலே அடங்கியிருக்கின்றது. அவர்கள் கண்ட உண்மைகளின் சாரம், பின்வரும் சந்ததியார் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு வேதத் தொகுப்பாக இறுகியிருக்கின்றது.

வாழ்க்கைக்குப் பொருளையும் வாழ்வதற்கு ஒரு லட்சியத்தையும் தருவன, அம்முனிவர் கண்ட உண்மைகள். அவை அழியாத நம்பிக்கையை இந்து தர்மத்திலே புகுத்தி, எல்லையற்ற அன்பின் ஆறுதலைச் சேர்த்து, ஒரு நிரந்தரச் சாதனையின் அர்த்தத்தை ஊட்டின.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு நான்கு தலைப் பிராணி குடி இருக்குமேயானால், உலகத்து உயிர்கள் எல்லாவற்றிலும் மனிதன்தான் மிகச் சிக்கலானவன். ஆகவே, அவனை ஆராய்ந்து விசாரணை நடத்தி ஊன்றிக் கவனிப்பது சுவையாகவும் உபயோகமாகவும் இருக்குமென்று அந்த மேதைகள் கருதினார்கள். இப்படியாகத்தான் ஆன்ம ஞானிகளும் மதங்களை நிறுவிய தீர்க்கதரிசிகளும் மகாத்மாக்களும் மனிதனை ஆராய்வதையே தங்கள் வேலையாகக் கொண்டார்கள். புலன்களால் உணரக்கூடிய இந்தப் புறவுலகத்திலே அவன் செய்வதையும் பிறவுயிர்களின் செய்கையால் அவன் பாதிக்கப்படும் விதத்தையும் கவனிப்பதோடு அவர்கள் நிற்கவில்லை. அன்றாட வாழ்க்கையில் அவனுள் எழும் உணர்ச்சிகள், எண்ணங்கள், கருத்துக்கள், ஆர்வங்கள் ஆகியவற்றையும் ஆராயப் புகுந்தார்கள்.

## மனிதன் உடல் அல்ல

ஆழ்ந்த உள் ஆராய்ச்சியின் மூலம் அவர்கள் கண்டு பிடித்த உண்மை. மனிதன் ஜடப்பொருளை உறையாகக் கொண்ட ஆவியே தவிர வேறல்ல என்பது. இரட்டைகளும் அவற்றால் விளையும் துக்கங்களும் கொண்ட பனிக்காலக் குளிரில், ஜடப் பொருள் அடுக்குகளைப் போர்த்துக் கொண்டு 'உயிர்' நிற்கும்போது அங்கே மனிதன் தோன்றுகிறான்.

உடல், உயிர்ப்பு, மனம், புத்தி, இன்பம் ஆக இந்த ஐந்து ஜடப் பொருள் உறைகளும் உயிரின் இருப்பிடமாகிய தூய உணர்வை, அதாவது உயிர்ப் பொறி அல்லது பிரக்ஞையைச் சூழ்ந்திருக்கின்றன. எங்கும் நிறைந்திருக்கும் தூய உணர்வே நமது உண்மையான இயல்பு என்பதை உணராமல், ஜடப் பொருள் அடுக்குகளோடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டால் நமக்குள் ஒரு நான்கு தலை அசுரன் இருந்து நம்மை ஆட்டி வைப்பது போல் திண்டாட வேண்டியிருக்கும். பொருள்களால் ஆன புறவுலகம் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கிறது. அது அழிவின் ஓயாத ஊர்வலம். இதை நாம் எல்லோரும் விஞ்ஞானிகள் உள்பட அறியோம். வெளியுலகத்தில் நிரந்தரமானது என்று சொல்லக்கூடிய ஏதேனும் இருக்குமேயானால், அது இந்த ஓயாத மாறுதல்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் மாறும் என்பதொன்றே மாறாத சட்டம். உயிர்கள் இறக்கும் என்பதே இறவாத சட்டம்.

வினாடிக்கு வினாடி நமக்குள் நாம் எப்படி மாறுகிறோம். இப்பொழுது வெறும் உடலாகவும், அடுத்தாற்போல், வெறும் உணர்ச்சிக் கற்றையாகவும், அதற்கு அடுத்தாற்போல் உயிர் துடிப்புள்ள ஒரு மாபெரும் கொள்கையாகவும், எப்போதாவது ஒரொருசமயம், வாழ்க்கையின் விலங்குகளை உடைத்தெறிந்து ஆன்மீக ராஜ்யத்தை வென்று அதற்கு அப்பால் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் அமைதியையும் பூரணத்தையும் அடையத் துடிக்கும் சுடராகவும் நாம் மாறிக் கொண்டேயிருக்கிறோம்.

இவ்வாறாக, பொருள்கள் அடங்கிய வெளியுலகம், மாறிக் கொண்டேயிருக்கும் மரண தாளத்துக்கு ஏற்றபடி நர்த்தனமாட, குழப்பங்கள், தாபங்கள், நாட்டங்கள் இவற்றின் வேகத்தால் உந்தப்பட்டு, மனிதனுடைய உள்ளுலகமும் பித்துப் பிடித்தாற் போல் கூத்தாடிக் கொண்டிருக்கிறது. எப்போதும் மாறிக் கொண்டிருக்கும் இந்த இரண்டுக்குமிடையிலே சாந்தி அல்லது இன்பம் என்ற சமநிலையை ஏற்படுத்த நாம் முயன்றால் முடிகிற காரியமா ?

## சோர்வு வேண்டாம்

உபநிடத குருமார்களின் இந்த முடிவுகள் நம் உற்சாகத்தைக் கெடுக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, இந்த உண்மைகள் நாம் துணிச்சலோடு வாழ்க்கையை நெருங்கி, அதைக் கவனத்துடன் ஆராய்ச்சி செய்வதற்கு தூண்ட வேண்டும். வாழ்க்கை அணிந்து கொண்டிருக்கும் கோரமான பயங்கர அங்கிகளைக் கிழித்தெறியவும் புனித ஆன்மாவில் பொதிந்துள்ள அழகைக் கண்டுபிடிக்கவும் நாம் முயலவேண்டும். ஜடப் பொருள் உறைகளுடன் நமக்குள்ள போலிப் பற்றுக்களிலிருந்த தவறான ஐக்கியத்திலிருந்தும் நம்மை விடுவித்துக் கொண்டு, உண்மையில் நாம் நிரந்தரமான இனிய ஆன்மாவே தவிர வேறல்ல என்பதை மறுபடியும் கண்டு கொள்ளவேண்டும். அதற்காக அவர்கள் புத்திசாலித்தனமான தன்முயற்சி வழியொன்றை விளக்கியிருக்கிறார்கள்.

இந்த நிறைவானது இறுதியாக நேர்வதற்கு உதவக்கூடிய முறை, தியானம். ஆகவேதான் ஒவ்வோர் இரவும் நாம் தியானிக்க – இன்னும் சரியாகச் சொல்லப் போனால் தியானிக்கக் கற்றுக் கொள்ள – முயல்கிறோம். தியானத்தால் தீட்டப்பட்டு நிலைநிறுத்தப்பட்ட மனம், புத்தி ஆகிய கருவிகளைக் கொண்டு ஒரு முழுமையான உள் ஆராய்ச்சியை நடத்தி, நமது உண்மை இயல்போடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளக் கற்றுக் கொள்கிறோம்.

சுருங்கச் சொன்னால், நம் உண்மை இயல்பை மறுபடியும் அறிவதென்பது தியானப் பயிற்சிகளால் சாதிக்கப்படுகிறது. மாபெரும் ரிஷிகளுடைய பகுத்தறிவுக்கு ஒத்த முடிவுகளை நாம் இன்னும் நன்றாக அறிய அறிய, தியானிப்பது எப்படி என்பதை இன்னும் செவ்வனே தெரிந்து கொள்வோம்.

---

கேள்வி:–

**உலகில் நல்லவர்கள் என்று பிறரால் கருதப்படுபவர்கள், மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள். இதன் விளக்கம் என்ன?**

பதில்:–

இதற்கு ஒரு சிறு கதையை உதாரணம் கூறலாம். இரண்டு சிநேகிதர்கள் ஒரு நாள் கடற்கரையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஒருவன் தெய்வ நம்பிக்கையுடைய ஆஸ்திகன்; மற்றவன் தெய்வ நம்பிக்கையற்ற நாஸ்திகன்.

இருவரும் தம்மையறியாது மணலில் கையை அளைந்தபடியே பேசிக் கொண்டிருந்தனர். நாஸ்திகனுடைய கையில் அந்நேரம் பொற்காசு ஒன்று தட்டுப்பட்டது. ஆஸ்திகனுடைய விரலில் ஒரு தேள் நன்றாகக் கொட்டியது. நாஸ்திகன் இறை நாமத்தை உச்சரிக்கும் ஆஸ்திகனைக் கேலி பண்ணினான். "தெய்வ சிந்தனையால் கிடைத்த பரிசு" என்றான். ஆஸ்திகன் இக்கருத்தை ஏற்க மறுத்தான்.

இதன் உட்பொருள் அறியவேண்டி இருவரும் ஒரு ஞானியிடம் சென்றனர். "பூர்வ ஜென்ம பலனாக அகில உலகம் போற்றும் வண்ணம் செல்வம் படைத்து வாழவேண்டிய நாஸ்திகன், இப்பிறவியில் தெய்வ நிந்தனையுடன் இருப்பதனால், அப்பெரும் பேற்றினை இழந்து விட்டான். அதற்குப் பதிலாக, இச்சிறு பொற்காசுடன் அவனுடைய பேறு முற்றுப்பெற்று விட்டது. இறைவனை மறவாது அவனனுடைய நாமங்களை உச்சரித்து கொண்டிருக்கும் ஆஸ்திகன், ஒரு கொடிய சர்ப்பம் தீண்டி அவ்விடத்திலேயே இறக்க வேண்டிய பிராரப்தம் இருந்தும், அவனுடைய தெய்வ வழிபாட்டின் மேன்மையால், அத்துன்பம் சிறு தேள் கொட்டியதுடன் வலுக் குறைந்து விட்டது. இதுதான் இதன் மெய் விளக்கம் என்று ஞானி இருவருக்கும் விளக்கினார்.

**(ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தாவின் "அமிர்தத்துளிகள்" எனும் நூலிலிருந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம்

சிவபெருமானை ஆன்மாக்கள் அடைந்து உய்வதற்குரிய பரிசுத்தம், அறிவு, அருள் முதலிய வற்றை அங்கங்களாகக் கொண்டு பேரின்பத்தைத் தருவதாகிய சமயம் சைவசமயம் எனப்படும். இதில் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள் முதன்மையானது சைவ சித்தாந்தம் அல்லது சித்தாந்த சைவம் எனப்படும்.

சைவம் என்பதற்குச் சிவபெருமானை உயிர்கள் அடைந்து உய்வதற்குரிய வழிகளைக் காட்டும் சமயம் என்பது பொருள். சித்தாந்தம் என்பதற்கு முடிந்த முடிபு என்பது பொருளாகும். ஆகவே, சைவசித்தாந்தம் என்பதற்கு உயிர்கள் சிவபெருமானை அடைந்து உய்வதற்கு வழிகாட்டும் எல்லாச் சமயங்களிலும் சிறந்ததும், எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதுமாகிய சமயம் என்பது பொருளாம். சித்தாந்தம் என்பதற்கு சித்திக்கப் பெற்ற அல்லது கைவரப் பெற்ற முடிந்த முடிபு எனவும் பொருள் கொள்ளலாம்.

சைவத்தில் பதி–பசு–பாசம் என்னும் முப்பொருள் உண்மை மிகவும் விளக்கமாகப் பேசப்படுகிறது. இவற்றை, இறை, உயிர், தளை எனவுங் கூறுவர். இவை மூன்றும் வேறுவேறாக என்றும் நிலைபெற்று உள்ளவையென இதில் கூறப்பட்டுள்ளது.

## பதி

பதி என்பதற்குக் கர்த்தா எனவும், கடவுள் எனவும், முழு முதல் எனவும், சிவம் எனவும் பொருள் கூறலாம். இதில் கூறப்படும் கடவுளுக்கும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மூன்றில் ஒருவனாகக் கூறப்படும் கடவுளுக்கும் வேறுபாடு உண்டு. இம்மூவர்களுக்கும் முழுமுதற் கடவுளே காரணமாவர். கடவுளைச் சகுணர் எனவும் நிர்க்குணர் எனவுங் கூறுவர். நிர்குணக் கடவுள் குறியும், குணமும் தொழிலும், உருவமும் இல்லாமல் எல்லாவற்றிற்கும் புறம்பாக நிற்கிறார். அப்போது அவரை அகளர் எனவும் கூறுவர். (அகளம்= நிர்குணம்) அகளமாய் நின்ற அறிவரும் அப்பொருளே சகுணமாகி அருளால் வருகின்றது. அது சகுணமாகும் போது எட்டுக் குணங்களையுடையதாய் ஐந்தொழில் இயற்றுகின்றது.

**எட்டுக் குணங்களாவன**

1) தன்வயத்தனாதல்
2) தூய உடம்பினனாதல்
3) இயற்கை உணர்வினனாதல்
4) முற்றும் உணர்தல்
5) இயல்பாகவே பாசங்களில் நீங்குதல்
6) பேரருள் உடைமை
7) முடிவில் ஆற்றலுடைமை
8) வரம்பிலின்பமுடைமை.

இக்கடவுளே உலகிற்குக் கருத்தா; உயிர்களுக்குத் தலைவன்; எல்லாத் தொழில்களையும் இவரே நடத்துகிறார். அத்தொழில் ஐந்து வகைப்படும். இவை, சிருஷ்டி, ஸதிதி, ஸம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் என்பனவாகும், இவற்றைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனவுங் கூறலாம். இத் தொழில்களை நடத்த இச்சை, கிரியை. ஞானம் எனும் மூன்று வகையான சக்திகள் துணைபுரிகின்றன. இந்தச் சக்தியிலிருந்து சிவம் பிரிக்க முடியாத வகையில் கலந்திருக்கிறது சக்தியோடு கலந்த சிவமே ஆலயங்களில் காணப்படுகின்ற சிவலிங்கமாகும்.

சைவம் ஸத்காரியவாதமாகும். ஒவ்வொரு காரியத்திற்கும் முதற்காரணம். துணைக்காரணம் நிமித்த காரணம் எனக் காரணங்கள் மூன்றாகும். ஒரு குடத்தை உண்டுபண்ண மண் மிகவும் அவசியம். அதனைக் குடமாக்க ஒரு தொழிலாளி வேண்டும். அவனுக்கு அதைச் செய்ய கருவிகளும் வேண்டும். குடத்திற்கு மண் முதற்காரணம். குயவன் நிமித்த காரணன். தண்டசக்கரம், துணைக்காரணம், அதுபோல இவ்வுலக உற்பத்திக்கு மாயை முதற்காரணம். இறைவன் நிமித்த காரணன். சக்தி துணைக் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸத்காரியவாதம் என்பதற்கு உள்ளது போகாது, இல்லது வாராது என்பது பொருள். கடவுள் உலகங்களைச் சூன்யத்திலிருந்து படைத்தார் என்பது பௌதீக சாத்திரத்திற்கும் நம்பிக்கைக்கும் பொருந்தாத ஒன்றாகும். உலகம் அழியும்போது அணுவாகி அணு பரமாணுவாகிப்பின் ஒரு நுண்பொருள் ஆகின்றது. இந்த நுண்பொருள் பருப்பொருள்கள் மாய்வதற்கு இடமாக இருப்பதால் இதனை மாய் என்றும், அதிலிருந்தே அனைத்தையும் ஆக்கப்படுவதால் ஆ என்றும் ஆகி மாயா என ஆகின்றது. ஆதலால், உண்மைப் பொருளாகிய மாயையை இறைவன் முதற்காரணமாகக் கொண்டு பராசக்தியின் துணையாகிய துணைக்காரணத்தோடு தான் நிமித்த காரணனாய் அனைத்தையும் படைக்கின்றான் என்று இது கூறுகின்றது. சைவசமய அளவைகள் காண்டல், கருதல், உரை, ஒப்பு, பொருள், அபாவம் என ஆறாம்.

## சிவத்தின் தன்மை

சைவசமயம் கூறும் இறைவனுக்குச் சொரூபநிலை, தடத்தநிலை என இருபெருநிலைகள் உள்ளன. இறைவனைச் சச்சிதானந்தம் என்று அழைக்கிறார்கள். (சத் = அழியாதது. சித் = அறிவுடையது. ஆனந்தம் = இன்பமயமானது.)

இவர் எல்லாம் வல்லவர், தானே தானாய் நிற்பவர். பிறப்பு இறப்பு அற்றவர். பரிசுத்தமானவர். அருளையே உருவாகக் கொண்டவர். இக் குணங்களுக்கு மாறான குணமுடையவர்கள் பசுக்கள் அல்லது ஆன்மாக்கள் எனப்படுவர்.

## பசு அல்லது உயிர்

பசு இதனை உயிர் எனவும் ஆன்மா எனவுங் கூறுவர். எண்ணிலாத உயிர்கள் உள்ளன. அவை என்றும் உள்ளவை; கடவுள் உயிர்களை உண்டாக்குவதில்லை. உடம்பைப் படைக்கிறார். அதனுள் பொறி, புலன், கரணம் இவற்றை அமைக்கின்றார். இவை கருவிகள் அல்லது தத்துவங்கள் எனப்படும்.

உள்நிலைக் கருவிகள் முப்பத்தாறு தத்துவங்கள், புறநிலைக் கருவிகள் அறுபது தத்துவங்கள். ஆக தொண்ணூற்றாறு தத்துவங்கள் உள்ளன. ஜாக்ரம், ஸ்வப்னம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் என ஐந்து அவத்தைகள் ஆன்மாவுக்கு உண்டு. ஆன்மாக்கள் விஞ்ஞானகலர். பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர், ஆணவம், கன்மம் என்ற ஒரு மலமுடையவர் விஞ்ஞானகலர். ஆணவம், கன்மம் என்ற இரு மலமுடையவர் பிரளயாகலர். ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலம் உடையவர் சகலர்.

ஆன்மா இருள் மலத்தில் அழுந்திக் கிடக்கிறது. அதனால் நல்வினை தீவினைகளை அது இயற்றுகின்றது. வினைக்கீடாக பிறப்பு இறப்புகளை அனுபவிக்கின்றது. ஆன்மா ஸதஸத்து, இயல்பாகவே உயிரில் பாசம் என்பது களிம்பு போல இருக்கிறது. ஆன்மா சார்ந்து நின்றால் இப் பாசம் அதைப் பற்றிக் கொண்டு நிற்கும். உயிர் கடவுளைச் சார்ந்துவிட்டால் பாசம் விலகிப் போகும். இந்த இரண்டு தன்மையும் உயிருக்கு இருப்பதால் அதனை ஸத ஸத்து என்பர். (ஸத் + அஸத்து = ஸதஸத்து).

## பாசம்

பாசம் ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை என ஐந்து வகைப்படும். பசுவாகிய உயிர்களைக் கட்டிநின்று கடவுளை அடையவொட்டாது தடுப்பதால் இது, தடை அல்லது பாசம் எனப்படும். சுத்தமாயை தநு, கரணம், புவனம், போகம், இவற்றை விஞ்ஞான கலருக்கும், பிரளயாகலருக்கம் கொடுக்கின்றது. (தநு = உடம்பு. கரணம் = உடம்புக்கேற்ற இந்திரியம் முதலியன. புவனம் = உலகம். போகம் = உடம்பால் நுகரப்படும் இன்பம்).

இவ்வாறே அசுத்தமாயை சகலருக்குத் தநு கரண புவன போகங்களைக் கொடுக்கிறது. திரோதாயி ஆன்மாவை இவற்றில் அழுந்திக்கிடக்கும் படிச் செய்யும். கன்மம் பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாய் நிற்கும். நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு இன்பதுன்பங்களை ஊட்டும். ஆணவமலம் யான், எனது என்னும் பற்றினைக் கொடுத்து மேலும் வினை செய்யும்படிச் செய்யும். பசு பாசத்தை விட்டு நீங்கினால் முத்திப்பேற்றினை அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்

பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்தது சேக்கிழார் சுவாமிகள் பாடிய *பெரியபுராணம்.* சைவத் தொண்டர்களின் பெருமையைக் கூறுவதால் இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் *திருத்தொண்டர் புராணம்.* பக்திச் சுவையும் பைந்தமிழ் இனிமையும் இலக்கிய நயமும் மிக்க சிறந்த ஒரு காப்பியம் இது. இந்நூல் ஏழு வகையான விருத்தப் பாவகையால் அமைந்து 4286 பாடல்களைக் கொண்டது. 'எடுக்கு மாக்கதை' என்று சேக்கிழார் இந்நூலைக் குறிப்பிடுகிறார். பெரியபுராணம் என்ற பெயர் பொருத்தமானது என்பதை இது உணர்த்துகிறது.

சுந்தரர் பெருமானின் 'தில்லைவாழ் அந்தணர்' என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை சிவனடியார்களைப் பற்றிக் கூறுகிறது. நம்பியாண்டார் நம்பிகளின் 'திருத்தொண்டர் திரு அந்தாதி' என்ற நூலும் திருத்தொண்டத்தொகையைப் பின்பற்றி எழுதப்பட்டது. இவ்விரண்டின் விரிவாக அமைந்தது பெரியபுராணம்.

பெரியபுராணம் கைலை மலையில் நடந்த ஒரு நிகழ்ச்சியுடன் தொடங்கிக் கைலை மலையில் முடிவுறுகிறது. கைலை மலை அடிவாரத்திலிருக்கும் பல முனிவர்களுக்கு ஒருமுறை ஒரு பேரொளி தோன்றியது. உபமன்யு முனிவர் அவ்வொளியினைக் கண்டு கைகூப்பி வணங்கினார். சிவனையன்றி வேறெவரையும் வணங்காத அம்முனிவர் இப்பேரொளியைக்கண்டு வணங்கியதன் காரணத்தை மற்றைய முனிவர்கள் கேட்டனர். தென்னாட்டிலிருந்து சுந்தரர் பெருமான் இப்பேரொளியாகக் கைலைக்கு வருகிறார் என்று கூறிய உபமன்யு முனிவர், அவரைப் பற்றிக் கூறுகிறார். திருப்பாற் கடலைக் கடைந்தபோது அதில் திரண்ட நஞ்சைக்கண்டு தேவர் அஞ்சி ஓட, சுந்தரர் பெருமான் தன் உள்ளங்கைகளில் அந்த நஞ்சை அடக்கிச் சிவனுக்குத் திருவமுது செய்யக் கொடுத்தவர். அவரின் கைகள் சிவனுக்குத் திருநீறு குழைத்துக் கொடுத்தவை; மலர்மாலை சாத்தியவை. அதனால் ஆலகால நஞ்சு அவரை எதுவும் செய்யவில்லை. இக்கதையைக் கேட்ட முனிவர்களின் வேண்டுகோளின் படி உபமன்யு முனிவர் சுந்தரரின் வரலாற்றையும் திருத்தொண்டத் தொகையில் கண்ட மற்றைய அடியார்களின் கதையையும் சொல்கிறார். இங்ஙனம் ஆரம்பித்து, சிவனடியார் பெருமையைக் கூறி, சுந்தரர் பெருமான் திருக்கைலையை அடையும் நிகழ்ச்சியுடன் பெரியபுராணத்தைச் சேக்கிழார் முடிக்கிறார்.

பெரியபுராணம் அறுபத்து மூன்று தனியடியார்கள் (நாயன்மார்கள்) பற்றியும் ஒன்பது தொகை அடியார் (அடியார் கூட்டம்) பற்றியும் கூறுகிறது. 'உலகெலாம்' என்று தொடங்கி 'உலகெலாம்' என்று முடிகிறது. 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தவர் தில்லையில் எழுந்தருளிய நடராசப் பெருமானே.

சுந்தரர் பெருமான் திருத்தொண்டத்தொகையிலே சிவனடியார் பற்றிக் கூறுகிறார். அதில் கூறப்பட்ட அடியார்களின் வரிசையைப் பின்பற்றிச் சேக்கிழார் சுவாமிகளும் பெரியபுராணத்திலே பாடுகிறார். பல பாடல்கள் தேவாரங்களின் விளக்கமாகவும் உள்ளன. சிவனடியார் செய்த அற்புதங்களின் காரணத்தை விளக்கும் பாடல்களும் உள்ளன. அமங்கலமான சொற்கள் தவிர்க்கப்பட்டுப் படிப்பவருக்கு இறைபக்தி ஊட்டுவன பெரியபுராணப் பாடல்கள். அடியார்களின் செயல்கள் அருளிச் செயல்கள் என்று குறிக்கப்படுகின்றன. 'வணங்கினார்' என்று கூறாமல் 'வணங்கி அருளினார்' என்பது போன்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பதிகத்தின் முடிவிலும் அப்பதிகத்திற்குரிய நாயனாரை வணங்கி, அடுத்துவரும் பதிகத்துக்குரிய நாயனாரைப் பாடுவதாகச் சேக்கிழார் கூறும் பாங்கு போற்றற்குரியது.

பெரியபுராணத்தில் திருவைந்தெழுந்து, திருநீறு ஆகியவற்றின் பெருமை பேசப்படுகிறது. தமிழகத்தின் பண்பாடும் அறநெறியும் உணர்த்தப்படுகின்றன. வாழ்க்கையின் குறிக்கோள் சிவபரம்பொருளை அடைதல் என்பது காட்டப்படுகிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மலிந்துள்ளன. சிவனடியார் குற்றமற்ற (ஆணவ மலப் பற்றற்ற) குணக்குன்று அனையவர் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அடியார் கூட்டம் 'புனிதர் பேரவை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் சைவர்களுக்குக் கிடைத்த ஒரு தெய்வீக நூல்; செந்தமிழ்த்தேன் பிலிற்றும் நல்ல கவிதைமலர். இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியை வளர்த்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் சிவனருள் பெற்று உய்யவும் சிவனடியாரின் வாழ்க்கைமூலம் வழி காட்டுவது.

ஓட்டையும் பொன்னையும் சமமாகக் கருதுவதுபோல் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கருதும் சிவனடியார்கள் இருவினையொப்பு நிலை கூடியவர்கள். அவர்கள் சிவபரம்பொருளை அன்பு மேலீட்டால் கும்பிடுதலன்றி முத்தியைக்கூட விரும்பாத பண்பாளர் என்று சேக்கிழார் கூறுவது சிந்தனைக்குரியது.

*கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.*

## வாழ்க்கையும் கீதையும்

சிக்கல்கள் இல்லாத வாழ்க்கை யாருக்கும் இருக்க முழயாது. ஆனால் அவற்றை அமைதியுடன் பார்க்கும் மனத்தின் சமநிலையும், சமாளிக்கக்கூடிய மனோதிடமும், தன்னம்பிக்கையும் ஒருவருக்கு இருக்க வேண்டும். தனி மனிதன் இவ்வாறு செயற்படாவிட்டால், அவனால் உருவாக்கப்படும் சமூகம் கெட்டுப்போகிறது. கெட்டுப்போன சமூகத்தைக் கொண்ட நாடு ஆரோக்கியமான முன்னேற்றத்தைப் பெறமுடியாது.

பிரச்சினைகள் இல்லாத தேசமே உலகத்தில் இருக்க முடியாது. அதேபோல முன்னேற்றத்தை நாடும் எந்தத் தேசத்துக்கும், பிரச்சினைகளும் அதிகமாக வளர்ந்து கொண்டே போகும். பல்வேறு சிக்கல்கள் குறுக்கிடுவதே ஒருவனுடைய செயல் நல்ல திசையில் வளர்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்று நாம் நினைக்கக்கூடிய அடையாளமாகும்.

ஒரு தீர்வு கிடைக்காதவரையில்தான் பிரச்சினைகளும் சிக்கல்களும் நமக்குச் சுமையாக இருக்கும். ஒரு நகரத்துக்குப் போய்ச் சுற்றிப் பார்க்க வேண்டிய ஒருவனுக்குப் பையில் நிறையப் பணமிருந்தால், பசி எடுப்பது ஒரு பிரச்சினையாகத் தோன்றாது. எங்கு வேண்டுமானாலும் – எதை வேண்டுமானாலும் அவனால் சாப்பிட முடியும். கையில் பணமில்லாவிட்டாலோ, எதுவும் கிடைக்காத ஓரிடத்துக்குப் போகவேண்டி நேர்ந்து விட்டாலோ, அதுவே அவனுக்குப் பெரிய பிரச்சினையாகி விடுகிறது.

அதைப்போலவே ஒருவனுக்கு உடம்பில் நோய் வந்துவிடுகிறது. அது அவனுக்கும் அவனுடைய உறவினர்களுக்கும் சிக்கல்களை உண்டுபண்ணும். ஆனால் மருத்துவம் செய்யக்கூடிய, டாக்டரோ, மருந்து கிடைக்கக்கூடிய கடையோ அருகில் இருந்தால் அது பிரச்சினையாகத் தோன்றுவதில்லை.

ஆகையால் வாழ்க்கையில் சிக்கல்கள் என்பதும், நமது முயற்சிகளில் பிரச்சினைகள் குறுக்கிடுவதும், நம்மைச் சுற்றி இருக்கும் அவற்றை நாம் எப்படிச் சமாளிப்பது என்று தெரிந்து கொள்ளாத வரையில்தான் மலைப்பாகத் தோன்றும். அந்த அறிவும் மனோதிடமும் நமக்கு வந்துவிட்டால், அப்புறம் அது நம்மைச் சுமையாக அழுத்துவதில்லை. இனிப்பான பாயசத்தின் சுவைக்குக் காரமான சட்னி துணையாக அமைவதைப்போல, ஆரோக்கியமான ஒரு முயற்சிக்கு, இந்தச் சிக்கல்கள் வலுவையும் உறுதியையும் கொடுத்துவிடுகின்றன.

பாண்டவர்களில் மிகச் சிறந்த வீரனான அர்ஜுனனுக்கு இதுபோன்ற நிலை ஏற்படுகிறது. இன்று உலகெங்கும் இளைஞர்களைத் திகைக்க வைக்கும் பிரச்சினை உணர்வு அவனுக்கும் ஏற்படுகிறது. தனது கடமையைச் செய்வதே அவனுக்கு மிகப் பெரிய காரியமாகத் தோன்றுகிறது. அந்த நிலையில் அவன் தெளிவுபெறப் பகவத்கீதை உதவுகிறது. அதே பகவத்கீதை இன்றைய இளைஞர்கள் அனைவருக்கும் எந்த நிலையிலும், எந்த இடமானாலும், எந்த நேரத்திலும் பயன்பட முடியும். இதுவே பகவத்கீதையின் தனிச்சிறப்பாகும்.

**சுவாமி சுகபோதானந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியாமல் மாறியது! விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் பழக்கத்தையே அறியாத அவனுடைய முகத்தில் அவனாலேயே தடுத்துக்கொள்ள முடியாத ஒரு வேறுபாடு தோன்றியதைக் கண்ட அன்புமணியின் உள்ளம், தணலில் விழுந்த தளிர் என வாடிவிட்டது. எப்படியும், உடனடியாக அங்கிருந்து திரும்பிவிட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான்.

"அடடே! மறந்து விட்டேன். வருகிற வழியில் நான் ஒரு நண்பரைப் பார்ப்பதாகச் சொல்லியிருந்தேன். அவர் வேறு எங்கேனும் போய் விடுவதற்குள் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். எனக்காகக் காத்திராதே! நீ உணவருந்து!" என்று சொல்லிக்கொண்டே, பதிலுக்குக் காத்திராமல் அன்புமணி அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

இன்பமணி தன் துணைவியின் முகத்தைப் பார்த்தான். அவளுக்கு, விருந்தோம்பல் பிடிக்காத தன் கணவனைப்பற்றி நன்கு தெரியும். அவள், கணவனைப் பார்த்து அடக்க உணர்வோடும், அதே நேரத்தில் அவனுக்கு அறிவில்படுமாறும் ஒரு குறளைச் சொன்னாள். அந்தக் குறள் இதோ!

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**

அதாவது அனிச்ச மலரை மோந்தால் உடனே வாடிவிடும்! அதைப் போலவே முகமலர்ச்சியின்றி விருந்தினரை வரவேற்றாலும் அவர்கள் வாடி விடுவார்கள் என்று பொருள்!

*அதிகாரம் 9; விருந்தோம்பல்; பாடல் 90*
*('குறளோவியம்' எனும் நூலிலிருந்து)*

---

நமது உடலை அன்னமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், பிராணமயகோசம், ஆனந்தமயகோசம் என்று ஐந்தாகப் பிரித்திருக்கிறார்கள். தூலமான பருவுடல் அன்னமயகோசம். காது, கண் முதலிய ஐந்தும், வாக்கு முதலிய ஐந்தும் பிராணன் முதலிய ஐந்தும், அந்தகரணமும் சேர்ந்து (பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம்) சூட்சும சரீரமாகின்றன.

இதுதான் 'நான்' என்ற பாவனையை நமக்கு ஏற்படுத்துகிறது. நான் முன்செய்ததும் தற்போது செய்து வருவதுமான எல்லாக் கருமங்களினுடைய வாசனைகளும் நிறைந்த **அவித்தை** என்பது காரணதேகமாகிய ஆனந்தமயகோசம்.

மரணகாலத்தில் இவைகளில் எதன் வாசனை முற்பட்டு நிற்கிறதோ அதற்கிணங்க அடுத்த பிறவி வந்தமைகிறது. எண்ணற்ற உதாரணங்களும், அனுபவங்களும் இதை மேற்கோள் காட்டி நம்மை உணரவைக்கின்றன. இதுவே இந்து மதத்தில் பேருண்மையான மறுபிறவிச் சித்தாந்தம்.

"மனிதன் விருப்பத்தின் வடிவமேதான். அவனது விருப்பத்திற்கிணங்க, அவனது எண்ணம் அமைகிறது. அவன் எவ்விதம் எண்ணுகிறானோ, அவ்விதம் செயலாற்றுகிறான். அவனது செய்கையைப் பொறுத்தே அவனுக்கு நலனும், கெடுதலும் வந்தமைகிறது. விருப்பத்தில் கட்டுண்ட மனம், எக் காரியத்தில் மூழ்கி இருக்கிறதோ, அக்காரியத்தை அவன் ஊழ்வினையின் வலிமையால் கட்டாயம் அடையப் பெறுகிறான்" என்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகிறது. "மனிதன் எண்ணமே வடிவானவன். இவ்வுலகில் இருக்கும்போது அவன் எவ்விதம் எண்ணுகிறானோ அவ்விதமே இங்கிருந்து போனபிறகு ஆகிறான்" என்று சாந்தோக்ய உபநிடதம் சொல்கிறது.

*சுவாமி பார்த்தசாரதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமலர்ச்சியில்லாத விருந்து

அன்புமணி, இன்பமணி, இருவரும் பிஞ்சுப் பருவத்து நண்பர்கள். அவர்கள் பிறந்த ஊரில் கல்வி பயில பள்ளியொன்று இல்லாமையால், நாள் தோறும் நாலு கல் தொலைவு நடந்துசென்று, அயலூரில் படித்துத் திரும்புவது வாடிக்கை.

இன்பமணி, செல்வம் கொழிக்கும் தந்தைக்கு ஒரே மகன். அன்புமணியும் வீட்டுக்கு ஒரே பிள்ளை; ஆனால் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன்.

ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் முடிவுற்றுத் தங்களூருக்குத் திரும்பும் போது வழியில் உள்ள சிற்றுண்டிச்சாலை சென்று முறுக்கோ, அப்பமோ தின்பது அந்த நண்பர்களின் வாடிக்கை. ஆனால் ஒரு நாளாவது அவர்கள் உண்டதற்குரிய பணத்தை இன்பமணி, கடைக்காரனுக்கு தந்ததில்லை. எல்லா நாட்களுமே அன்புமணிதான் பண்டங்களுக்குரிய பணத்தை இன்பமணிக்கும் சேர்த்துக் கொடுத்து வந்தான்.

அவர்தம் பள்ளிப்பருவமும், துள்ளி விளையாடிய நாட்களும் பறந்தோடின. வேலை வாய்ப்புத் தேடி அன்புமணி தலைநகர்ப்பக்கம் சென்று விட்டான். இன்பமணியோ தந்தை தேடிவைத்த சொத்தினைக் கொண்டு பெருந்தொழில் ஒன்றினை நடத்த நாட்டின் துறைமுகப் பட்டினத்திற்குக் குடியேறிவிட்டான்.

ஒருநாள், வெளிநாடு செல்லும் கப்பல்களில், தனது தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்களை யெல்லாம் ஏற்றி அனுப்பிவிட்டு, மகிழ்வுடன் இல்லம் திரும்பிக்கொண்டிருந்த இன்பமணி, திடீரெனத் தன் இளமைக்கால நண்பன் அன்புமணியைக் கடைத்தெருவில் சந்தித்தான். "ஏ, அப்பா! எவ்வளவு காலத்திற்கு பிறகு ஒருவரையொருவர் பார்க்கிறோம்" என்று கூறியவாறு இருவரும் தழுவிக் கொண்டனர்.

அன்புமணி, தலைநகரில் காவல்துறைத் தலைமையகத்தில் அலுவலில் சேர்ந்து கடமை யாற்றுவதாகச் சொன்னான். இன்பமணி, துறைமுகப் பட்டினத்தில் தொடங்கிய தொழிலின் காரணமாகச் செல்வச் சீமானாக விளங்குவதாக விபரித்தான். இருவரும் கடைத்தெருவின் ஓரப்பாதையில் நின்றுகொண்டே ஒருவரையொருவர் நலம் விசாரித்துக்கொண்டனர்.

ஒரு முக்கிய அலுவலின் நிமித்தம் துறைமுகப் பட்டினத்திற்கு வந்ததாகவும் கூறி, இல்லத்து முகவரியும் பெற்றுக்கொண்டு. அன்புமணி தன் பழைய நண்பனைப் பிரிந்து சென்றான். சிரிப்பு தழைத்த முகத்துடன் அன்புமணிக்கு விடைகொடுத்துவிட்டு இன்பமணி இல்லம் திரும்பினான்.

அன்றைய தொழிற்சாலைப் பணிகள் பற்றிய விசாரணைகளையெல்லாம் முடித்துவிட்டு, இனிய குரலில் இல்லத்தரசியை அழைத்து உணவு பரிமாறச் சொன்னான், இன்பமணி.

அவளும் இலைபோட்டுப் பரிமாறி, கணவனை உணவருந்த அழைத்தாள்.

அப்போது "இன்பமணீ!" என்று கூப்பிட்டுக் கொண்டே அன்புமணி உள்ளே நுழைந்தான். "வாப்பா வா!" என்றான் இன்பமணி, சற்று இழுத்தாற் போன்ற குரலில்!

"சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறேன், எனக்கும் ஒரு இலை போடச் சொல்லு!" என்று புன்னகை சிந்தப் புகன்றான் அன்புமணி!

அந்தச் சொற்கள் அன்புமணியின் நாவிலிருந்து வெளிப்பட்டவுடனே, இன்பமணியின் முகம் அவனையு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் போல வாழ்வு

திருமுருக கிருபானந்த வாரியார்

ஒருவனுடைய வாழ்வு அவனுடைய மனத்தின் நினைவு நலத்திற்குத் தக்கவாறுதான் அமையும்.

மனம் ஒரு கத்தி போன்றது. கத்தி மாம்பழம் நறுக்கவும் உதவும், பிறருடைய தலையை அறுக்கவும் உதவும். அது போல் மனம் நன்மை நினைக்கவும் ஆகும்; தீமை நினைக்கவும் ஆகும். நலந் தீங்கு இரண்டுக்கும் நமது மனமே பரம காரணம்.

மனத்தில் நெடுங்காலமாக மாசு ஏறியுளது. அந்த மாசினை நாம் அகற்ற வேண்டும் என்று முயல்வதில்லை. "ஏன், மனதில் மாசு படிந்துள்ளது?" என்ற எண்ணமே யில்லை.

பாத்திரங்களை அன்றாடம் விளக்குகின்றோம். பல் விளக்குகின்றோம், அன்றாடம் ஆடைகளைத் தோய்க்கின்றோம். கண்ணாடி முதலியவற்றைத் தினம் துடைக்கின்றோம், நமது மனத்தை மட்டும் துடைப்பதில்லை. பெரிய அறம் எது என்றால் மனத்தின் மாசினை யகற்றுதலாம். மற்ற எல்லாம் ஆரவார நீர்மையவாம்.

*மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்*

*ஆகுல நீர பிற — திருக்குறள்*

மனத்திலே தூய்மையில்லாதவர் புரியும் மாதவம் நன்கு பயன் தராது.

மாசுடைய மனத்தினர் நினைத்த கருமங்கள் ஒன்றுங் கைகூடா. மாசிலா மனத்தினர் நினைத்த கருமங்கள் தெய்வத் திருவருளால் அனைத்தும் இனிது கைகூடும். கன்மனங் கரைந்து நன்மனம் பெற்றோர் மனத்தை இறைவன் கோயிலாக்கொண்டு வீற்றிருப்பான்.

*நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்*

*— அப்பர்*

*மருவு மடியார்கள் மனதில் விளையாடு*

*மரகத மயூரப் பெருமான் காண்*

*— அருணகிரிநாதர்*

மனத்திலே கோணலும் அமைந்து விடுகின்றது; கோணல் மனம் படைத்தவர்கள் பலர். கொடிய மனத்தால் தேடிய பாவம் எண்ணிறந்தன. கோணல் மனம் படைத்தவர் நல்லவர்களையும் அந்தக் கோணல் மனத்தாலே கண்டு, அவர்கள்மீது பழி, பாவங்களைச் சுமத்திப் பேசுவார்கள்.

தூயவர்களைத் தீயவர்களாகவே பார்ப்பார்கள். கோணல் மனம் உள்ளவர்கள் நேர்வழியில் நடக்க மாட்டார்கள். கோணல் வழியில்தான் நடப்பார்கள். அவர்கள் நினைவிலே கோணல்; பேச்சிலே கோணல்; செயலிலே கோணல்; இப்படி எல்லாமே கோணலாக அமைந்திருக்கும். இவ்வளவுக்கும் மூலகாரணமான மனத்தில் கோணல் இருப்பதுவேயாகும். ஆகவே அறிஞர்கள் கோணல் மனமான இரும்பை ஞானத் தீயில் காய்ச்சி, நீதி நூலாகிய சம்மட்டியினால் அடித்து நிமிர்த்த வேண்டும்.

நாம் நமது மனத்தால் பிறரை நன்கு மதித்து அன்பு செய்தால், அவர்களும் நம்மை மதித்து அன்பு செய்வார்கள். நாம் அவர்களை மதியாதிருப்பின், அவர்களும் நம்மை மதியாது புறக்கணிப்பர்.

*யத் பாவம் தத்பவதி*

என்று வடமொழியில் கூறுவர்.

எப்படி நினைக்கின்றோமோ, அப்படி விளைகின்றது.

ஒரு நகரில் பெரிய சந்தனக் கட்டை விற்கும் வியாபாரி இருந்தான். அவன் பெரும் தனவந்தன்.

மாலை நேரத்தில் அந்நகரையாளும் மன்னவர் தமது மணித்தேரின் மீது கடை வீதி வழியே சென்று, நகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் போய் உலாவி விட்டு மறுபடியுந் தேரேறி அரண்மனை சேருவார்.

அங்ஙனம் செல்லும்போது, சந்தனக் கட்டை வியாபாரி கடையை விட்டிங்கி நின்று மன்னவரைக் கரங்கூப்பித் தொழுவார். மன்னவரும் கை குவித்துக் குடும்பிடுவார். இப்படி தினந்தோறும் நிகழும்.

ஒரு நாள் மன்னர் வழக்கம்போல் சென்றார். சந்தனக்கட்டை வியாபாரி எழுந்து நின்று வணங்கினார். மன்னவருக்கு அன்று என்னவோ அவர்மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது. பதிலுக்குக் கும்பிடவில்லை. காரணந் தெரியாத வெறுப்புணர்ச்சி, மனதில் அவரைப் பற்றி அருவருப்பு. சந்தனக்கட்டை வியாபாரியான செட்டியாரையே நினைத்துக்கொண்டு சென்றார்.

மன்னரிடம் மறுநாள் ஒரு மகான் வந்தார். அவர் திரிகால ஞானி. மனத்தில் இருப்பதனையறியும் மகிமை வாய்ந்தவர். அவரை அரசர் பெருமான் அஞ்சலி செய்து ஆசனத்தில் அமரச் செய்து, பாலுந் தேனுந் தந்து உபசரித்தார்.

"சுவாமி! ஒரு சிறு சந்தேகம். கடை வீதியில் ஒரு பிரபல சந்தனக்கட்டை வியாபாரி உள்ளார். அடியேன் அவ்வழியே போகும்பொழுது தினந்தோறும் அந்தச் செட்டியார் எழுந்து என்னைக் கைகூப்பித் தொழுவார். நானும் அவரை வணங்குவேன். நேற்று நான் போகும் போது அவர் என்னைத் தொழுதார். எனக்கு என்னவோ அவரிடம் காரணமில்லாமல் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. கும்பிடக் கை மறுத்து விட்டது. குருநாதா இதன் காரணம் அறியாது மனம் தத்தளிக்கின்றது. எல்லாந் தெரிந்த தாங்கள்தான் இதனை விளக்க வேண்டும்" என்றார்.

சாதுமகான் "வேந்தே! இந்த வினாவிற்கு மூன்று நாட்களுக்குப் பின்னர் கூறுவேன். இன்று நீர் போகும் போது உமது மனம் நினைக்கும் நிலைமையை நாளை என்னிடமும் கூறும்" என்றார். மறுநாள் காலை மறுபடியும் சாதுமகான் அரசனிடம் வந்தார். அரசன் தொழுதான். "அரசே! நேற்று கடை வீதியில் செட்டியாரைக் கண்டீரா? உன் மனநிலை எப்பயிருந்தது?" என்று சாது கேட்டார்.

"சுவாமி! அந்த ஆள்மீது நேற்றும் எனக்கு ஒரே வெறுப்புத்தான் ஏற்பட்டது. அவனைச் சுட வேண்டும் போல் தோன்றியது" என்றான் மன்னன்.

"நல்லது" என்று கூறிவிட்டுச் சாது போய்விட்டார். மூன்றாவது நாள் வந்தார். "மன்னரே! இன்று மாலை உனக்கு அவனிடம் என்ன மாதிரி மனநிலை அமைகிறதென்று பார்த்துக் கூறு; நான் நாளை வருகின்றேன்' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்று மாலை அரசன் கடை வீதி வழியே போகும் பொழுது சந்தனக்கட்டை வியாபாரி எழுந்து வழக்கம் போல் கைகூப்பித் தொழுதான். அரசரும் அன்புடன் கைகுவித்துக் கும்பிட்டார். அன்று அச்செட்டியார் மீது ஒன்றும் வெறுப்பு ஏற்படவில்லை; அவருக்கு ஆச்சரியம். மனநிலை இப்படி மாறியதற்கு என்ன காரணம் என்று விளங்கவில்லை.

அடுத்த நாள் காலை அம்மகான் வந்தார். அரசனைக் கண்டு சிரித்தார். "இறைவனே! நேற்று உன் மனம் மாறியிருக்குமே? நீ கும்பிட்டிருக்க வேண்டுமே" என்று கேட்டார்.

"ஆம் சுவாமி! இப்படி மனநிலை மாறிய காரணத்தைத் தேவரீர் கருணை செய்து கூறவேண்டும்" என்றான் அரசன்.

"வேந்தே! அதற்குரிய காரணத்தை நான் கூறுகின்றேன். கேள். அந்தச் சந்தனக்கட்டை வியாபாரியிடம் நிரம்பச் சந்தனக் கட்டைகள் இருந்தன. அவனுக்கு மூன்று நாட்களுக்கு முன் ஒரு புதிய நினைவு வந்தது.

"நம்மிடம் சந்தனக்கட்டை ஏராளமாக இருக்கின்றதே! மன்னருடைய அரண்மனையில் யாராவது இறந்து விட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள சந்தனக்கட்டை முழுவதுந் தீர்ந்து விடுமே! (அரசர்கள் இறந்தால் அவர்களுடைய சரீரத்தைச் சந்தனக் கட்டையில் தகனம் புரிவது வழக்கம்). ஆகவே, நமது மன்னரோ, மன்னருடைய தாயாரோ, மன்னருடைய மனைவியாரோ மாண்டால் நமக்கு நலம் விளையும்' என்ற எண்ணம் அவனுக்கு வந்தது. இந்த நினைவு கொண்டபடியால் அவனிடம் உனக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது.

நான் நேற்றுக் காலை அவனிடம் உள்ள சந்தனக்கட்டை முழுவதையும் விலைக்கு வாங்கிவிட்டேன். உடனே அவனுக்கு அந்தத் தீய எண்ணம் அகன்றது. அதனால் இன்று உனக்கும் அவனிடம் ஏற்பட்ட அருவருப்பு அகன்றது" என்று சாதுமகான் கூறினார்.

ஆதலால் நாம் நினைக்கின்ற தூய நினைவு, தீய நினைவு அலைகள் சென்று மீளவும் நம்பால் வந்து ஒடுங்குகின்றன.

ஒரு குளத்தின் நடுவில் ஒரு கல்லை எறிந்தால் நாலு பக்கங்களிலும் அலை புறப்பட்டு, ஒரு அலை மற்றொரு அலையையுண்டாக்கி, அந்த அலை வேறொரு அலையையுண்டாக்கி முடிவில் கரையில் பேரலையாக மோதி, மறுபடியும் அந்த அலை சிறிது சிறிதாகக் தேய்ந்து புறப்பட்ட இடத்திலே சென்று முடிவு பெறுகின்றது. அதுபோல நாம் எல்லோரும் வாழவேண்டும் என்று தூய நினைவு அலை பிறரிடம் சென்று அவர்களிடமிருந்து மீண்டும் நம்மிடம் வந்து ஒடுங்குகின்றது.

அவன் கெட வேண்டும், இவன் கெட வேண்டும் என்று எண்ணுகிற தீய நினைவு அலைகள் சென்று, மீளவும் நம்பால் வந்து நம்மைத் தாக்குகின்றன. ஆகவே, தூய நினைவால் நாம் வாழ்வோம். தீய நினைவால் நாம் வீழ்வோம். இந்த இரகசியம் வெகு பேருக்குத் தெரிவதில்லை. ஆகவே மனம் போல வாழ்வு அமைகின்றது.

நல்மனம் படைத்தவர்க்கு நல்வாழ்வும், தீயமனம் படைத்தார்க்கு அல்வாழ்வும் உண்டாகும்.

மக்கள் யாவரும் இதனை நன்கு உணர்ந்து; உலகமெல்லாம் வாழட்டும், ஊராரெல்லாம் வாழட்டும், உயிர்களெல்லாம் வாழட்டும், சராசரமெல்லாம் வாழட்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை!
மனம்போல் வாழ்வு!

## உள்ளத்தின் நிறைவு

உங்களுக்கு மிகவும் வேண்டிய ஒருவருக்காக, உங்கள் உடலில் சிறுகாயம் படுவதைக்கூட நீங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டீர்கள். ஆனால், உங்கள் உடலில் ஒரு பகுதி இரத்தம் கெட்டுப்போய் புரையோடி விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது உங்கள் உயிரைக் காப்பாற்றக் கையையோ, காலையோ எடுத்துவிட வேண்டும் என்றே டாக்டர்கள் சொன்னால், நீங்கள் தயக்கமின்றி சம்மதித்து விடுவீர்கள். உள்ளம் ஒரு நிறைவைக் காண விரும்பும்போது, உடலின் துன்பத்தை நாம் பொருட் படுத்துவதில்லை. இதுவே வாழ்க்கையில் உயர்வுபெற நாம் கடைப்பிடிக்க வேண்டிய தத்துவம். இதனால்தான் நாம் கேள்விப்படும் மகான்கள், அவதார புருஷர்களின் வாழக்கையிலும் கூட, துன்பங்களையே அதிகமாகக் காணுகிறோம். அந்த நிலையிலும் அவர்கள் நேர்மையுடன் வாழ்ந்து காட்டியதையும் அறிகிறோம்.

*சுவாமி சின்மயானந்தா*

★ *மனிதத்தன்மை பெருகுமளவு, பிரச்சனைகள் குறையும்.*

★ *பேராசையும் அகங்காரமுமே மனம் கெடுவதற்குக் காரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதைக் கட்டுப்படுத்தல் !

கடவுளை நினைத்துத் தியானிக்கும்போது மனத்தில் பக்தி மட்டும் இருந்தால் போதாது. அன்பு மயமான உணர்வும் பரவி இருக்க வேண்டும். அன்பு மயமான உள்ளத்துக்கு ஒரு தாய் தனது குழந்தையிடம் செலுத்தும் அன்பைக் காட்டிலும் சிறந்த வேறொன்றை உதாரணமாகக் கூற முடியாது. ஆகையால் அதே போன்ற மனபாங்குடன் நாம் மனத்தைக் கட்டுப்படுத்த முற்பட வேண்டும்.

ஒரு தாய் பிடிவாதம் செய்யும் தனது குழந்தையைத் துறந்துவிடுவதில்லை. ஆனால் எப்படியாவது அதனைத் தன் வழிக்குக் கொண்டுவர முயலுகிறாள். அதேபோல நாமும் மனத்தை வெறுத்து ஒதுக்க முடியாது. எப்படியாவது நம்முடைய வழிக்குக் கொண்டு வந்தே ஆகவேண்டும். இந்த அப்பியாசத்தை எப்படிச் செய்வது என்று பார்ப்போம்...

சில சமயம் தாய் தனது குழந்தையை விளையாட்டிலிருந்து திருப்பிப் படிக்க வைப்பதற்காக அழைக்கும்போது, "நீ இப்போது உள்ளே வந்தால் உனக்குப் பிடித்த ஒன்றைக் கொடுப்பேன். இரண்டு நாட்களாகவே அதைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் மறந்து போய் விட்டது. இப்போது எடுத்து வைத்திருக்கிறேன். உடனே வா ! நான் உனக்குக் கொடுக்கிறேன் !" என்று ஆசை காட்டி உள்ளே அழைக்கிறாள். குழந்தையும் உள்ளே வந்துவிடுகிறது ! அதே போல நாமும் தியானத்தின் மூலம் மனத்துக்குக் கிடைக்கக்கூடிய அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை மெதுவாக எடுத்துக்கூறி மனத்தை வழிப்படுத்த முயலலாம். அப்படிச் சாதனை புரிந்த பெரியோர்களை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். இதனால் மனம் வழிப்பட்டு வரக்கூடும்.

சில சமயம் தாய் தனது குழந்தையை மாற்று ஆசைகள் சொல்லி வழிப்படுத்துவதுண்டு. "இங்கே பார் ! என்னோடு வந்து இப்போது ஒரு மணி நேரம் படித்தாயானால், சாயங்காலம் உன்னைப் பார்க்கிற்கு விளையாட அழைத்து கொண்டு போவேன். அங்கே நீ சறுக்கு மரத்தில் விளையாடலாம்" என்று தாய் ஆசைகாட்டி குழந்தையை வழிப்படுத்த முயலலாம். அதேபோல நாமும், நம்முடைய மனத்திடம், "தியானம் முடிந்த பிறகு உனக்குச் சுதந்திரம் கொடுக்கிறேன். உன் பிரியப்படி அரைமணி நேரம் என்ன வேண்டுமானாலும் நினைக்கலாம். நான் தடுக்கமாட்டேன்" என்று சொல்லி ஆசை காட்டலாம். கொஞ்சம் தயங்கி விட்டு, மனம் வழிப்பட்டு வரும். இதை முயன்று பாருங்கள்.

வேறு சில சமயங்களில் தாய் குழந்தைக்குப் புத்தி புகட்டக் கடுமையான தண்டனை கொடுக்கவும் முற்படுவதுண்டு. எப்போதாவது ஒரு முறை குழந்தையை வெளியில் விடாமல் அடைத்து வைத்துவிடலாம். அதை அனுபவித்த பயத்தில் அடுத்த தடவை குழந்தை தாய் கூப்பிடவுடனேயே உள்ளே வந்துவிடும். அதேபோல மனத்தையும் நாம் கண்டித்து வசப்படுத்தலாம். மனத்துக்கு எளிதாகப் புரியக் கூடிய ஒரே கண்டிப்பான வழி பட்டினி போட்டு, எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது தான். தூக்கம் விழித்திருப்பது, உபவாசம் இருப்பது போன்றவற்றுக்கு நாம் நம்மை உட்படுத்தத் தயார் செய்து கொண்டால் மனம் கட்டுப்பட்டு வந்துவிடும்.

சில சமயம் குழந்தைகளைக் கொஞ்ச நேரம் அதன் போக்கில் விட்டுவிட்டு, தூர இருந்து கவனித்துக் கொண்டிருந்தால், அது கொஞ்சம் கொஞ்சமாக வழிப்பட்டு வந்து உட்கார்ந்து கொள்ளும். அதேபோல மனத்தைக் கட்டாயமாகக் கட்டிப்போட முயலாமல், உங்களையே நீங்கள் ஒரு சாட்சியாக வைத்துக்கொண்டு அது அலைவதைக் கவனியுங்கள். கொஞ்ச நேரத்தில் அது சாந்தமடைந்து அமைதியாகத் திரும்பித் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள வந்துவிடும். நம்முடைய சாஸ்திரங்களில் இதற்குச் 'சாட்சி பாவம்' என்று ஒரு பெயரும் உண்டு.

எப்படியாவது அடைய வேண்டும் என்ற விடாமுயற்சியுடன், மனத்தைக் கட்டுப்படுத்த சிரத்தையுடன் முயன்றால், அது நிச்சயமாக வழிக்கு வந்தே தீரும்.

சுவாமி சின்மயானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் நெறி விழா - 1999

## 1998 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த இந்துசமய நூல்களுக்குப் பரிசளித்தல்

1998 ஜனவரி 1ம் திகதி முதல் 1998 டிசம்பர் 31ம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் வெளியிடப்பட்டனவும், இந்துசமயம் பற்றியனவுமான நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுத் தகுதி வாய்ந்த நூல்களின் ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பரிசுத் தேர்வில் பங்கு கொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பத்தையும், நூல்களையும் நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.

விண்ணப்பங்களும் நூல்களும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதியாகும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

*98, வோட் பிளேஸ்,*
*கொழும்பு 07*

சி. தில்லைநடராஜா,
*பணிப்பாளர்,*
*இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.*

★★★★ ★★★★ ★★★★ ★★★★ ★★★★ ★★★★ ★★★★

அருள்நெறி விழா - 1999

## இந்துசமய நூற்பரிசுத் தேர்வு - (1998)
## மாதிரி விண்ணப்பப் படிவம்

01. நூலின் பெயர்:-
02. நூலாசிரியரின் பெயர்:-
03. தற்போதைய முகவரி:-
04. நிரந்தர முவரி:-
05. தொலைபேசி இலக்கம் (இருப்பின்):-
06. நூல் பதிப்பிக்கப்பட்ட நாடும் அச்சக முகவரியும்:-
07. நூல் வெளியிட்ட வருடம்:- மாதம்:- திகதி:-
08. நூலின் விலை:-

இந்நூல் முதற்பதிப்பு என்பதனையும் இந்நூலின் பகுதிகள் ஏற்கனவே வேறு நூல்களில் இடம்பெறவில்லை என்பதனையும், நூல் முழுமையும் தனி ஒருவராகிய என்னால் எழுதப்பட்டது என்பதனையும் தெரிவிப்பதுடன்:

மேலே தரப்பட்டுள்ள அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவையென்றும் பரிசுத்தேர்வு விதிகளுக்கு உடன்படுகின்றேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:-..................................

..........................................
விண்ணப்பதாரர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுரம்
Kopuram

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள்
திணைக்களத் தகவல் வெளியீடு

*News Magazine of the Department of*
*Hindu Religious & Cultural Affairs*

# O. S. S.

To: ..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: Unie Arts (Pvt) Ltd.